Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஐப்பசி 30 ஞாயிற்றுக்கிழமை (16.11.2014) பக்கங்கள் 20 ஓசை – 047

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

## ஆசிரியரின் தாக்குதலில் மயக்கமடைந்தார் மாணவி

வரணியிலுள்ள பாடசாலை ஒன்றில் ஆசிரியரின் தாக்குதலில் மயக்கமடைந்த மாணவி ஒருவர் நேற்று மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

தரம் 9இில் கல்விகற்கும் பிரஸ்தாப மாணவியை காலை 10 மணியளவில் குறித்த ஆசிரியர் கரும்பலகையில் எழுதுவதற்காக அழைத்தபோது மாணவி தவறாக எழுதிய காரணத்திற்காக மிருகத்தனமாகத் தாக்கியுள்ளார்.

இதனால் மயக்கமடைந்த மாணவி நேற்று முன்தினம் அம்புலன்ஸ் மூலம் வரணி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வீட்டுக்கு செல்ல அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று மாணவி மீண்டும் மயக்கமடைந்துள்ளார். இதனையடுத்து அவர் மந்திகை ஆதாரவைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளார். (150)

## வினைத்திறனற்ற வடமாகாணசபை ஆதாரத்துடன் நிரூபிக்கத்தயார்

### சுரேஷிற்குசந்திரகுமார் எம்.பி. பதிலடி

வடக்கு மாகாண சபை உருவாக்கப்பட்டு 14 மாதங்களில் அது என்ன சாதித்தது என்பதனை விரிவாக ஆராய்ந்தால் வடக்கு மாகாண சபை வினைத்திறனற்ற சபை என்பதை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரும் ஏற்றுக்கொள்வார்கள். நடைமுறைக்குச் சாத்தியமில்லாத 160 அரசியல் பிரேரணைகளை தவிர மக்களுக்கு நன்மை பயக்கும் எந்த விடயங்களையும் மாகாணசபை மேற்கொள்ளவில்லை.

என நாடாளுமன்ற உறுப்பினரும்,நாடாளுமன்றக் குழுக்களின் பிரதிதவிசாளருமான முருகேசு சந்திரகுமார் நேற்றையதினம் இடம் பெற்ற உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரி வித்துள்ளார். அவர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது

பெரும்பான்மை ஆதரவுடன் உருவாக்கப்பட்ட வடக்கு மகாண சபை கடந்த 14 மாதங்களில் என்ன சாதித்தது? கிட்டத்தட்ட 160 நடைமுறைக்குச் சாத்தியமில்லாத அரசியல் தீர்மானங்களைப் பிரேரணை

(19) ஆம் பக்கம் பார்க்க

# மக்களின் நிலங்கள் மக்களுக்கே; வலியுறுத்தி ஜனாதிபதியுடன் பேச்சு

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு




மக்களின் நிலங்கள் மக்களுக்கே உரித்தானவை என்பதை வலியுறுத்தி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் தொடர்ச்சியான கலந்துரையாடல்களை முன்னெடுத்து வருவதாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மாவிட்டபுரம் கிராமத்தில் நேற்றையதினம் 'தேசத்தின் நிழல்' தேசிய மரநடுகைத் திட்டத்தை மாவட்ட மட்டத்தில் ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

தேசத்தை கட்டியெழுப்பும் நோக்கில் இம்மரநடுகை திட்

(19) ஆம் பக்கம் பார்க்க

## யாழ். – கொழும்பு ரயில்சேவை 5 மணிநேர பயணத்திட்டம்

யாழ்ப்பாணத்திற்கும், கொழும்பு கோட்டைக்கும் இடையிலான ரயில் சேவைக்கான நேரத்தை 5 மணித்தியாலங்களுள் வரையறுக்கும் திட்டங்கள் குறித்து பரிசீலிக்கப்படுவதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்பட்ட ஒரு மாத காலப்பகுதியினுள் 100

(19) ஆம் பக்கம் பார்க்க

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வீதிப்பாதுகாப்பு வினாக்களும்

### ஆராய்ந்து வருகிறது கல்வி அமைச்சு

(கொழும்பு)

எதிர்வரும் காலங்களில் நடைபெறவுள்ள தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாளில் வீதிப்பாதுகாப்பு குறித்த வினாத்தளையும் உள்ளடக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வீதி பாதுகாப்பு தொடர்பான சட்டங்களை பாடசாலை கல்வி விதானத்திற்குள் இணைத்துக் கொள்வது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் வீதி பாதுகாப்புக்கான தேசிய சபை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கல்வி அமைச்சருடன் நடைபெற்ற பேச்சுவார்த்தை வெற்றியளித்துள்ள

(19) ஆம் பக்கம் பார்க்க

## ஐயா விக்கினேஸ்வரன் யார்? இவ்வளவு காலமும் எங்கிருந்தார்

### கேட்கிறார் சீமான்

ஐயா விக்னேஸ்வரன் யார்? இவ்வளவு காலமும் அவர் எங்கிருந்தார்? என இயக்குநர் சீமான் இந்தியத் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் கேள்வியெழுப்பியுள்ளார்.

அந்த நேர்காணலில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது, இலங்கையில் ஈழப் போராட்டம் எத்தனை காலமாக இடம்பெற்று வருகின்றது என ஐயா விக்னேஸ்வரனுக்கு தெரியுமா? விக்னேஸ்வரன் இந்தியாவுக்கு வந்திருந்த போது இந்திய மக்கள் செய்யும் நடவடிக்கைகள் காரணமாக தங்களுக்கு நெருக்கடி வந்துள்ளதாக தெரிவித்திருக்கும் கருத்து வேதனை அளிக்கின்றது.

(19) ஆம் பக்கம் பார்க்க

## புலிகளுக்கு நிதியுதவி அளித்த நோர்வே மீது விசாரணை வேண்டும்

### ஜனாதிபதி கோரிக்கை



நோர்வேயின் முன்னாள் அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு நிதி வழங்கியமை குறித்து விசாரணைகள் இடம்பெறவேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார். குருநாகலயில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது நோர்வேயின் முன்னைய அரசாங்கம் விடுதலைப்

(19) ஆம் பக்கம் பார்க்க

## உள்ளூராட்சி சபைகளின் பிரதிநிதிகளுக்கு சம்பள உயர்வு

உள்ளூராட்சி சபைகளின் பிரதிநிதிகளுக்கு வழங்கும் சம்பளத்தை அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் உரையாற்றிய அமைச்சர் ஏ.எல்.ஏ.எம். அதா

(19) ஆம் பக்கம் பார்க்க







20,000/= - 38,000/= க்கும் மேற்பட்ட சம்பளத்துக்கு நிரந்தரமான தொழிற்சாலைகளான ஜேம், பிஸ்கட், சொக்லேட், ஐஸ்கிறீம், கிளவுஸ், சிமெந்து, சீட், டயர் ஆகிய நூர் உற்பத்திக்கு பொருட்கள் பெக்கிங பழுதுபார்த்தல், ஸ்டோர்ஸ் ஆகிய பிரிவுக்கு 18 - 55 வயதான ஆண், பெண் தேவை. சாப்பாடு, பாதுகாப பான தங்குமிட வசதி உண்டு. சிங்களம் கட்டாயம் இல்லை. தம்பதிகள், நண்பர்கள் ஒரே இடத்தில் குழுக்களாக வருகின்ற தினமே சேர்த்துக்கொள்ளப்படுவர். (0766398366) (C/3600)

# தேசிய மரநடுகைத் திட்டத்தின் யாழ். மாவட்ட நிகழ்வு மாவிட்டபுரத்தில்

## - ஆரம்பித்து வைத்தார் அமைச்சர் டக்ளஸ் -



(யாழ்ப்பாணம்)

தேசத்தின் நிழல் தேசிய மரநடுகைத் திட்டத்தின் யாழ்ப்பாண மாவட்டத்திற்கான நிகழ்வை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சுபநேரத்தில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மாவிட்டபுரம் கிராமத்தில் மேற்படி நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

ஆரம்ப நிகழ்வுகளைத் தொடர்ந்து தச்சன்காடு கிராமத்தில் தேசத்தின் நிழல் தேசிய மரநடுகைத் திட்டத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பயன்தரு மரக்கன்று ஒன்றினை நடுகை செய்ததன் ஊடாக உத்தியோகபூர்வமாக சுபநேரத்தில் ஆரம்பித்து வைத்தார்.

ஏனைய அதிதிகள் தமக்கென ஒழுங்கு செய்யப்பட்ட பகுதிகளில் மரக்கன்றுகளை நாட்டி வைத்தனர்.

"பசுமைநிறைந்த நாடு ஒளிமயமான எதிர்காலம்" என்ற மகுடவாக்கியத்திற்கு அமைவாகவும் தேசிய மரநடுகை நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக நாட்டின் வளப் பயிரினை அதிகரிப்பதற்கான இலக்கினை வெற்றி கொள்வோம் என்ற நோக்கில் இம்மர நடுகைத் திட்டம் நேற்றைய தினம் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிறந்த நாளையொட்டியும் பதவியேற்பினை நினைவு கூருமுகமாக வருடம் தோறும் இத் தேசிய மரநடுகைத் திட்டம் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மாவிட்டபுரம் கிராமத்தில் இதற்கென 66 பரப்பு காணி ஒதுக்கீடு செய்யப்பட்டு பயன்தரு மரக்கன்றுகள் நாட்டப்படுகின்றன.

இதன்போது மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி மோகனேஸ்வரன், மாவட்ட கமநல அபிவிருத்தி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன், வாழ்வின் எழுச்சி மாவட்ட பணிப்பாளர் மகேஸ்வரன், தெல்லிப்பளை பிரதேச செயலர் சிறிமோகனன், அமைச்சரின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் குகேந்திரன், வலி. வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சுகிர்தன், பிரதேச செயலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

மாவட்ட மக்களினதும், இயற்கை சமநிலையை பாதுகாக்கும் பொருட்டு ஏற்பாடு செய்யப்பட்ட இச் சிறப்பு நிகழ்வில் கலந்து கொள்ளும் பொருட்டு வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதிலும் நிகழ்வில் அவர் பங்கெடுக்கவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.


## சிறு விளம்பரம்


**டயானா பிளாஸ்ரிக் றீசைக்கிள் (மீள்சுழற்சி)**

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.108, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
(இலுப்பையடிச் சந்தி
அருகாமை)
021 222 8680,
077 592 5088.

(C/3589)


# நவாலியூர் கவிராயரின் "பூமணி" வெளியீடு இன்று




(யாழ்ப்பாணம்)

நவாலியூர் கவிராயரின் 'பூமணி' சிறுவர் கவிதைகள் நூல் வெளியீடு இன்று பி.ப. 3.00 மணிக்கு நல்லூர், நாவலர் கலாசார மண்டபத்தில் யாழ். வண்ணைக் கலைவாணர் நாடக மன்ற ஸ்தாபகர் கலாபூஷணம் இராசையா பீதாம்பரம் (பற்குணம்) தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலரும், கலாசார பேரவைத் தலைவருமான பா.செந்தில்நந்தனனும், சிறப்பு விருந்தினராக குருநகர் நாட்டுக்கூத்து மன்றத் தலைவர் கலைமாமணி கிறகரி கிறிஸ்தோபரும், கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றிய உப தலைவர் கிருஷ்ணர் இரத்தினராஜாவும் கலந்துகொள்வர்.

முதல் பிரதியை சட்டத்தரணி தேவராசா ரெங்கன் பெற்றுக்கொள்வார். நூல் ஆய்வுரைகளை பருத்தித்துறை பிரதேச செயலர் கவிஞர் த.ஜெயசீலனும், பிரபல நொத்தாரிஸ் கவிஞர் எஸ்.ஜி.கணேசவேலும் நிகழ்த்துவர்.

வெளியீட்டுரையை 'தாயகம்' சஞ்சிகை பிரதம ஆசிரியர் க. தணிகாசலம் ஆற்றுவார். வரவேற்புரையை நல்லூர் கலாசார உத்தியோகத்தர் திருமதி கு.ரஜனியும், ஏற்புரையை நூலாசிரியரும், நன்றியுரையை யாழ். இலக்கியப் பேரவை செயலாளர் சி.சிவதாசனும் செய்வர். அனைவரையும் வருகை தருமாறு விழாக் குழுவினர் அன்போடு அழைத்துள்ளனர். (68)

# ஆளுநர் செயலகத்தின் ஏற்பாட்டில் மூத்த பிரஜைகளுக்கு உதவிகள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆளுநரின் பணிப் பின்பேரில் ஆளுநர் செயலகத்தால் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் மூத்த பிரஜைகளுக்கான அன்பளிப்புப் பொருட்கள் வழங்கும் நிகழ்வுடன், கலை நிகழ்வு, ஆன்மீக சொற்பொழிவு மற்றும் தியான நிகழ்வு என்பன நடத்தப்படவுள்ளன.

பங்குபற்றும் மூத்த பிரஜைகளுக்கு மதிய உணவிற்குப் பின்னர் தொற்றாநோய் தடுப்பு சிகிச்சை முகாம் அதே மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் கண், காது, தொண்டை, இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோய்களுக்கான சிகிச்சைகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

ஆளுநரின் மூத்த பிரஜைகளின் கழக உறுப்பினர்களுக்காக கடந்த முதலாம் திகதி தெல்லிப்பளை ஸ்ரீபாஸ்கரன் மண்டபத்தில் நடத்தப்பட்ட தொற்றாநோய் சிகிச்சை முகாமில் பங்குபற்றி வைத்தியர்களால் சிபார்சு செய்யப்பட்டவர்களுக்கு சக்கர நாற்காலி, ஊன்றுகோல்கள், மூக்குக் கண்ணாடிகள் வழங்குவதுடன், பழமரக்கன்றுகள், போசனைப் பொருட்கள் மற்றும் ஏனைய அத்தியாவசிய பொருட்களும் வழங்கப்படவுள்ளன.

யாழ். மாவட்ட பிரதேச செயலக பிரிவுகளுக்குட்பட்ட மூத்தோர் 600 பேர்வரை இதில் பங்குபற்றவுள்ளனர்.

மூத்த பிரஜைகளின் நலன் வேண்டி மதகுருமார்களின் ஆசிகளும் அன்றைய தினம் நடைபெறவுள்ளன.

# மேலும் 6 நிறுவனங்களுக்கு ஐஸ்கிறீம் உற்பத்திக்கு அனுமதி

## சுகாதாரத் திணைக்களம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இயங்கி வந்து மூடப்பட்டிருந்த 59 ஐஸ்கிறீம், யூஸ் உற்பத்தி நிலையங்களில் 32 நிலையங்களுக்கு கடந்த வாரம் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. நேற்று முன்தினம் தமது அடிப்படை சுகாதார திருத்தங்களை மேற்கொண்ட மேலும் 6 நிலையங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

எனவே தற்போது மூடப்பட்டிருந்த 59 நிலையங்களில் 38 நிறுவனங்களுக்கு இன்றுவரை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பல நிலையங்கள் தமது அடிப்படைத் திருத்த வேலைகளை அடுத்த வாரமளவில் பூர்த்தி செய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவற்றிற்கும் அடுத்த வாரமளவில் அனுமதி வழங்கப்படும். இவற்றில் சில நிலையங்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அந் நிலையங்கள் தமது திருத்த வேலைகளை பூர்த்திசெய்தபின் நீதிமன்றின் அனுமதியுடன் மீள இயங்குவதற்கு அனுமதி வழங்கப்படும்.

ஏனைய ஐஸ்கிறீம், யூஸ் உற்பத்தி நிலையங்களும் தத்தமது பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு அவர்களின் ஆலோசனைப்படி உடனடியாக செய்ய வேண்டிய அவசர திருத்த வேலைகளை பூர்த்தி செய்தால் அவற்றை மீள இயங்குவதற்கு அனுமதிதர தாம் தயாராக இருப்பதாக வடமாகாண சுகாதாரத் திணைக்களத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

# 14 பவுண் நகை புங்குடுதீவில் கொள்ளை

(புங்குடுதீவு)

புங்குடுதீவு 7ஆம் வட்டாரப் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து, 14 பவுண் நகைகள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில், வீட்டின் உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் முறைப்பாடு செய்துள்ளார் என்று ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டில் உள்ளவர்கள் தூங்கிக்கொண்டிருந்த சமயம் கூரைவழியாக உள் நுழைந்த திருடர்கள், நகைகள் வைக்கப்பட்டிருந்த அறையினுள் கயிறு கட்டி இறங்கி பெட்டியில் வைக்கப்பட்டிருந்த 14 பவுண் நகைகளை திருடிச் சென்றுள்ளனர். சம்பவம் தொடர்பான விரிவான விசாரணைகளை, குற்றத்தடுப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

# கடனை திருப்பிக் கேட்ட கடை ஊழியர் தாக்கப்பட்டார்

கடனைத் திருப்பிக் கேட்ட கடை ஊழியர் தாக்கப்பட்டு கடும்காயங்களுக்கு உள்ளான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் நேற்று சாவகச்சேரியில் நடைபெற்றது.

சம்பவம் பற்றி தெரியவருவதாவது, சாவகச்சேரியில் அமைந்துள்ள பிரபல மின்சாரபொருட்கள் மாபிள் விற்பனை நிலையத்தில் கடனுக்கு பொருட்களைப் பெற்று திருப்பிக்கொடுக்க பிந்தியதால் கடை உரிமையாளரின் உத்தரவுக்கிணங்க மேற்படி கடை ஊழியர் கடன் கொடுக்க வேண்டியவர்களிடம் கடன் அறவீடு செய்ய முற்பட்டபோதே மேற்படி சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இதுபற்றி கடை உரிமையாளர் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து சாவகச்சேரி பொலிஸார் சம்பந்தப்பட்ட இருவரைக் கைதுசெய்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (11)

# மேலும் மூவருக்கு டெங்கு

டெங்கு நோய்த்தாக்கத்திற்குள்ளாகிய மூவர் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து ஒருவரும், கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து இருவருமாக மூவர் இவ்வாறு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் இந்த மாதம் நேற்று வரை இவ்வாறுடெங்கு நோய்த்தாக்கம் காரணமாக 57 பேர் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். (பா)


## கைகொடுக்கும் நண்பர்களுக்கு கைகொடுப்பீர்களா?

தற்கொலைச் செய்திகள் உங்களை வருத்துகின்றனவா?

முன்பின் தெரியாதோருக்கும் உதவும் புனிதமான பணிக்கு நீங்கள் தயாரா?

வடபகுதியில் நிகழும் தற்கொலைகளின் எண்ணிக்கையை குறைப்பதை ஒரே நோக்காகக் கொண்டு உற்சாகத்தோடும் அர்ப்பணிப்போடும் செயற்படும் அமைப்பே கைகொடுக்கும் நண்பர்கள். வாழ்க்கையில் பல்வேறுபட்ட பிரச்சினைகளால் மனம் பாதிக்கப்படுவோருக்கு எமது தன்னார்வத் தொண்டர்கள் நேரிலும், தொலைபேசி மூலமும் உணர்வு ரீதியான ஆதரவை வழங்குகின்றனர். தினசரி காலை 9 மணி முதல் 1 மணி வரை 104, 4 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் எமது நிலையம் இயங்குகின்றது. எம்முடன் ஒரு தொண்டராக இணைந்து கொள்ள உங்களுக்கு விருப்பமா? வாரத்தில் ஒரு நாள் மட்டும். நான்கு மணித்தியாலங்கள் சம்பளம் எதுவுமின்றி பணியாற்ற வேண்டும். ஏற்ற பயிற்சி வழங்கப்படும். மேலதிக விபரங்களுக்கு உடனே அழையுங்கள்.

**021 2228117/077 8969155**

கைகொடுக்கும் நண்பர்கள் (Sri Lanka Sumithrayo, Jaffna)

(R/374)

# ஏழிசையாய் இசைப்பயனாய் நூல் மாணவர்களுக்கு கலைப்பொக்கிஷம்

## யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் தெரிவிப்பு



(யாழ். நிருபர்)

எமது பாரம்பரிய கலை கலாசார பண்பாடுகள் சீரழிவதற்கு தொலைக்காட்சியே காரணமாக இருக்கிறது. இளைய தலைமுறையினரைத் தொலைக்காட்சி மாயையில் இருந்து விடுவிப்பதற்கு ஏழிசையாய் இசைப் பயனாய் போன்ற நூல்கள் தொடர்ந்து வெளிவரவேண்டும்.

இவ்வாறு கொழும்பு சிவத் திருமன்ற செயலாளர் சொர்ணலிங்கத்தின் ஏழிசையாய் இசைப் பயனாய் நூல் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் குறிப்பிட்டார்.

யாழ். பல்கழைலக்கழக நூலக கேட்போர் கூடத்தில் பௌதிகவியல் பேராசிரியர் க. கந்தசாமி தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இந்நிகழ்வில் துணைவேந்தர் தொடர்ந்து பேசுகையில்,

இன்றைய இளைய தலைமுறையினரிடையே வாசிப்புப் பழக்கம் அருகி வருவதற்கு காரணம் அவர்கள் நாள் முழுவதும் தொலைக்காட்சியில் மூழ்கிக் கிடப்பதேயாகும். தொலைக்காட்சி மாயையில் இருந்து இன்றைய இளைய தலைமுறையினரை விடுவிப்பதற்கு இது போன்ற நல்ல நூல்கள் தொடர்ந்து வெளிவர வேண்டும்.

தமிழர் தம் நாகரீகத்தின் உன்னத கோலங்களில் ஒன்றான இசைக்கலை பற்றியும் சைவசித்தாந்தம் பற்றியும் ஆய்வினை மேற்கொள்கின்ற மாணவர்களுக்கு இந்நூல் ஒரு வரப்பிரசாதமாகும்.

இந்நூலில் இசைக்கலை சைவசித்தாந்த நோக்கில் மிகவும் விரிந்த நிலையில் விளக்கப்படுகிறது. பாடல் மரபுகளும், வாத்தியக் கருவிகளும் வர்ணிக்கப்படுகின்றன. பெருமளவிலான இசைவாணர்களைப் பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன. இசைத் துறையில் மேதைகளாக விளங்கிய ஈழ நாட்டு இசை விற்பன்னர்கள் பலரையும் பற்றிய விபரங்கள் அடங்கியுள்ளமை இந்நூலின் ஒரு சிறப்பம்சமாகும் என்றார். (10)

# 60 வயதிற்கு மேற்பட்ட கலைஞர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச செயலகத்துக்குட்பட்ட 60 வயதுக்கு மேற்பட்ட கலைஞர்கள் அவரவர் துறைகள் சார்பாகத் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு "யாழ். இரத்தினா" விருது வழங்குவதெனவும், வளர்ந்து வரும் இளங்கலைஞர்களை ஊக்குவிக்கும் முகமாக அவர்களைக் கௌரவிப்பதெனவும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் விசேட கூட்டம் அண்மையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பேரவையின் தலைவர் திருமதி.சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் நடைபெற்ற போதே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இசை, கலை, இலக்கியத் துறை சார்ந்தவர்கள் தற்போதும் தமது துறையில் ஈடுபட்டிருக்கிறார்களா? எனக் கவனம் செலுத்திய பின்னர் குறித்த விருதை வழங்கிக் கௌரவிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் கலாசாரப் பேரவையின் இவ் வருடத்துக்கான கலாசார விழாவை எதிர்வரும் டிசம்பர் மாதம் 07 ஆம் திகதி நடாத்துவதெனவும் முதல் தடவையாக இவ்வருடம் சிறப்பு மலர் வெளியீடு செய்வதெனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (48)

# போட்டியில் வெற்றியீட்டியோருக்கு பரிசில் வழங்கும் நிகழ்வு

(நல்லூர்)

நல்லூர் பிரதேச செயலகத்தில் சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு வாழ்வெழுச்சி சமுதாய வங்கி சங்கத்தினால் பொது அறிவுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசு வழங்கும் நிகழ்வு பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இதில் யாழ். மாவட்ட செயலகப் பணிப்பாளர் மகேஸ்வரன் பிரதிப் பணிப்பாளர் சுரேந்திரநாதன், நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பி.யின் பிரதேச அமைப்பாளருமான அம்பலம் இரவீந்திரதாசன், வாழ்வின் எழுச்சி முகாமையாளர்கள், உத்தியோகத்தர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயத்துக்கு சுற்றுமதில் அமைக்க நிதி ஒதுக்கீடு

(ஆவரங்கால்)

ஆவரங்கால் புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயத்திற்கு வெளிப்புற பாதுகாப்புச் சுற்றுமதில் அமைப்பதற்கென ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி,டீ.பி,) கோப்பாய் பிரதேச அமைப்பாளர் இ.ஜங்கரனின் முயற்சியினால் வருடாந்த வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் ஒரு இலட்சம் ரூபாவும் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் ஒரு இலட்சம் ரூபாவுமாக இரண்டு இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இப்பாடசாலைக்கு சுற்றுமதில் அமைப்பதற்கு நிதி ஒதுக்கிடு வழங்குமாறு பாடசாலைச் சமூகத்தினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்த நிலையில் இத்தகைய நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றுள்ளது. மேலும் இத்திட்டத்தினை ஒரு மாதகாலத்திற்குள் நடைமுறைப்படுத்தி முடிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் இது தொடர்பாக நடைபெற்ற அறிவுறுத்தற் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (03)

# இவர்களை நம்பிய மக்கள் கதியோ அதோ கதி!




பாராளுமன்றத்தில் வரவுசெலவுத்திட்ட விவாதம் நடந்து கொண்டிருக்கிறது.

அரசாங்கம் புதிய திட்டங்களை அறிவித்து, அதைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறது.

இந்தப் புதிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டால் அடுத்த சில ஆண்டுகளில் மிகப்பெரிய வளர்ச்சியை நாடு அடைந்து விடும் என்று அரசாங்கத்தரப்பினர் சொல்கிறார்கள்.

இதற்கு அவர்கள் சொல்லுகின்ற – ஆதாரப்படுத்துகின்ற விடயம்,

1. இந்த அரசாங்கம் போரை முடிவுக்குக் கொண்டு வந்திருக்கிறது.
2. போருக்குப் பிறகு நாடு முழுவதிலும் உட்கட்டுமானங்களை மிகத் தரமாக கட்டியெழுப்பி வருகிறது.
3. வடக்குக் கிழக்குப் பகுதிகள் உட்பட நாடுமுழுவதையும் ஒரே வலையமைப்பில் தொடர்பாடல், போக்குவரத்து, மின்சாரம் உள்ளிட்ட அனைத்து வகையிலும் முழுமையான ஒருங்கிணைந்த அபிவிருத்தியின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.
4. பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் உற்பத்திகளுக்கு முழுமையான கவனம் செலுத்தப்பட்டுள்ளது.
5. ஒவ்வொரு குடும்பத்துக்கும் வீடு. அனைவருக்கும் மின்சாரம். சகலருக்குமான சுகாதார வாழ்க்கை

எனப்பலவற்றை வெற்றிகரமாகச் செய்துள்ள அரசாங்கம் அடுத்து வரவுள்ள ஆண்டுகளில் நாட்டில் முழுமையான அமைதியையும் பொருளாதார சுபீட்சத்தையும் மேம்பாடான நல்வாழ்க்கையையும் உண்டாக்கும் என்று உறுதியளிக்கின்றனர்.

அப்படி அமையும்போது 2020 ஆம் ஆண்டளவில் ஆசியாவின் அதிசயமாக இலங்கை இருக்கும் என்றும் கூறுகிறார்கள்.

1960 களில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த சிங்கப்பூரின் பிரதமர் லீ குவான் யூ இலங்கையைப் பார்த்துவிட்டு சிங்கப்பூரை இலங்கையைப்போல ஆக்கவேண்டும் என்று சொல்லியிருந்தார்.

அன்று இலங்கை அப்படித்தான் இருந்தது. அதாவது பிறத்தியார் ஆச்சரியப்படும் வகையாக.

பிறகு மற்றவர்களைப் பார்த்து நாங்கள் ஆச்சரியப்பட வேண்டிய கட்டத்துக்கு இலங்கையின் அரசியல்வாதிகள் கொண்டு வந்தனர்.

இப்பொழுது மீண்டும் மெல்ல மெல்ல நாடு முன்னேறி வருகிறது.

ஆனாலும் ஊழல் குற்றச்சாட்டுகளும் குடும்ப அரசியலும் அதிகாரப் பிரச்சினையும் இந்த அரசாங்கத்தின் மீதான குற்றச்சாட்டுகளாக உள்ளன.

என்றபோதும் இப்பொழுது பாராளுமன்றத்தில் நடந்து கொண்டிருக்கும் வரவுசெலவுத்திட்ட விவாதத்தில் இது ஒரு சூடான விடயமாக விவாதிக்கப்படவில்லை.

ஏனென்றால் அரசாங்கத்தை எதிர்த்து வாதிடக்கூடிய திறன்களோடு எதிர்க்கட்சிகள் இல்லை.

குறிப்பாக தமிழ் முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற – தமிழ்த்தேசிய, முஸ்லிம்தேசவாதக் கட்சிகளைச் சேர்ந்தவர்களே இளைத்துப் போய்த்தானிருக்கிறார்கள்.

தங்களுடைய சொந்தக் காலில் நிற்கக் கூடியமாதிரி இவர்கள் தங்களுடைய மக்களுடைய வாழ்க்கைக்காக உழைக்கவில்லை.

அவர்களுடைய நெருக்கடிக் காலங்களில் அவர்களோடு கூட நிற்கவில்லை.

அவர்களுக்கு ஒருபோதுமே ஆறுதலாக இருக்கவில்லை

அவர்களை மனிதாபிமானத்துடன் நோக்கவில்லை.

தேர்தல்காலங்களில் பொங்கி வழிகின்ற பாசத்தோடு அரவணைத்ததைத் தவிர வேறு எந்தப் பெரிய பணிகளையும் இவர்கள் செய்ததில்லை.

எனவே அரசாங்கத்தரப்பின் வாதங்களை வாயைப் பிளந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்களே தவிர, மறுத்துப் பேசக்கூடிய திராணியைப் பெற்றுக்கொள்ள முடியாமல் இருக்கிறார்கள்.

சில சந்தர்ப்பங்களில் சில விடயங்கள் தொடர்பாக மறுத்துப் பேச முனைந்தாலும் எதிர்த்து ஒரு கேள்வி கேட்டவுடன் வாயடைத்துப்போகிறார்கள்.

சில நாட்களுக்கு முன்னர் இது போன்ற ஒரு விவாதத்தில் கலந்து கொண்ட தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த அரியநேத்திரன் என்ற எம்பி முற்றிலும் தவறான புள்ளிவிவரங்களை முன்வைத்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 40 ஆயிரம் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உள்ளன என்று சொன்னார்.

இதைக் கேட்ட அனைவரும் சிரிக்கத்தொடங்கி விட்டனர்.

ஏனென்றால், கிளிநொச்சியில் மொத்தமாக 41, 250 குடும்பங்களே உள்ளன.

இதில் 40 ஆயிரம் குடும்பங்கள் பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் என்று ஒரு பாராளுமன்ற உறுப்பினர் சொல்கிறார் என்றால், ஆக 1250 குடும்பங்கள் மட்டும்தான் கணவனைக் கொண்ட குடும்பங்களாக – ஆண் தலைமைத்துவக் குடும்பங்களாக உள்ளனவா?

எந்தவகையான அடிப்படைகளும் இல்லாமல் இவர்கள் கண்டபாட்டுக்கு வாயிலே வந்தபடி கதைக்கின்ற பரம்பரையைச் சேர்ந்தவர்கள்.

இப்படித்தான் சில ஆண்டுகளுக்கு முன் தமிழ் ஊடகங்களின் முன்பக்கத்திலேயே இந்த கஜேந்திரன் என்பவர் 40 ஆயிரம் சவப்பெட்டிகளை தென்பகுதிக்கு அனுப்பி வைப்போம் என்றார்.

அப்படிச் சொன்னவர் அதற்கான யதார்த்தத்தைப் பற்றிச் சிந்திக்கவேயில்லை.

அப்படிச்சொல்லிவிட்டு அதை நடைமுறைப்படுத்துவதற்காக இங்கே நிற்கவும் இல்லை.

இப்படித்தான் இவர்கள் சொல்வதெல்லாம் பொய்யாகவும் பழங்கதையாகவும் போய்க்கொண்டிருக்கிறது.

இவர்களை நம்பிய மக்கள் கதியோ அதோ கதி.

நேரம் என்பது செலுத்தப்பட்ட அம்பைப் போன்றது; அது திரும்பி வராது. - ஜேஷி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## எதிர்ப்பரசியலின் அனுகூலங்கள்!

வரும் ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்துப் போட்டியிடுவதற்கான பொதுக் கூட்டணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இல்லை என்று தலைவர் இரா.சம்பந்தன் திருவாய் மலர்ந்து விட்டார்.

மீண்டும் மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்குவதுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிகழ்ச்சிநிரல் என்பது தெளிவாகி விட்டது. தமிழ் மக்கள் தங்கள் விருப்பப்படி வாக்களிக்கலாம் என்று கூட்டமைப்பின் வழவழத்த கோவணக்கட்டை எல்லாரும் பார்க்க அறிவிக்க வேண்டியதுதான் இனிப் பாக்கி.

அநேகமாக தேர்தலுக்கு இன்னும் இரு மாதங்களே இருக்கலாம் என்றிருக்கும் நிலையில், தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும், நாங்களும் வாழுகின்ற இந்த நாட்டுக்கான தலைமையைத் தேர்ந்தெடுப்பதில் நாங்கள் செய்ய வேண்டியது என்ன என்று திறுதட்டமாகச் சொல்ல முடியாத ஒரு தலைமையே தமிழ் மக்களுக்கு வாய்த்திருக்கிறது.

தமிழ் மக்களுக்கு மகிந்தவைப் பூச்சாண்டியாகக் காட்டிக் கொண்டு, மறைமுகமாக மகிந்த ஜனாதிபதியாக வருவதையே இவர்கள் தொடர்ந்து விரும்பக் காரணம் என்ன?

புலிகள் இருந்தபோதும் ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிக்கச் சொல்லி ரணிலை தோற்கடித்து மகிந்தவை வெல்ல வைத்தார்கள். பின்னர், தமிழர்களை இராணுவத் தளபதி பொன்சேகாவுக்கு வாக்குப் போடச் சொல்லி மகிந்தவை மீண்டும் அமோகமாக வெல்ல வைத்தார்கள்.

இப்போதும் எதிரணியில் வேட்பாளர் சரியில்லை என்று ஒரு சாக்கைச் சொல்லிவிட்டு மகிந்தவை வெல்ல வைக்க இதோ தயாராகி விட்டார்கள். எதிரணி சரியில்லை என்றால் எதிர்க்கட்சிகளின் கூட்டு அமைப்பில் இவ்வளவு காலமும் இருந்தது ஏன்? யாழ்ப்பாணத்தில் ரணிலோடு மேதினம் கொண்டாடி, அவர் கையோடு கைகோர்த்து தேசியக்கொடியை உயர்த்திப் பிடித்தது ஏன்?

தொடர்ந்து எதிர்ப்பரசியலையே செய்து பதவிகளைப் பிடித்துக் கொண்டிருப்பதற்காக, தீர்வைப் பற்றிக் யாரும் கேள்வியெழுப்பி விடாமல் தமிழ்மக்கள் தலையில் மிளகாய் அரைத்துக் கொண்டிருப்பதற்கு வசதியான நாடகம்தான் இது!

இவ்வளவு காலமும் இவர்கள் ஆதரவளித்துக் கொண்டிருந்த எதிரணிக் கூட்டைச் சேர்ந்த யாரேனும் ஜனாதிபதியாக வந்துவிட்டால், இவர்கள் முழங்கிக் கொண்டிருக்கும் சுயநிர்ணயத் தன்னாட்சித் தனியலகை தமிழ் மக்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டி வருமல்லவா?

மகிந்த ராஜபக்ஷ தான் போர்க் குற்றவாளியாக சர்வதேசத்தால் விசாரித்துத் தண்டிக்கப்பட வேண்டியவர், அவருடன் பேசி தீர்வெல்லாம் எடுக்க முடியாது என்று சொல்லி வருபவர்கள், அவர் தோற்கடிக்கப்பட்டால், அவருக்குப் பதிலாக இவர்கள் கொண்டுவரும் புதிய ஜனாதிபதியிடம் பேசித் தீர்வைக் கொண்டு வர வேண்டிய நிர்ப்பந்தம் வந்துவிடும்.

எனவேதான், மறைமுகமான தந்திரங்கள் மூலம் மகிந்தவையே ஜனாதிபதியாக வரப்பண்ணுவது, அதன்பிறகு போர்க் குற்றவாளியிடம் போய்த் தீர்வைப் பேசமுடியுமா என்று கேட்டுவிட்டு, அடுத்த ஐந்து வருடங்களுக்கும் எதிர்ப்பரசியலையே ஓட்ட வேண்டியது...

இதுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் கள்ளத்தனம். இவர்களால் தமிழ் மக்களுக்குத் தேவையான தீர்வுத் திட்டத்தை வரையறுத்துச் சொல்ல முடியாதிருப்பதைப் போலவே, இந்த நாட்டுக்குத் தலைவராக வரவேண்டிய ஒருவரையும் கைகாட்ட முடியாமலிருக்கிறது.

எமக்கு வேண்டியது யாரும் கிட்ட வரமுடியாத தன்னாட்சித் தனியலகு; அதை கொடுக்க இந்த நாட்டில் எவருமேயில்லை... ஆயுள்பரியந்தம் எதிர்த்துக் கொண்டேயிருப்பதைத் தவிர நாங்கள் வேறென்னதான் செய்ய முடியும்? என்று போய்க்கொண்டிருக்க வேண்டியதுதான்!

- ஆசிரியர்



**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை 2014**

"சாகுமுன் உன் பாட்டன் நாட்டிய பழமரங்களைக்கேட்டுப்பார், உனது பரம்பரையின் கனவுகளை இன்னமும் அது வைத்திருக்கக்கூடும்."

——— கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலன்

# யாழ்.மாவட்டத்தில் இப்போது 4 இலட்சத்து 50 ஆயிரம் வாக்காளர்

யாழ்மாவட்டத்தில் இப்போது நான்கு இலட்சத்து 50 ஆயிரம் வாக்காளர்கள் உள்ளதாக யாழ். உதவித் தேர்தல் ஆணையாளர் தகவல் வெளியிட்டுள்ளார்.

அத்துடன், யாழ். மாவட்டத்தில் தேசிய அடையாள அட்டை இல்லாதவர்கள் 46 ஆயிரம் பேர் இருக்கின்றதாக யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பொன்னுத்துரை குகநாதன் நேற்றுத் தெரிவித்தார்.

2014 ஆம் ஆண்டிற்கான வாக்காளர் இடாப்பிற்கானபி.சி. படிவம் நிரப்பப்பட்டு, 4 இலட்சத்து 50 ஆயிரதது 132 பேர் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில், 46 ஆயிரத்து 838 பேர் தேசிய அடையாள அட்டை இன்றி இருப்பதுடன், 7 ஆயிரத்து 126 பேர் தவறான தேசிய அடையாள அட்டை வைத்திருக்கின்றார்கள்.

அந்த வகையில், அடையாள அட்டை இன்றியும், தவ றான அடையாள அட்டை வைத்திருப்பவர்களாக 53 ஆயிரத்து 964 பேர் யாழ். மாவட்டத்தில் இருக்கின்றார்கள். இவ்வாறு தேசிய அடையாள அட்டை இன்றி இருப்பவர்கள் மற்றும் தவறான அடையாள அட்டை வைத்திருப்பவர்களுக்கான தற்காலிக அடையாள அட்டை தேர்தல் திணைக்களத்தினால் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதாகவும் யாழ் மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளர் மேலும் கூறினார். (25)

# பொது வேட்பாளராக ரணில்; பொன்சேகா யோசனை

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளராக ரணில் விக்ரமசிங்க போட்டியிட வேண்டும் என ஜனநாயகக் கட்சியின் தலைவரான முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார். சரத் பொன்சேகா 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக போட்டியிட்டார்.

மருத்துவ சிகிச்சைக்காக சிங்கப்பூர் சென்றிருந்த பொன் சே[illegible] நேற்றுக்காலை நாடு திரும்பினார்.

ரணில் விக்ரமசிங்க பொது வேட்பாளராக போட்டியிட வேண்டும் என்ற தனது நிலைப்பாட்டை அவர் நேற்று முறபகல் ரணிலிடம் அறிவித்துள்ளதாக கூறப்படுகிறது.

பொன்சேகாவின் இந்த யோசனையை சமகி சக்தி அமைப்பில் அங்கம் வகிக்கும் பெரும்பாலான கட்சிகளும் அமைப புகளும் ஏற்றுக் கொண்டுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# கிராமிய மக்களுக்கு தொழில்வாய்ப்பு; 300 தொழிற்சாலைகள் விரைவில்

நாட்டின் அனைத்து கிராமிய பிரதேசங்களிலும் வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் நாடு முழுவதிலும் 300 தொழிற்சாலைகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதென முதலீட்டு ஊக்குவிப்புத்துறை அமைச்சர் லகஷ்மன் யாப்பா அபேவர்த்தன நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

முதலீட்டு ஊக்குவிப்புத்துறை அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் லகஷ்மன் யாப்பா, 1978ஆம் ஆண்டு திறந்த பொருளாதார கொள்கை அறிமுகப்படுத்தப்பட்ட நாள் முதல், 2014ஆம் ஆண்டு வரை கிடைக்கப்பெற்ற வெளிநாட்டு முதலீடுகளில் 74 வீத வெளிநாட்டு முதலீடுகள் 2005ஆம் ஆண்டுக்கும் 2014ஆம் ஆண்டுக்கும் இடையில் கிடைக்கப்பெற்றன.

1978 முதல் 2014 வரையில் 10,771 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வெளிநாட்டு முதலீடுகளாக இலங்கைக்குக் கிடைத்துள்ளன. இதில் 74 வீதமானவை 2005இற்கும் 2014ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் கிடைக்கப் பெற்றவை. எஞ்சிய 26 வீதமும் 78ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கிடைக்கப்பெற்றவை என்றும் அவர் குறிப்பிட்டார்.

2014ஆம் ஆண்டு இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு பாரிய முதலீடுகளை ஏற்படுத்[illegible] கொடுத்த ஆண்டாகக் கருத முடியும். குறிப்பாக முதற்தடவையாக இலங்கையில் 'போர்ட் சிற்றி' என்ற திட்டம் பாரிய முதலீட்டுடன் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டே 2014ஆம் ஆண்டாகும். கொழும்பு தலைநகரின் வரைபடத்தையும் மாற்றியமைக்கக் கூடிய விதத்தில் 1.6 பில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீட்டுடன் ஆரம்பமாகவுள்ளது.

இதற்கு மேலதிகமாக நாடு முழுவதிலும் பல்வேறு வெளிநாட்டு முதலீடுகள் உள்வாங்கப்பட்டுள்ளன.முதலீடுகள் அதிகளவில் வரும்போது இவை தொடர்பாக ஒரு கட்டுப்பாட்டையும் கடைப்பிடிக்க அரசு உத்தேசித்துள்ளது. அதாவது எமது நாட்டின் கலாசரம், பண்புகள் என்பவற்றைப் பேணும் விதத்தில் இவை தெரிவுசெய்யப்படும். எது எவ்வாறிருப்பினும் உலக நாடுகளில் இலங்கையில் முதலீடு செய்வதற்கான போட்டி குறைந்தபாடில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அரசுடன் கூட்டு; எதுவரை நீடிக்கும்

## ஹெல உறுமயவின் முடிவு இன்னும் இல்லை

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடனான இறுதிச்சுற்று பேச்சுவார்த்தையை முடித்துக் கொண்டுள்ள ஜாதிக்க ஹெல உறுமய கட்சி, அரசாங்கத்தை விட்டு விலகுமா? இல்லையா? என்ற இறுதித் தீர்மானத்தை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை அறிவிக்கும் என கட்சித் தாகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐ.ம.சு.கூ.வுடனான கடைசி சுற்றுப் பேச்சுவார்த்தை நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்றது. ஐ.ம.சு.கூ.வின் பிரதிநிதியான தொழிற்பயிற்சித் திறன் அபிவிருத்தி அம்மைச்சர் டலஸ் அலகப்பெரும, ஜனாதிபதித்தேர்தலில் தம் ஆதரவைக் கொடுப்பதற்கு ஜாதிக்க ஹெல உறுமய முன்வைத்த 35 அம்சக் கோரிக்கைகள் தொடர்பில் ஐ.ம.சு. கூ.வின் பதிலை எழுத்து மூலம் வழங்கவுள்ளார்.

ஹெல உறுமயவின் சட்ட ஆலோசகர் உதய கம்மன்பில, ஐ.ம.சு.கூ.வின் பதிலை ஹெல உறுமயவின் தலைவர்கள் வார இறுதியில் ஆராய்ந்து தம் கருத்தை கட்சியின் மத்திய குழுவுக்கு திங்களன்று சமர்பிப்பர். எமது நிலைப்பாட்டை செவ்வாயன்று நாம் அறிவிப்போம் என்று அவர் கூறினார். நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்தல், உயர்மட்ட நீதிமன்றங்களுக்கு நீதிப திகளை நியமிக்கும் சுதந்திரமான முறைமை, ஊழ லுக்கு எதிரான சட்டங்களை வலுப்படுத்தல் உள்ளிட்ட விடயங்கள் அடங்கிய 35 அம்சக் கோரிக்கைகளையே ஹெல உறுமய முன்வைத்துள்ளது.




# இவர்கள் ஒருபோதும் திருந்தப் போவதில்லை

**இன நெருக்கடிக்குத் தீர்வு என்ன என்று ஜனாதிபதி வேட்பாளர்களிடம் கேட்கும் பிரேமச்சந்திரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீர்வு என்ன என்று தமிழ் மக்களுக்குச் சொல்ல வேண்டாமா? ஐந்து வருடங்களாக எந்தத் தீர்வும் இல்லாமல் எதையாவது சொல்லிச் சொல்லிக் காலத்தைக் கடத்தியாகிவிட்டது. இனியும் மற்றவர்கள் மீது பழியைப் போட்டுவிட்டுக் காலத்தைக் கடத்தும் நோக்கம்தானா?**

**சங்கர சிவன்**

இன நெருக்கடிக்குத் தீர்வு என்ன என்ற கேள்வியை சுரேஷ் பிரேமச்சந்திரன் ஜனாதிபதி வேட்பாளர்கள் இருவரிடமும் கேட்கின்றார். கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இக்கேள்வியைக் கேட்டிருக்கின்றார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனம் இன்னும் வெளியாகவில்லை. இனப்பிரச்சினையின் தீர்வுக்கான ஆலோசனைகளும் அதில் இடம்பெறவுள்ளன என்று அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கூறியிருக்கின்றார். விஞ்ஞாபனம் வெளிவந்த பின் அது பற்றிக் கருத்துக் கூறலாம். பொது எதிரணியின் வேலைத்திட்டம் வெளியாகிவிட்டது. அவர்களின் ஆறம்ச வேலைத் திட்டத்தில் இனப்பிரச்சினையின் தீர்வுக்கான ஆலோசனை இல்லை. இந்த வேலைத்திட்டம் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் பேசியதாக மாதுலுவாவே சோபித தேரர் அண்மையில் கூறினார். அந்தப் பேச்சுவார்த்தையில் பங்குபற்றிய கூட்டமைப்புத் தலைவர்களிடமும் சுரேஷ் பிரேமச்சந்திரன் இக்கேள்வியைக் கேட்க வேண்டும்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்குவதும் பதினேழாவது அரசியலமைப்புத் திருத்தத்தை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வருவதும் எதிரணியின் ஆறம்சத் திட்டத்தில் பிரதானமானவை. அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலமே இவற்றைச் செய்ய முடியும். அதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை தேவை. எதிரணியின் பொது வேட்பாளர் தெரிவு செய்யப்பட்டாலும் அவருக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிடைக்காது. நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தலுக்குச் சென்றாலும் மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிடைப்பது சாத்தியமில்லை. நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை அளித்து மக்களை ஏமாற்றுகின்றார்கள்.

பதினேழாவது திருத்தத்தில் இப்போது அக்கறை காட்டும் கூட்டமைப்புத் தலைவர்கள் அத்திருத்தம் நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு வந்தபோது எப்படி நடந்துகொண்டார்கள் என்பதைத் தமிழ் மக்கள் அறிய வேண்டும். இந்தத் திருத்தத்தினால் தமிழ் மக்களுக்கு ஒரு பிரயோசனமும் இல்லை எனக் கூறி நாடாளுமன்றத்திலிருந்து வெளிநடப்புச் செய்தார்கள். பிரயோசனம் உண்டு என்று இப்போது வந்த அறிவு அப்போது வரவில்லை. இது தான் இவர்களின் அரசியல் ஞானம்.

இன நெருக்கடிக்குத் தீர்வு என்ன என்று ஜனாதிபதி வேட்பாளர்களிடம் கேட்கும் பிரேமச்சந்திரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீர்வு என்ன என்று தமிழ் மக்களுக்குச் சொல்ல வேண்டாமா? ஐந்து வருடங்களாக எந்தத் தீர்வும் இல்லாமல் எதையாவது சொல்லிச் சொல்லிக் காலத்தைக் கடத்தியாகிவிட்டது. இனியும் மற்றவர்கள் மீது பழியைப் போட்டுவிட்டுத் தீர்வுத் திட்டம் இல்லாமல் காலத்தைக் கடத்தும் நோக்கமா?

இனப்பிரச்சினையின் தீர்வு தள்ளிப் போவதற்குக் கூட்டமைப்புத் தலைவர்களே காரணம். தமிழ்த் தலைமை ஒரு தீர்வை வைத்துப் பேச்சுவார்த்தை

**முதலமைச்சராகப் பொறுப்பேற்ற விக்னேஸ்வரன் மாகாண சபையை முடக்குவதற்கு ஆரம்பத்தில் அவர் கூறிய காரணங்கள் பொய்யானவை என்பது அம்பலமாகியதும் மாகாண சபைக்கு அதிகாரம் இல்லை என்று இப்போது கூறுகின்றார். மற்றைய மாகாண சபைகளுக்கு உள்ள அதிகாரங்களுள் எந்தெந்த அதிகாரங்கள் மாகாண சபைக்கு இல்லை என்று கேட்டால் இவரிடம் பதில் இல்லை.**

நடாத்துவது தான் பலன் தரக்கூடிய நடைமுறை. அப்படிப் பேசியிருந்தால் ஓரளவுக்குச் சில முன்னேற்றங்களை அடைய முடிந்திருக்கும். அதைவிட்டுப் பதினெட்டுத் தடவைகள் பேசினோம் என்று சொல்வதில் அர்த்தமில்லை. அந்தப் பேச்சுவார்த்தையின் போது தீர்வுத் திட்டமொன்றை அரசாங்கத்துக்குக் கையளித்ததாகக் கூறினார்கள். அது பொய் என்பது இப்போது நிரூபணமாகிவிட்டது. அது பொய் என்பதால் தான் தீர்வுத் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கான ஆலோசனைகளை அண்மையில் மக்களிடமிருந்து கோரினார்கள்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு தள்ளிப் போவதற்குக் கூட்டமைப்பிடம் தீர்வுத் திட்டம் இல்லாமை ஒரு காரணம். கிடைக்கும் சந்தர்ப்பங்களை வேண்டுமென்றே தட்டிக்கழிப்பது மற்றைய காரணம். இதற்கான பிந்திய உதாரணம் நாடாளுமன்றத் தெரிவுக் குழு. பதின்மூன்றாவது திருத்தத்திலும் பார்க்கக் கூடுதலான அதிகாரங்கள் தேவை என்று அடிக்கடி சொல்கின்றார்கள். அதைத் தெரிவுக் குழுவுக்குப் போய்ச் சொல்வதற்கு என்ன தடை? தங்கள் கோரிக்கையைத் தெரிவுக் குழு ஏற்றுக்கொள்ளாது என்று ஒரு நொண்டிச் சாட்டு. தெரிவுக் குழு ஏற்றுக் கொள்ளுமா ஏற்றுக்கொள்ளாதா என்பதை அதில் பங்கு பற்றுவதன் மூலம்தான் அறிய முடியும். முருங்கையடிச் சாத்திரம் பார்த்துக் கூற முடியாது. தெரிவுக் குழுவில் ஒரு கோரிக்கையை முன்வைத்து அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றாலும் தமிழ் மக்கள் இழப்பதற்கு எதுவுமில்லை. தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கையை வெளிப்படுத்துவது ஒரு பிளஸ் பொயின்ற்.

தெரிவுக் குழுவுக்குப் போனால் உள்ளதையும் இழக்க வேண்டி வரும் என்று விக்னேஸ்வரன் பூச்சாண்டி காட்டுகின்றார். தெரிவுக்குழு என்ன தீர்மானத்தை மேற்கொண்டாலும் நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்துக்குப் பின்னரே நடைமுறைக்கு வர முடியும். அந்தத் தீர்மானம் அரசியலமைப்பு மாற்றம் சம்பந்தப்பட்டதானால் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நாடாளுமன்றத்தில் நிறைவேற வேண்டும். உச்ச நீதிமன்ற நீதியரசராக இருந்த விக்னேஸ்வரனுக்கு இது தெரியாததல்ல. தெரிந்து கொண்டு தமிழ் மக்களின் காதில் பூச்சுற்றுகின்றார்.

அரசியல் தீர்வுக்குக் குழிபறிக்கும் கைங்கர்யத்தை விக்னேஸ்வரனும் கச்சிதமாகச் செய்து கொண்டிருக்கின்றார். அரசியல் தீர்வின் ஆரம்ப கட்டமாக மாகாண சபையே இருக்கின்றது. அதைச் சரியான முறையில் செயற்படுத்திக்கொண்டு கட்டங்கட்டமாக மேலதிக அதிகாரங்களைப் பெறுவதன் மூலம் அரசியல் தீர்வை நோக்கிச் செல்ல முடியும். மாகாண சபையின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற விக்னேஸ்வரன் அதை முடக்குவதிலேயே அக்கறையாக இருக்கின்றார். அரசியல் தீர்வைத் தவிர்க்க வேண்டும் என்ற கூட்டமைப்பின் நிகழ்ச்சி நிரலை இவ்வாறு நடைமுறைப்படுத்துகின்றார். மாகாண சபையை முடக்குவதற்கு ஆரம்பத்தில் அவர் கூறிய காரணங்கள் பொய்யானவை என்பது அம்பலமாகியதும் மாகாண சபைக்கு அதிகாரம் இல்லை என்று இப்போது கூறுகின்றார். மற்றைய மாகாண சபைகளுக்கு உள்ள அதிகாரங்களுள் எந்தெந்த அதிகாரங்கள் மாகாண சபைக்கு இல்லை என்று கேட்டால் இவரிடம் பதில் இல்லை.

இனப்பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுத் தருவதாகத் தமிழ் மக்களுக்கு வாக்குறுதி அளித்துப் பதவிகளைப் பெற்ற கூட்டமைப்புத் தலைவர்கள் இனப்பிரச்சினைக்கான தீர்வைத் தவிர்க்கும் தந்திரோபாயங்களையே இப்போது பின்பற்றுகின்றார்கள். இனப்பிரச்சினையின் தீர்வில் இவர்களுக்கு உண்மையான அக்கறை உண்டென்றால்இதுவரையில் தீர்வுத் திட்டமொன்றை முன்வைத்திருக்க வேண்டும். அரசியல் தீர்வை வலியுறுத்தி வெகுஜனப் போராட்டங்களை நடத்தியிருக்க வேண்டும். பஸ் நிலைய ஆர்ப்பாட்டம், குறுகிய நேர உண்ணாவிரதம், அரைநாள் சத்தியாக்கிரகம் என்றெல்லாம் இவர்கள் நடத்துகின்ற சின்னச் சின்னப் போராட்டங்களில் கூட அரசியல் தீர்வுக் கோரிக்கை இடம்பெறுவதில்லை. இராணுவப் பிரசன்னம், காணி அபகரிப்பு, குடியேற்றம் போன்ற விடயங்களே அப்போராட்டங்களில் இடம்பெறுகின்றன.

இராணுவப் பிரசன்னம், காணி அபகரிப்பு, வெளியார் குடியேற்றம் என்பன தமிழ் மக்களுக்குப் பிரச்சினையான விடயங்கள்தான். இவையெல்லாம் இனப்பிரச்சினை தீர்க்கப்படாததன் பக்க விளைவுகள். இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும்போது தாமாகவே மறையக் கூடியவை. எனவே, இனப்பிரச்சினையின் தீர்வுக்கான போராட்டமே இன்று தமிழ் மக்களின் பிரதான தேவை. பேச்சுவார்த்தை மூலம் பக்க விளைவுகளுக்குச் சிறிது சிறிதாகத் தீர்வைக் காண முடியும் என்பதை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிரூபித்திருக்கின்றார்.

இராணுவப் பிரசன்னம் போன்றவற்றை மையப்படுத்திக் கூட்டமைப்பு நடத்தும் போராட்டம் இப்பிரச்சினைகளின் தீர்வை எதிர்பார்த்து நடத்தப்படுவதில்லை. இவ்வாறான போராட்டங்களின் மூலம் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காண முடியாது என்பது கூட்டமைப்புத் தலைவர்களுக்கும் தெரியும். இரண்டு நோக்கங்களுக்காகவே இப்போராட்டங்களை நடாத்துகின்றார்கள். இராணுவப் பிரசன்னம், மீள்குடியேற்றம் போன்ற உணர்ச்சிமயமான பிரச்சினைகளை மையப்படுத்திப் போராட்டம் நடாத்துவதன் மூலம் மக்களைத் தங்கள் சுயநல அரசியலுக்குள் கட்டி வைத்துக் கொள்ளலாம் என்பது ஒரு நோக்கம். இனப்பிரச்சினையின் தீர்வைத் தாங்கள் ஓரங்கட்டுவதை மக்களிடமிருந்து மறைப்பது மற்றைய நோக்கம்.

இனப்பிரச்சினைக்கான தீர்வை ஓரங்கட்டுவதில் கூட்டமைப்புத் தலைவர்கள் கூடுதலான கவனம் செலுத்துவது ஏன் என்பதை மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். அரசியல் தீர்வைத் தவிர்க்குமாறு புலிசார்புப் புலம்பெயர் அமைப்புகள் விடுத்த கோரிக்கை ஒரு காரணம். புலம்பெயர் அமைப்புகளின் கோரிக்கை இல்லாவிட்டாலும் கூட்டமைப்புத் தலைவர்கள் அரசியல் தீர்வைத் தவிர்க்கவே விரும்புவார்கள்.

தமிழ் மக்களுக்கு இனப்பிரச்சினையைத் தவிர வேறு பிரச்சினைகள் இல்லாமலில்லை. காணியோ வீடோ சொந்தமாக இல்லாத ஏழை மக்கள் மேட்டுக்குடியினரில் அண்டி வாழும் நிலை இருக்கின்றது. பொருளாதாரச் சுரண்டல் இருக்கின்றது. சமூக ஏற்றத்தாழ்வுகள் முற்றாக மறைந்துவிடவில்லை. கூட்டமைப்புத் தலைவர்களுக்குப் பாதிக்கப்படும் இப்பஞ்சைகளின் வாக்குகள் தேவை. அதேநேரம் சுரண்டல் காரரினதும் ஒடுக்குமுறையாளரினதும் நட்புறவும் தேவை. எனவே, இவர்கள் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளில் தலையிட விரும்புவதில்லை. ஏழை மக்களின் பிரச்சினைகளுக்காக மேட்டுக்குடிச் செல்வந்தர்களின் ஆதரவை இழக்காமலும் அந்த ஆதரவுக்காக ஏழை மக்களின் வாக்குகளை இழக்காமலும் அரசியல் செய்வதற்கு இனப்பிரச்சினை கைகொடுக்கின்றது. இனப்பிரச்சினை தொடர்வதே இவர்களின் விருப்பம். எனவே, இனப்பிரச்சினையைத் தீர்க்கும் முயற்சியில் இவர்கள் அக்கறையுடன் ஈடுபடப் போவதில்லை. ●

# சஜின்வாஸ் மீது வழக்கு நியூயோர்க்கில் தாக்கல் செய்யவேண்டும்

## ஐ.தே.கட்சி எம்.பி.கோரிக்கை



பிரித்தானியாவிற்கான முன்னாள் உயர்ஸ்தானிகர் கிறிஸ் நோனீஸ் பொலீஸாரிடம் தன் மீதான தாக்குதல் சம்பவம் குறித்து நியூயோர்க் பொலீஸாரிடம் முறைப்பாடு செய்திருக்க வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தினால் தமக்கு நியாயம் கிடைக்கும் என எதிர்பார்த்து காத்திருக்காமல் தாக்குதல் சம்பவம் குறித்து கிறிஸ்நோனிஸ் முறைப்பாடு செய்திருக்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் டி வாஸ் குணவர்தன நியூயோர்க்கில் வைத்து அண்மையில் கிறிஸ் நோனீஸை தாக்கிய சம்பவம் குறித்தே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.


நாட்டின் வெளிவிவகார சேவை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் கல்வித் தகைமைகளும் மொழி அறிவுமே வெளிநாட்டு ராஜதந்திரிகளை நியமிப்பதற்கான தகுதிகளாக காணப்பட்டதாகவும் தற்போது அந்த நிலைமை மாறியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ராஜதந்திரிகள் தாக்குதல்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள தற்காப்புக் கலை கற்றிருக்க வேண்டியது அவசியமாகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

# புலிகளுடன் கைகோர்க்கிறது ஐ.தே.க. இது தாய்நாட்டுக்கான பச்சைத்துரோகம்

## நெருப்பு எடுக்கிறார் சஜின்



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி நாட்டுக்கு துரோகம் இழைப்பதாக வெளிவிவகார அமைச்சின் கண்காணிப்பு நாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியினர் வெளிநாடுகளில் வாழும் தமிழீழ விடுதலைப் புலி புலம்பெயர் தமிழர்களுடன் இணைந்து செயற்பட்டு வருவதாக அவர் குறிபபிட்டுள்ளார்.

அண்மையில் ரணில் விக்ரமசிங்க வெளிநாட்டு விஜயத்தை மேற்கொண்டிருந்தவேளை புலம்பெயர் புலி ஆதரவாளர்களை சந்தித்துள்ள தாகவும் அதற்கான புகைப்பட ஆதாரங்கள் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் புகைப்படத்தில் இருப்பவர்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சம்பந்தன், சுரேஸ் பிரேமசந்திரன் போன்றவர்களினால் அடையாளம் காண முடியும் என நம்புவதாகத் தெரிவித்துள்ளார். இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சியினர் ஏற்கனவே பதிலளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சப்ரகமுவ மாணவர்கள் 10 பேருக்கு வகுப்புத்தடை

சப்ரகமுவ பல்கலைக்கழகத்துக்கு இவ்வருடம் புதிதாகச் சேர்ந்த மாணவ, மாணவியரைக் மிக மோசமாகப் பகிடிவதை செய்தனர் எனக் கூறப்படும் முகாமைத்துவ பீடத்தைச் சேர்ந்த 10 சிரேஷ்ட மாணவர்களுக்கு தறகாலிக வகுப்புத் தடை விதிககப்பட்டதாக அப்பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட மாணவ ஆலோசகர் கலாநிதி மஞ்சுள சுமித் மாகம தெரிவித்தார்.

புதிய மாணவர்களைப் பல்கலைக்கழக வளவிலுள்ள பற்றைக் காடொன்றுக்கு அழைத்துச் சென்ற சிரேஷ்ட மாணவர்கள் அவர்களைப் பகிடிவதை செய்துள்ளனர். இச்சம்பவத்தைக் கேள்விப்பட்ட பல்கலைக்கழக உபவேந்தர் அவ்விடத்துக்கு விரிவுரையாளர்கள் குழுவொன்றை அனுப்பி புதிய மாணவர்களை மீட்டிருக்கிறார்.

இதனைத் தொடர்ந்து பிடிபட்ட 10 சிரேஷ்ட மாணவர்களுககும் எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்காக அவர்களுக்குத் தற்காலிக வகுப்புத் தடை விதிக்கப்பட்டது.

புதிய மாணவர்கள் சேர்ந்து கிட்டத்தட்ட 7 மாதங்கள் கடந்த பின்னரும் இத்தகைய மனிதாபிமானமற்ற பகிடிவதைகளைச் செய்வது மன்னிக்க முடியாத குற்றம் என கலாநிதி மஞ்சுள சுமித் மாகம சுட்டிக்காட்டினார்.

# நாட்டை பாதுகாக்க மீண்டும் ஆயுதம் தூக்கும் நிலை

## ஜே.வி.பி.தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டைப் பாதுகாப்பதற்கு ஆயுதம் எடுத்துப் போராட வேண்டிய அவசியம் தற்போது மீண்டும் எழுந்துள்ளது என தெரிவித்திருக்கிறார் ஜே.வி.பி.யின் தலைவர் அனுரகுமார திஸநாயக்க.

ஜே.வி.பி போராளிகளை நினைவுகூரும் கார்த்திகை வீரர்கள் தினம் நேற்றுமுன்தினம் கொழும்பு விகாரமகா தேவி பூங்காவின் திறந்த வெளி அரங்கில் அனுஷ்டிக்கப்பட்டது.

இதில் கலந்துகொண்டு பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்த விடயங்கள் வருமாறு,

ஜே.வி.பி. ஆயுதப் போராட்டம் நடத்திய காலங்களை விட நாடு இன்று பேரழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.

நாட்டின் வளங்கள் வெளிநாடுகளுக்கு மொத்தமாக தாரை வார்க்கப்படுகிறது. ராஜபக்ஷ குடும்பத்தினர் நாட்டை இன்னும் பல நூற்றாண்டுகள் அபிவிருத்தியில் பின்தங்கி இருக்கச் செய்யும் விதத்தில் கொள்ளையடிக்கிறார்கள். எதிர்கால சந்ததியினருக்காக இவர்களிடமிருந்து நாட்டைப் பாதுகாக்கும் பொறுப்பு எமக்கு உண்டு.

1980 களை விட மோசமான அழிவுப் பாதையில் நாடு சென்று கொண்டிருக்கிறது. எனவே நாட்டுக்கு இன்னும் ஒரு ஆயுதப் போராட்டம் தேவை. இது இன்று தவிர்க்க முடியாததாகி விட்டது என்றார்.



# போதைப்பொருள் விற்றவர் கைது

(கொழும்பு)

புகையிலைத்தூள் 1 கிலோ 500 கிறாம் அடைக்கப்பட்ட டின்களை மறைத்து வைத்து விற்பனை செயய முயற்சித்த கடை உரிமையாளரை நேற்று முன்தினம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அக்கரப்பத்தனை பிரதேச மக் கள் வழங்கிய தகவலின்படி விரைந்து சென்ற பொலிஸார், குறித்த சந்தேகநபரை விசாரணைக்குட்படுத்திய போது, புகையிலை தூள் அடைக்கப்பட்ட 1050 டின்கள் இருந்தன தெரியவந்துள்ளது.

தடை செய்யப்பட்ட குறித்த போதைபொருள், மாணவர்களுக்கே அதிகளவாக விற்பனை செய்யப்பட்டமை என ஆரம்ப கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

சந்தேகநபரை பொலிஸார் பிணையில் விடுவித்துள்ளதாகவும் அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும் அக்கரப்பத்தனை பொலிஸார் கூறியுள்ளனர்.

மேலும், சந்தேகநபர் மீண்டும் 21.11.2014 அன்று நுவரெலியா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவார் எனவும் குறிப்பிட்டனர்.

# கல்பிட்டியில் பிக்குகள் உண்ணாவிரதம்

கல்பிட்டி, கண்டக்குளி பகுதியிலுள்ள விகாரைக்கு முன்பாக ஐந்து பிக்குகள் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கல்பிட்டி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ள இடமாற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து பிக்குகள் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து மேலும் மூன்று பிக்குகள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கல்பிட்டி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் இடமாற்றத்தை இரத்து செய்யுமாறு விடுத்த கோரிக்கைக்கு இதுவரை பதில் கிடைக்கவில்லை என உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள பிக்குகள் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் திணைக்களத்தின் நிர்வாக தேவைகளின் அடிப்படையிலேயே இடமாற்றம் வழங்கப்படுவதாகவும், அதன் அடிப்படையில் கல்பிட்டிய பொலிஸ நிலையப் பொறுப்பதிகாரிக்கு கடந்த சில தினங்களுக்கு முன்னர் இடமாற்றம் வழங்கப்பட்டதாகவும் பதில் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், உதவிப் பொலிஸ் அத்தியட்சகருமான ருவன் குணசேகர குறிப்பிடுகின்றார்.

நாட்டின் எந்தவொரு பகுதியிலும் சேவை புரிவதற்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் எப்பொழுதும் தயாராகவே இருக்கவேண்டும் என்றும் பதில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

கல்பிட்டி பொலிஸ் நிலையதற்கு புதிய பொறுப்பதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பிக்குகளுடன் அது குறித்து கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# மன்னாரில் குடும்பஸ்தர் கைது

மன்னார் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வழக்கு விசாரனைகளுக்காக சென்று விட்டு வெளியில் வந்த மன்னார் பனங்கட்டுக்கோட்டு கிராமத்தைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் பனங்கட்டுக்கோட்டு கிராமத்தைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான தங்கத்துரை ஜெயின்ஸ் (வயது-38) என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டதாக அவரது மனைவி தெரிவித்தார்.

தனது கணவருக்கு மன்னார் நீதிமன்றத்தில் பிறிதொரு வழக்கு விசாரணை ஒன்று இடமபெற்று வருகின்றது. குறித்த வழக்கு விசாரணைக்காக அவர நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை மன்னார் நீதிமன்றத்திற்கு சென்று விட்டு வீடு திரும்புவதற்காக நீதிமன்றத்தில் இருந்து வெளியில் வந்த போது வெளியில் காத்து நின்ற பயங்கரவாத புலனாய்வுத்துறையினர் அவரை கைது செய்து வவுனியாவிற்கு அழைத்துச் சென்றுள்ளதாக அவரது மனைவி தெரிவித்தார்.

தனது கணவரை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்துள்ளதாகவும், அவருக்கு புனர்வாழ்வு வழங்க வேண்டும் என கைது செய்த பயங்கரவாத புலனாய்வுத் துறையினர் தொலைபேசியில் தெரிவித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

தனது கணவர் கடந்த 20 வருடங்களுக்கு முன்பே புலி இயக்கத்தில் இணைந்திருந்தார். பின் திருமணம் முடித்து தற்போது குடும்ப வாழ்வில் ஈடுபட்டு வரும் நிலையிலே இவர் கைது செய்யப்பட்டுள்ளதாக அவரது மனைவி மேலும் தெரிவித்தார்.

# விளையாட்டுத்துறை அபிவிருத்தி மேலும் 300 கோடி ஒதுக்கீடு

(கொழும்பு)

விளையாட்டுத்துறையின் வளர்ச்சிக்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியை விட மேலதிகமாக 300 கோடி ரூபாவை ஒதுக்குவதற்கு சம்மதம் தெரிவித்தார் என அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

விளையாட்டுத்துறை அமைச்சர் நேற்றுமுன்தினம் அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடாத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இந்தத் தகவலை வெளியிட்டார்.



2015 ஆம் ஆண்டு அனைத்து பாடசாலை மாணவர்களும் பாடசாலை மட்டத்திலான விளையாட்டுக்களில் பங்கேற்க வேண்டும் என்பதே அமைச்சின் எதிர்பார்ப்பு என்றார்.





காரைநகர் ஊரி கிராம அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற ஆசிரியர்தினம், மாணவர் கௌரவிப்பு பரிசளிப்பு விழா என்பனவற்றின் காட்சிகள் சில... (50)

# கணக்கெடுப்பு நடவடிக்கைகள் கிளி.மாவட்டத்தில் ஆரம்பம்

கைத்தொழில், வணிகம் தொடர்பானகணக்கெடுப்பு ஆரம்பமாகியுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கும் 500 நிறுவனங்களை கணக் கெடுக்கும் நடவடிக்கைகள் கிளிநொச்சி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரத்திணைக்களம் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரன் ஊடாக இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அரசாங்க அதிபரின் வழி காட்டலில் புள்ளிவிபர உத்தியோகத்தர்கள் பிரதேச செயலர்களின் அனுசரணையுடன் இப்பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

பிரதேச செயலகப் பிரிவுகளில் கடமையாற்றும் புள்ளி விபர உத்தியோகத்தர்கள் கைத்தொழில், வணிகம் தொடர்பான சேவைகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களிடம் விபரக்கொத்தை வழங்கி பதிவு செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

நாட்டின் பொருளாதார, சமூக திட்டமிடல் நடவடிக்கைகளுக்காக இத்தகைய தகவல்கள் காலத்துக்குக் காலம் பெறப்படுவது வழக்கமானதாகும். (90)

## முரசின் இன்றைய பலன்



(16.11.2014 ஞாயிற்றுக்கிழமை)

ஜய வருஷம் ஐப்பசி மாதம் 30 ஆம் திகதி.
நவமி / சித்தம்
முழுநாளும் பூச நட்சத்திரம்
இராகு காலம் 04.37 - 6.07 வரை. சுபநேரம் 09.07 - 10.37 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | தொழிலை விருத்தி செய்ய நண்பர்களுடன் கலந்துரையாடல். கணக்கினை எழுதி வைக்காமையினால் நிலுவையில் முரண்பாடு ஏற்படல். |
| ரிஷபம் | பிறருக்கு உதவி செய்வதில் சிரமம்பாராது முன்நிற்றல் புதியமனை அமைக்க ஏற்ற இடத்தை தெரிவு செய்தல். |
| மிதுனம் | எதிர்ப்புக்கள் மறைந்து விடும் பணிவரவும் வெளிநாட்டு யோகமும் ஏற்படும். |
| கடகம் | பிணைவைப்பதில் சிந்தித்து செயற்படவேண்டும் திறமைகளை அதிகாரிகளும் ஊழியர்களும் கௌரவித்தல். |
| சிம்மம் | பழைய பகைவன் மீண்டும் தொல்லை கொடுக்க நேரிடலாம் செலவுகள் ஏற்பட்டு கடன்படும் நிலை ஏற்படலாம். |
| கன்னி | தெய்வ நம்பிக்கையைக்கைவிடவேண்டாம் ஆக்கபூர்வமான யோசனைகளை செயற்படுத்தமுன்வருதல். |
| துலாம் | போட்டியும் நஷ்டமும் அகன்றுவிடல் அடுத்தவர்களுக்கு ஆதரவாகச்செயற்படும் போது கவனமாக இருங்கள். |
| விருச்சிகம் | உறவினர்களுடன் சுமுகமாக நடந்து கொள்ளல் அச்சத்தைக் கைவிட்டு துணிவுடன் செயற்படல் காரிய சித்தி ஏற்படல் |
| தனுசு | வியாபாரத்திற்கு இருந்த தடை நீங்கியதால் மனக்கிலேசம் மறைதல் உதவி செய்ய வெளிக்கிட்டதால் துன்பம் குடிகொள்ளல். |
| மகரம் | போட்டிகளில் பரிசில் பாராட்டு கிடைத்து மகிழ்ச்சி அடைதல் மேலதிகாரிகளுக்கு கீழ்ப்படிவதனால் நன்மையும் உயர்ச்சியும் ஏற்படல். |
| கும்பம் | பெற்றோரின் வற்புறுத்தலால் விவாகஞ்செய்ய முற்படல் மாமன் உதவி செய்தல், நீண்ட நாள் கனவு நனவாதல். |
| மீனம் | பொறுமை சகிப்புத்தன்மையினால் தப்பிப் பிழைத்தல் வெளியூர் பயணத்தை ஒத்திவைத்தல் |

# மக்களின் பிரச்சினைகளை ஆராயும்போது அவர்களின் நலன் சார்ந்தே பார்க்கவேண்டும்

## வலி.வடக்கு மீள்குடியேற்ற சங்கத் தலைவர் தெரிவிப்பு

அரசியல் வாதிகள் மக்களின் பிரச்சினைகளை அரசியல் தேவைக்காக பார்கின்றார்களே தவிர மக்களின் நலன் சார்ந்து பார்ப்பதில்லை என வலி.வடக்கு மீள்குடியேற்ற சங்க தலைவர் சண்முகலிங்கம் சஜீவன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் ஒரு சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் தமது பங்களிப்பினை செலுத்தி வந்தாலும் சிலர் அரசியல் நோக்கத்திற்காக செயற்படுகின்றார்கள்.

வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் பொது மக்களின் 6381 ஏக்கர் காணிகள் இராணுவத்தினரால் சுவீகரிக்கப்பட்டு விட்டன.

இக்காணிகளை கொழும்பில் இருந்து வந்த நில அளவைகள் திணைக்கள அதிகாரிகள் கடந்த 2011 ஆம் ஆண்டு அளந்துள்ளனர். இவ்வளவு காலமும் இதனை மறைத்து வைத்திருந்த இலங்கை அரசாங்கமும் இராணுவத்தினரும், 2013 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆம் திகதி அளக்கும்படி தெரிவித்தன.

ஆனால், அதற்கு முன்னரே அவை அளக்கப்பட்டுவிட்டன காணிகள் அளக்கப்பட்ட வரைபடத்தினை காண்பிப்பதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன. அந்த வகையில், திட்டமிட்ட வகையில், இலங்கை அரசாங்கமும், இராணுவத்தினரும் தமிழ் மக்களின் குடிப்பரம்பலை சிதைப்பதற்கான வேலைகளை செய்து வருகின்றார்கள்.

இந்தக் காணி சுவீகரிப்பிற்கு மக்களின் எந்தவித அனுமதிகளும் இராணுவத்தினராலோ அல்லது அரசாங்கத்தினாலோ பெறப்படவில்லை என்றும் அவர் குற்றஞ்சாட்டினார். அந்த வகையில், வலி.வடக்கு மீள் குடியேற்ற குழு மற்றும், வலி. வடக்கு மக்களும் வன்மையாக கண்டிப்பதாக அவர் தெரிவித்தார்.

இந்த காணிகளின் உரிமையாளர்கள் தமக்குச் சொந்தமான காணிகளை வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இவ்வாறு சபாபதிப்பிள்ளை முகாமிலும் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் நாளை முதல் 20 ஆம் திகதி வரை மாதகல் மற்றும் இளவாலை பகுதிகளிலும் காணிகள் அளப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மேலும் வலி.வடக்கு காணி சுவீகரிப்பு நடவடிக்கையினை நிறுத்தி அவற்றை மக்களிடம் கையளிக்குமாறு அரசாங்கம் மற்றும் பாதுகாப்பு அமைச்சு உள்ளிட்ட யாழ். மாவட்ட கட்டளைத்தள பதியிடம் வேண்டுகோள் விடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (25)

# பூநகரி கலாசார பெருவிழாவில் பேராசிரியரின் நொண்டி நாடகம்

(பூநகரி)

பூநகரி பிரதேச செயலகமும் பிரதேச கலாசார பேரவையும் இணைந்து நடாத்தும் மூன்று இலக்கியப்படைப்புக்களின் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 18ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு பூநகரி மத்திய கல்லூரியில் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் செ.ஸ்ரீனிவாசனும் யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ வணிகபீட பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பியும் கலந்து கொள்வர்.

இந்நிகழ்வில் செல்வி. பொ.நித்தியமதியின் வலிகளின் பொறி கவிதைத் தொகுதி வெளியீடும், பூநகரி கலாசாரபேரவையின் அறியாமலே குறும்பட வெளியீடும் சி.யேசுதாசனின் பூநகரி பிரதேச கூத்துக்கலைக் காவலர்கள் கள ஆய்வுக்கட்டுரை நூலும் வெளியீடு செய்யப்படவுள்ளன.

சிறப்பு நிகழ்வாக பேராசிரியர், சி.மௌனகுருவின் நெறியாள்கையில் நொண்டி நாடகம் இடம்பெறவுள்ளது.என தெரிவித்துள்ளார்.

# சிவத்தமிழ் வித்தகர் கௌரவிப்பும் நூல் அறிமுக வைபவமும்

கோண்டாவில் பொது நூலக தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளாக சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கத்திற்கான கௌரவிப்பும் அவரது நூல்களின் அறிமுக வைபவமும் இடம்பெறவுள்ளன.

இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய மண்டபத்தில் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தலைமையில் இந்நிகழ்வு இடம் பெறவுள்ளது. நிகழ்வில் ஆசியுரையை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளும் சிவ.மகாலிங்கத்தின் நூல்கள் பற்றிய அறிமுகவுரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசனும் நிகழ்த்துவர்.

நிகழ்வில் ஓய்வுநிலைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி. அதிபர் எஸ்.வாமதேவன், கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன், உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய ஆசிரியர் ம.சிவலிங்கம், நல்லூர் ப.நோ.கூ. சங்க தலைவர் பெ.கனகசபாபதிப்பிள்ளை, வேலணை நடராஜ வித்தியாலய ஆசிரியர் கு.பாலஷண்முகன், கே.ரி.சி. கல்வி நிலைய இயக்குநர் ஞான. திருக்கேதீஸ்வரன், இணுவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் தி.சசிதரன் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கவுள்ளனர். (48)

## மைலோ கிண்ண கால்பந்தாட்டம்

# வலிகாமத்திற்கான போட்டிகள் ஆரம்பம்; இன்று காலிறுதி, அரையிறுதி






(மானிப்பாய்)

மைலோ கிண்ண கால்பந்தாட்டத் தொடரின் மூன்றாம் கட்டப் போட்டிகள் நேற்று மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானயின. வலிகாமம் பிரதேச அணிகளுக்கிடையில் நடைபெற்ற இப்போட்டித் தொடரின் காலிறுதி மற்றும் அரையிறுதி ஆட்டங்கள் இன்றைய தினம் நடைபெறவுள்ளன.

நெஸ்லோ லங்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட விளையாட்டுப் பிரிவு ஏற்பாடு செய்துள்ள மைலோ கிண்ணக் கால்பந்துப் போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் தீவகம் யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சிப் பிரதேசங்களைச் சேர்ந்த அணிகளுக்கான தகுதிகாண் போட்டிகள் தற்போது நடைபெற்ற வருகின்றன.

வலிகாமம் பிரதேச தெரிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையிலான தகுதி காண் போட்டிகள் நேற்றுக் காலை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டிகள் விலகல் முறையில் நடைபெற்று வருகின்றன.

இப்போட்டித் தொடரின் முதல் ஆட்டத்தில் வட்டுக்கோட்டை அணியும் வட்டுக்கோட்டை ஜேம்ஸ் அணியும் மோதின. இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் மோதிக் கொண்டால் இரு அணிகளாலும் இறுதி வரை கோல் எதனையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. நிறைவில் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் வட்டுக்கோட்டை ஜேம்ஸ் அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் கல்வளை விநாயகர் அணியும் வட்டுக்கோட்டை அண்ணா அணியும் மோதின. சமபலம் கொண்ட அணிகளாக இரு அணிகளும் முட்டி மோதிக் கொண்டதால் இரு அணிகளாலும் ஒவ்வொரு கோலையே பெற்றுக்கொள்ள முடிந்தது. நிறைவில் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் அண்ணா அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது.

மூன்றாவது போட்டியில் மானிப்பாய் சென். பீற்றர்ஸ் அணியும் மகாத்மா அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் சென். பீற்றர்ஸ் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது.

மற்றுமொரு போட்டியில் குப்பிளான் விக்னேஸ்வரா அணியும் தெல்லிப்பளை நாமகள் அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய நாமகள் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றது.

இதேவேளை, இன்று காலை காலிறுதிப் போட்டிகளும், மாலை அரையிறுதிப் போட்டிகளும் நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். அரையிறுதிப் போட்டியில் வெற்றிபெறும் அணிகள் முதன்மைச் சுற்றுக்கு முன்னேறும். தீவகம் மற்றும் யாழ்ப்பாணப் பிரதேச அணிகளுக்கிடையில் முதல் சுற்று ஆட்டங்கள் நடைபெற்றுள்ளதுடன் தலா இரு அணிகள் முதன்மைச் சுற்றுக்கு முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நேற்றுக் காலை நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் மானிப்பாய் பிரதேச சபை தவிசாளர் சிவகுமாரன், வலிகாமம் கால்பந்தாட் லீக்கின் தலைவர் நவரட்ணராஜா, யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி மோகனதாஸ், மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் சிவநேஸ்வரன், விளையாட்டுக்கழகங்களைச் சேர்ந்த தலைவர், செயலாளர்கள், விளையாட்டு நலன் விரும்பிகள் என பலர் கலந்து கொண்டனர். (93)

## கிரிக்கெட் சபை மீது ரணதுங்க சீற்றம்

(கொழும்பு)

இந்தியாவுடனான கிரிக்கெட் தொடரால் இலங்கை அணி உலகக் கோப்பை போட்டிக்கு தயாராவது பாதிக்கப்பட்டுள்ளது. அதற்கு கிரிக்கெட் சபை நிர்வாகிகளே பொறுப்பு என இலங்கை அணியின் முன்னாள் கப்டன் அர்ஜுனா ரணதுங்க குற்றம்சாட்டியுள்ளார்.

இந்தியாவுடனான ஒருநாள் கிரிக்கெட் தொடரில் விளையாடி வரும் இலங்கை அணி தொடர்ச்சியாக 4 போட்டிகளில் படுதோல்வி கண்டுள்ளது. இந்த நிலையில் இலங்கை அணியின் தோல்வி தொடர்பாக வீரர்கள் மீது குற்றம்சாட்ட மறுத்த ரணதுங்கா மேலும் கூறியதாவது:

இலங்கை அணி இதுவரை மோசமாக விளையாடி படுதோல்வியைச் சந்தித்திருப்பதற்கு இலங்கை கிரிக்கெட் சபையும், விளையாட்டு அமைச்சகம், தேர்வுக் குழு தலைவர் ஜெயசூர்யா, பயிற்சியாளர் அத்தப்பத்து, கப்டன் மத்தியூஸ் ஆகியோரே பொறுப்பு. இந்திய கிரிக்கெட் சபையை திருப்திப் படுத்த முயற்சித்து இலங்கை கிரிக்கெட் அணியை மோசமான நிலைக்குத் தள்ளியிருக்கிறார்கள்.

உலகக் கோப்பை போட்டிக்காக தயாராகி வரும் இலங்கை அணிக்கு, இந்தியாவுடான கிரிக்கெட் தொடர் பயனுள்ளதாக அமையும் என ஜெயசூர்யாவும், அத்தப்பத்துவும் அனைவரையும் நம்ப வைத்தார்கள். ஆனால் அது தவறு என்பது இப்போது நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்தியா-இலங்கை இடையிலான தொடர் உறுதி செய்யப்பட்டபோது இலங்கை வீரர்கள் உடற்தகுதி தொடர்பான பயிற்சி முகாமில் இருந்தமை அனைவருக்கும் தெரியும். மோசமான திட்டமிடலால் இப்போது படுதோல்வியை சந்தித்திருக்கிறது இலங்கை அணி எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கொலின்ஸ், நவஜீவன்ஸ் இன்று பலப்பரீட்சை

(நெல்லியடி)

திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட மாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டம் இன்றைய தினம் மாலை 4.00 மணிக்கு திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் குஞ்சர்கடை கொலின்ஸ் அணியும் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியும் மோதவுள்ளன.

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட இப்போட்டித் தொடர் அணிக்கு 11 பேரைக் கொண்டதாக அமைந்தது.

இதில் பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கிற்குட்பட்ட பல அணிகள் பங்குகொண்டபோதிலும் இறுதிப் போட்டிக்கு குஞ்சர் கடை கொலின்ஸ் மற்றும் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணிகள் தகுதி பெற்றன. இரு அணிகளுக்குமிடையிலான இறுதிப் போட்டி இன்றைய தினம் மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வடமராட்சியில் பலம் பெருந்திய அணிகளாகத் திகழும் கொலின்ஸ் மற்றும் நவஜீவன்ஸ், கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொள்ள மூர்க்கமாகப் போராடும் என இரசிகர்களால் எதிர்பார்க்கப்படுகின்றது. குறிப்பாக, உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி பல கிண்ணங்களை அண்மையில் கைப்பற்றிருப்பது எதிரணிக்கு சவால் நிறைந்தாக இருக்கும் என அதன் ஆதவாளர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

ஆனாலும், பல முன்னணி வீரர்களைக் கொண்டுள்ள கொலின்ஸ் அணி எந்தச் சாவல்களையும் முறியடித்து கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொள்ளும் என அதன் அணி ஆதரவாளர்கள் கருதுகின்றனர். ஒட்டுமொத்தத்தில் இப்போட்டி இரு அணி இரசிகர்களுக்கும் பெரும் விருந்தாக அமையும் என கால்பந்து வல்லுநர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். (12)

## அதி வேகமாக 7000 ஓட்டங்கள் டிவில்லியர்ஸ் சாதனை



அவுஸ்ரேலியாவுக்கு எதிராக அரைச்சதம் விளாசிய தென்னாபிரிக்க கப்டன் டிவில்லியர்ஸ், சர்வதேச ஒரு நாள் போட்டியில் அதிவேகமாக 7 ஆயிரம் ஓட்டங்களை கடந்த வீரர் என்ற புதிய சாதனையை நிகழ்த்தினார். 30 வயதான டிவில்லியர்ஸ் 166 இனிங்ஸ்களில் ஆடி 7019 ஓட்டங்கள் குவித்துள்ளார். இதற்கு முன்பு இந்திய முன்னாள் கப்டன் கங்குலி 174 இனிங்ஸில் 7 ஆயிரம் ஓட்டங்களை எட்டியதே சாதனையாக இருந்தது.

இதேவேளை, தென்னாபிரிக்க, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட முதல் ஒரு நாள் போட்டியில் 32 ஓட்டங்களால் அவுஸ்ரேலிய அணி வெற்றிபெற்றது. நேற்று முன்தினம் பேர்த்தில் நடைபெற்ற இப்பேட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய அவுஸ்ரேலிய அணி 50 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 300 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜோர்ஜ் பெய்லி 70, டேவிட் வோர்னர் 46, ஆரோன் பிஞ்ச், மத்யூ வேட் ஆகியோர் தலா 35, மைக்ஸ்வெல் 29 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் பிலண்டர் நான்கு, ஸ்ரெய்ன் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 301 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி 48.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 268 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் டிவில்லியர்ஸ் 80, மில்லர் 65, டுபிளிஸ்சிஸ் 31, தாஹிர் 22, பெஹார்டியன் 20, மோர்கல் 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கோல்டர் நைல் நான்கு, ஜோன்சன் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக கோல்டர் நைல் தெரிவு செய்யப்பட்டார். இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ஒரு நாள் போட்டி இன்று நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். குருமார் அணிக்கு வெற்றி

(யாழ்ப்பாணம்)

மடுத்தினார் தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட கால்பந்தாட்டப் போட்டியில் வலம்புரம் சவேரியார் குருமட இளைஞர் அணி மற்றும் குருமார் அணிகள் வெற்றிபெற்றுள்ளன.

மடுத்தினார் தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட இக்கால்பந்தாட்டப் போட்டி கடந்த 9ஆம் திகதி யாழ். மடுத்தினார் மைதானத்தில் நடைபெற்றது.

இதில் மடுத்தினார் குருமட மாணவர் அணியும் வலன்புரம் சவேரியார் குருமட இளைஞர் அணியும் மோதின. இதில் சவேரியார் குருமட அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் யாழ். குருமார் அணியும் சவேரியார் குருமட சிரேஷ்ட அணியும் மோதின. குருமார் அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. நிகழ்வில் பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டு களித்தமை குறிப்பிடத்தக்கது. (20)



# சமநிலை

(சோச்சி)

நடப்பு சம்பியன் மேக்னஸ் கார்ல்சன் (நோர்வே) - இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் இடையே நடைபெற்று வரும் உலக சதுரங்க சம்பியன்ஷிப் போட்டியின் 5ஆவது சுற்று ஆட்டம் சமநிலையில் நிறைவடைந்தது.

ரஷ்யாவின் சோச்சி நகரில் நடைபெற்று வரும் இந்தத் தொடரின் முதல் சுற்று சமநிலையில் முடிந்த நிலையில், 2ஆவது சுற்றில் கார்ல்சனும், 3ஆவது சுற்றில் ஆனந்தும் வெற்றி பெற்றனர். 4ஆவது சுற்று ஆட்டம் சமநிலையில் முடிந்ததை அடுத்து, இரு வீரர்களும் தலா 2 புள்ளிகளுடன் சமநிலை வகித்தனர்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் நடந்த விறுவிறுப்பான 5ஆவது சுற்று ஆட்டம் 39 நகர்த்தல்களின் முடிவில் சமநிலையானது. இதையடுத்து, இருவரும் 2.5 - 2.5 என்ற புள்ளிக் கணக்கில் சமநிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# ரசிகரன் ஹட்ரிக் கோல்
## கிண்ணம் வென்றது நேதாஜி



(வல்வை)

வல்வை சைனிங்கஸ் விளையாட்டுக்கழகம் நடாத்திய மாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை வல்வை நேதாஜி அணி கைப்பற்றிக் கொண்டது.

அணிக்கு ஒன்பது பேர் கொண்ட இக்கால்பந்தாட்டத் தொடர் கடந்த வாரம் வல்வை தீருவில் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பல அணிகள் பங்குகொண்ட இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் வல்வை நேதாஜி அணியும் வல்வை ரேவடி இளைஞர் அணியும் மோதிக் கொண்டன.

முற்பாதி ஆட்டத்தில் ரேவடி இளைஞர் அணி முதல் கோலைப் போட்டு முன்னிலை பெற்றது. இதற்குப் பதிலடி கொடுக்கும் முனைப்புடன் நேதாஜி அணி செயற்பட்டபோதிலும் முற்பாதி ஆட்டத்தில் அந்த அணியின் முயற்சிக்கு எந்தவித பலனும் கிடைக்கப்பெறவில்லை.

பிற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் ஆக்ரோஷமாக முட்டி மோதிக் கொண்டன. போட்டியின் இறுதி நேரத்தில் எழுச்சிபெற்ற நேதாஜி அணியின் ரசிகரன் அடுத்தடுத்து மூன்று கோல்களைப் போட்டு அணியை முன்னிலைப்படுத்தியதுடன் ரேவடி இளைஞர் அணியையும் திகைப்படையச் செய்தார். நிறைவில் நேதாஜி அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இப்போட்டியின் ஆட்டநாயகன் விருதை ரசிகரன், தொடர் நாயகன் விருதை நகுலேஸ்வரன், சிறந்த கோல் காப்பாளருக்கான விருதை ஜிவிந்தன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

# தொண்டமானாறு ஒற்றுமை சம்பியன்



(வடமராட்சி)

கம்பர்மலை கம்பன் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் தொடரின் வெற்றிக்கிண்ணத்தை தொண்டமானாறு ஒற்றுமை அணி கைப்பற்றிக் கொண்டது.

யாழ். மாவட்ட மென்பந்து கிரிக்கெட் அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கம்பர்மலை கம்பன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

12 ஓவர்களைக் கொண்ட இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் தொண்டமானாறு ஒன்றுமை அணியும் யாழ். 4 ஸ்ரார் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய ஒற்றுமை அணி நிர்ணயிக்கப்பட்ட 12 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 73 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிரதீப் நான்கு சிக்ஸர்கள், ஒரு பவுண்டரிகள் அடங்கலாக 41, அப்பி 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜெரிக் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 74 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். 4 ஸ்ரார் அணி மதன், சுரேனின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. நிறைவில் யாழ். 4 ஸ்ரார் அணி 12 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 52 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் ஜெரிக் 21, ஜேம்ஸ் 07 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் மதன் மூன்று, சுரேன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் தொண்டமானாறு ஒற்றுமை அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக பிரதீப், தொடர் நாயகனாக ஜோசப் மயூரன், சிறந்த துடுப்பாட்ட வீரராக ஜெரிக், சிறந்த பந்து வீச்சாளராக மணிவண்ணன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.



**யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நடாத்திய கால்பந்துப் போட்டியில் இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்ட யாழ். மத்திய கல்லூரி அணியைக் காணலாம். கடந்த வாரம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி கிண்ணம் வென்றமை குறிப்பிடத்தக்கது.**

விளையாட்டுச் செய்திகள்

# இன்று இறுதி ஒரு நாள்

(ரஞ்சி)

இந்திய, இலங்கை அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இறுதிப் போட்டி இன்றைய தினம் இந்தியாவின் ரஞ்சியில் நடைபெறவுள்ளது. ஏற்கனவே, நடைபெற்ற நான்கு போட்டிகளிலும் இந்திய அணி வெற்றிபெற்று முன்னிலை பெற்றுள்ளது. இந்நிலையில் இப்போட்டியில் ஆறுதல் வெற்றிக்காக இலங்கை அணி போராடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, இந்திய அணியும் முழுமையாக தொடரை வெல்ல முயற்சிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# சந்நிதியான் ஆச்சிரமத்தின் ஞானச்சுடர்

வடமாநிலத்தில் தொண்டை மானாறு பிரதேசம் சந்நிதி முருகனின் புனித பூமியாகையால் பெருமை பெறுகின்றது. இந்த வரலாற்றுப் பெருமை கொண்ட ஆலயக் கடவுள் தனக்கென பிரத்தியேகமான அன்னதான கந்தன், காவடிக் கந்தன் என சிறப்புப் பெயர்கள் கொண்டமைகின்றான்.

சந்நிதியானின் ஒரு பெருமையாக சந்நிதியான் ஆச்சிரமத்தினால் வெளியிடப்படுகின்ற ஞானச்சுடர் சஞ்சிகை அமைகின்றது. சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையானது, மோகனதாஸ் சுவாமிகளின் வழிகாட்டலில் இந்துமத வழிநின்று நற்போதனை செய்து பெருமை சேர்க்கின்ற நூலாக ஞானச்சுடர் வெளிவருகின்றது.

ஐப்பசி 2014, 202 ஆவது ஞானச்சுடர் மலர் ஞான ஒளியாக நறுமணம் வீசுகிறது. ஞானச்சுடர் இதழுக்கு வலுச்சேர்ப்பது யாதெனில் யோகர் சுவாமிகளின் குறள்களை மையமாக கொண்ட நற்சிந்தனை போதனைகளாகும்.

இப் புத்தகத்தில் 23 பேர் நல்ல கனிவான கருத்தக் கொழுப்பான மாம்பழம் போன்ற சுவையுள்ள ஆன்மிகக் கருத்து மாங்கனிகளை வழங்கியுள்ளனர்.

மானுட வாழ்க்கையின் உயிர் நாடி என்ற கட்டுரையை பு.கதிரித்தம்பி அவர்களும், போற்றித் திருவகவல் பற்றி பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்களும், சிலப்பதிகாரத்தில் முருகப் பெருமான் எனும் கட்டுரையை நா.நல்லதம்பி அவர்களும், காவியில் தேயிலை வளர்க்கும் தமிழரிடையே சம்பய் பிரசார அனுபவம் பற்றி ச.லலீசன் அவர்களும், திருவருட்பயன் கட்டுரையை முனைவர் ஆ.ஆனந்தராசன் அவர்களும், திருஞான சம்பந்தரும் சைவமும் பற்றி சி.வ.இரத்தினசிங்கம் அவர்களும், பக்தி என்ற தலைப்பில் ஆர்.வி.கந்தசாமி அவர்களும், பைரவக் கடவுள் வழிபாடு - கு.சிவபாலராஜா, கந்தசஷ்டி விரதமும் சூரன்போரும் - பரமேஸ்வரி நடராஜா, இந்துமதமும் அக்கினியும் - வி.செல்வரத்தினம், சைவ சித்தாந்தம் - இரா.சாந்தன், கம்பராமாயணம் காட்டும் ஆடவர் - அ.சுப்பிரமணியம், கண்டோம் கதிர்காமம் - அன்னைதாசன், சித்தர்களின் ஞானம் - சிவ.மகாலிங்கம், தியாகத்தின் மாண்பு - மு.சிவலிங்கம், ஸ்ரீ கருடபுராணம் - இரா. செல்வவடிவேல், க.கணேசதேவா ஆகியோர் கட்டுரைகள் வரைந்துள்ளனர்.

மேலும் சிறுவர்கதைகள், கவிதைகள், பாடல்கள், வாரியார் சுவாமிகளின் தொடர், நாவலரின் சமய வினாவிடை போன்றனவும் ஞானச்சுடருக்கு ஒளி தருகின்றன. சந்நிதியான் ஆச்சிரம நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரத்தையும் ஞானச்சுடர் மலர் தொடர்ச்சியாகத் தந்துவருகிறது. எழுத்தாளர்கள், பாடலாசிரியர்கள், சுவாமிகள், புலவர்கள், விரிவுரையாளர்கள், ஊடகவியலாளர் என பலரும் பங்கேற்றிருக்கும் ஆன்மிகச் சிறப்பு நூலாக ஞானச்சுடர் வெளிவந்திருக்கின்றது.



மலரின் முன், இறுதிப் பக்கங்கள் கண்ணைக் கவரும் சந்நிதியானின் வண்ணப் படங்களுடன் ரம்மியமாக உள்ளது. சந்நிதியான் ஆச்சிரம கலை பண்பாட்டுப் பேரவையின் ஆசிரியர் குழு சிறப்பாக இதழை உருவாக்கியிருக்கிறது. ஞானச்சுடர் வடமாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் கீழ் (34 சபைகள்) இயங்குகின்ற பொது நூலகங்களில் காணப்படுமாயின் மேலும் பலருக்கு இதனூடான தார்மீக விழுமியங்கள் செல்ல ஏதுவாகும்.

70 பக்கங்களைக் கொண்ட இந்த ஞான இதழ் ஒவ்வொரு இந்துவின் கையிலும் தவழவேண்டும். வருட சந்தாவாக ரூபா 500 மட்டுமே கோரியுள்ளனர்.

இந்த மலரை பெற விரும்புவர்கள் தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம கலை பண்பாட்டுப் பேரவையின் 021-3219599, 021-2263406 ஆகிய தொலைபேசி எண்களில் உரையாடி பெற்றுக் கொள்ளலாம்.

- மாணிக்க வாசகன்


# சமாதானமாக வாழ்வதற்குச் சிறந்த வழி

அமெரிக்க கோடீஸ்வரரான டேவிட் ஒகில்வியின் சுயசரிதையிலிருந்து சில துளிகள் கீழே:

- பாடுபட்டு உழைப்பவர்களை, வியந்து பாராட்டுகிறேன். துடுப்புப் போடாமல் படகிலே உட்கார்ந்து பயணம் செய்வோரை, எனக்குப் பிடிக்காது. உள்ளதற்கும் குறைவாக வேலை செய்வதைக் காட்டிலும், உள்ளதற்கும் அதிகப்படியாக வேலை செய்வதுதான் உற்சாகம்.
- முதல்தர மூளை உள்ளவர்களை போற்றுகிறேன் மூளையில்லாதவர்களைக் கொண்டு, ஒரு பெரிய நிறுவனத்தை நடத்த முடியாது. ஆனால், வெறும் மூளை மட்டும் போதாது; அறிவிலே நேர்மையும் இணைய வேண்டும்.



- உறவுக்காரர்களை வேலைக்கு அமர்த்துவது எனக்குப் பிடிக்காது; அதில், வீண் வம்புகள் பெருகும்.
- மேலதிகாரியை காக்காய் பிடிக்கிறவர்களை வெறுக்கிறேன் ஏனெனில், இந்தப் பேர்வழிகள், தங்களின் கீழே வேலை செய்வோரை சதா கொத்திப் பிடுங்கிக் கொண்டு இருப்பர்.
- தனக்குப் பின், பதவியை ஏற்கக் கூடிய தகுதியுள்ளவர்களாக கீழே உள்ளவர்களை உருவாக்குகிறவர்களை போற்றுகிறேன். மட்டமானவர்களைத் தன் கீழே அமர்த்திக் கொண்டால் தான், தாங்கள் பத்திரமாக இருக்க முடியும் என்று நினைக்கும் நபர்களை கண்டு பரிதாபப்படுகிறேன்.
- மற்றவர்களையும் மனிதனாகக் கருதி, மென்மையாக நடந்து கொள்கிறவர்களை போற்றுகிறேன்; சண்டைக்காரப் பேர்வழிகளை வெறுக்கு ஒதுக்குகிறேன்.
- சமாதானமாக வாழ்வதற்குச் சிறந்த வழி, ஒளிவு, மறைவு இல்லாமல் இருப்பது தான். ப்ளேக் சொன்னார்- "நான் என் நண்பனிடம் சினம் கொண்டேன் அவனிடம் என் கோபத்தைக் கூறினேன் சினம் ஒழிந்தது. நான், என் பகைவனிடம் சினம் கொண்டேன். அதைப் பற்றிக் கூறவில்லை; சினம் வளர்ந்தது..."




## சுவர்த் தத்துவங்கள்

(நூலகத்தில் கண்ட வாசகம்)
இன்று நாம் தலை குனிந்து படிப்பதெல்லாம்
நாளை நாம் தலை நிமிர்ந்து வாழ்வதற்கே...

(ஆட்டோவின் பின்புறத்தில்)
நீ வெற்றிக்காக முயலும்போது
வீண் முயற்சி என்பார்கள்...
நீ வெற்றி பெற்ற பிறகு
விடா முயற்சி என்பார்கள்.

(சலூன் ஒன்றில்)
ஒருவர் உன்னைத்
தாழ்த்திப் பேசும்போது
ஊமையாய் இரு.
புகழ்ந்து பேசும்போது
செவிடனாய் இரு.

(உணவகம் ஒன்றில்)
துணிப்பை என்பது எளிதானது
தூர எறிந்தால் உரமாவது.
பிளாஸ்டிக் என்பது அழகானது
விட்டு எறிந்தால் விஷமாவது.

(கல்லூரி தகவல் பலகையில்)
தன்னிடம் பேசும்போது மூளையையும்
பிறரிடம் பேசும்போது இதயத்தையும்
பயன்படுத்துங்கள்.

(ஒரு விளம்பரப் பலகையில்)
தேவையானவற்றிலிருந்து
தேவைபற்றதைக்
கண்டுபிடிப்பதே மனித இயல்பு.

(தொலைத் தொடர்பு நிலையத்தில்)
மனம் திறந்து பேசுங்கள்.
ஆனால்,
மனதில் பட்டதையெல்லாம் பேசாதீர்கள்.
சிலர் புரிந்து கொள்வார்கள்.
சிலர் பிரிந்துவிடுவார்கள்.

(மருத்துவமனையில்)
என் நலம்
என் கையில்

(லொறி ஒன்றின் பின்புறத்தில்)
சிறகுகள் கிடைத்தால் பறப்பதல்ல நட்பு

மகத்தான காலத்தில் வாழ்ந்த
மனிதர்கள் மகத்தானவர்கள்
மகத்தான காலத்தில் எழுதப்பட்ட
கவிதைகள் மகத்தானவை
மகத்தான காலத்தில் எழுதப்பட்ட
கதைகள் மகத்தான காவியங்கள்
மகத்தான காலத்தில் பூத்த
மலர்கள் மகத்தானவை
மகத்தான காலத்தில் பறந்த
பறவைகள் மகத்தான சிறகுகள் கொண்டவை
மகத்தான காலத்தில்
மகத்தான மழை பெய்தது
மகத்தான காலம் என்பது
எப்போதும் மகத்தானதாகவே இருக்கிறது
மகத்தான காலத்திற்குப் பிறகு
பல யுகங்கள் கடந்தும்
மகத்தான காலம் பற்றியே
மனிதர்கள் பேசுகிறார்கள்
கவிஞர்கள் கவிதைகள் பாடுகிறார்கள்
பெண்கள் கருவில் இருக்கும் அங்கள்

# சினிமா சினிமா



- "படையப்பா" படத்தின் படப்பிடிப்புக்கு சென்று அடுத்த பாடலை கொடுத்துவிட்டு வந்திருக்கிறார் கவிஞர் வைரமுத்து. "ஓ ஓ... கிக்கு ஏறுதே..." என்பது அந்தப் பாட்டு. அதில் "ஜீவன் இருக்கும் மட்டும்... வாழ்க்கை நமக்கு மட்டும்... இதுதான் ரஜினி சித்தர் பாட்டு..." என எழுதியிருந்தாராம். எல்லோரும் "ஆஹா..." என பாராட்ட கவிஞருக்கு மகிழ்ச்சி. பின் வீட்டுக்கு வந்த கவிஞரை அலைபேசியில் அழைக்கிறார் ரஜினி, "எல்லோரும் அந்த பாட்டை பாராட்டுகிறார்கள். ஆனால், எனக்கு

மற்றொரு கதாநாயகியாக த்ரிஷா ஒப்பந்தம் செய்யப்பட்டதால் வருத்தமாகிப்போன அஞ்சலிக்கு இன்னும் அதிர்ச்சி கொடுக்கும் விதமாக, தற்போது மூன்றாவது ஹீரோயினாக கவர்ச்சி ஆயுதத்தை கையிலெடுக்கவும் தயார்..." என்றுள்ளார். கத்ரின்.

- கத்தி படத்தை தொடர்ந்து, விஜய்யின், 58ஆவது படத்தை சிம்புதேவன் இயக்குகிறார். விஜய் முதன்முதலாக நடிக்கும் இந்த சரித்திரப் படத்தில், ஸ்ருதிஹாசனும் ஹன்சிகாவும் நடிக்கின்றனர். இம்சை அரசன் 23ஆம் புலிகேசியில் வடிவேலுக்கு இரட்டை வேடம் தந்த சிம்புதேவன், இப்படத்தில் விஜயையும், இரண்டு வேடங்களில் நடிக்க வைக்கிறார். அதில் ஒன்று காமெடி வேடம்.
- "நயனின் நட்பு காரணமாகத்தான் திருமணம் செய்து கொள்ள பெண் கிடைக்கவில்லை..." என்று சினிமா வட்டார நண்பர்களிடம், ஆர்யா சொல்லி வருவதால், அவர் மீது கோபமாக இருக்கிறார் நயன்தாரா. "நானா இவர் பின்னாடி சுற்றினேன் இவர்தானே என் பின்னாடி சுற்றினார். தவறையெல்லாம் இவர் செய்துவிட்டு, இப்போது என் மீதே பழி போடுவதா..." என்று பதிலடி தந்திருக்கிறார் நயன்.

மகத்தான காலம் பற்றியே
மனிதர்கள் பேசுகிறார்கள்
கவிஞர்கள் கவிதைகள் பாடுகிறார்கள்
பெண்கள் கருவில் இருக்கும் [illegible]ங்கள்
குழந்தைகளுக்கு மகத்தான காலத்தைப் பற்றி
கதைகள் சொல்கிறார்கள்
மகத்தான காலத்தை நினைத்து
மனிதர்கள் ஏங்குகிறார்கள்
ஏனெனில்
அது சூரியனுக்கப்பால்
யாரும் செல்லவியலாத இடத்தில் இருக்கிறது.
- விநாயக முருகன்




அலைபேசியில் அழைக்கிறார் ரஜினி, "எல்லோரும் அந்த பாட்டை பாராட்டுகிறார்கள். ஆனால், எனக்கு என்னமோ, ரஜினி என்கிற பெயர் அந்த பாட்டுக்குள் வர வேண்டுமா... என்று யோசனையாக இருக்கு... என்னை ரஜினி சித்தர் என்று சொல்லலாமா? எனக்குக் கொஞ்சம் கூச்சமாக இருக்கிறது... தயவு செய்து மாற்றிக் கொடுங்கள்" என்றாராம். யோசித்த கவிஞர் உடனே "ஜீவன் இருக்கும் மட்டும்.... வாழ்க்கை நமக்கு மட்டும்... இதுதான் ஞான சித்தர் பாட்டு...." என்று வைத்துக் கொள்ளலாமா என கேட்டிருக்கிறார். "ஆஹா... இதுதான் சிறந்த வழி..." என்று ரஜினி சம்மதம் சொல்ல பாடல் மாறி பதிவாகி இருக்கிறது. தன் பெயர் பாடலுக்குள் வர வேண்டும் என போராடுகிற ஹீரோக்களுக்கு மத்தியில், என் பெயர் பாடலில் வேண்டாம் என போராடிய ரஜினியின் அந்த குணம் வியக்கத்தக்கது" என்கிறார் கவிஞர் வைரமுத்து.



◐ சித்தி பாரதி தேவி, இயக்குநர் களஞ்சியம் ஆகியோருடன் ஏற்பட்ட மோதலால் தமிழ் சினிமாவில் இருந்து விலகிய அஞ்சலி, தெலுங்கு சினிமாக்களில் மட்டுமே நடித்து வந்தார். சுமார் 1 வருட இடைவெளிக்குப் பின் தற்போது சுராஜ் இயக்கும் "அப்பா டக்கர்" படத்துக்காக ஜெயம் ரவி ஜோடியாக நடிக்கிறார். படத்தில் இவர்தானே என பின்னாடி சுற்றினார். தவறையெல்லாம் இவர் செய்துவிட்டு, இப்போது என் மீதே பழி போடுவதா..." என்று பதிலடி தந்திருக்கிறார் நயன்.

◐ தீபாவளிக்கு, விஜயின், கத்தி படத்துடன் தன், பூஜை படத்தை இறக்கி விட்ட விஷால், வருகிற பொங்கலுக்கு, சுந்தர்.சி இயக்கத்தில் தான் நடித்து வரும், ஆம்பள படத்தை வெளியிட முடிவு செய்துள்ளார். அதேநாளில் ரஜினியின், லிங்கா மற்றும் அஜித்தின், 55ஆவது படமான என்னை அறிந்தால் படமும் திரைக்கு வருவது உறுதி செய்யப்பட்டு விட்ட போதும், பின்வாங்காமல் தில்லாக களமிறங்க தயாராகிக் கொண்டிருக்கிறார் விஷால்.

◐ பூஜை படத்துடன், ஹரி இதுவரை, 13 படங்களை இயக்கி விட்டார். ஆனால், ரஜினி, கமல், அஜித் மற்றும் விஜயை வைத்து படம் இயக்கவில்லை. அடுத்தபடியாக கமலை வைத்து இயக்க ஆசைப்படும் ஹரி, அவருக்கு பொருத்தமான கதையை தயார் செய்து கொண்டிருப்பதாக கூறியிருக்கிறார்.

◐ மெட்ராஸ் படத்தில் நடித்த கத்ரின் தெரசா, மலையாளப் படங்களில் நடித்தது வரை, அடக்கி வாசித்து வந்தவர், தற்போது "மலையாள நடிகை நயன்தாரா பாணிக்கு நானும் மாறப் போகிறேன்..." என்று கூறியுள்ளார். "முன்னணி நடிகர்களின் படங்களாக இருந்தால், தமன்னா ரேஞ்சுக்கு

◐ கலை இயக்குநர் சாபு சிரிலிடம் உதவியாளராக "குஷி", "பாய்ஸ்", "லேசா லேசா" உள்ளிட்ட பல படங்களில் பணியாற்றிய அமரன் தற்போது கே.எஸ்.ரவிக்குமார் இயக்கும் ரஜினியின் "லிங்கா" படத்தின் கலை இயக்குநராகியிருக்கிறார்.

◐ "ஜீன்ஸ்", "தசாவதாரம்", "அந்நியன்", "பாய்ஸ்" என ரசிகர்கள் வியந்து பார்த்த படங்களின் கிராபிக்ஸ் தொழில்நுட்பக் கலைஞரான கார்த்திக் ராஜு இப்போது தினேஷ், ஐஸ்வர்யா நடிக்கும் "திருடன் போலீஸ்" படத்தின் இயக்குநராகியிருக்கிறார்.

◐ ஹிந்தியில் ஒரு படத்தில் நடிக்கும் ஓவியா, அந்தப் படம் வெற்றி பெற்றால், அதையடுத்து பொலிவுட் படங்களில் நடிக்கவே முதலிடம் கொடுக்கப் போவதாக கூறுகிறார்.

◐ நடிகர் டெல்லிகணேஷ், தன் மகன் மகாதேவனை கதாநாயகனாக அறிமுகம் செய்ய, சில இயக்குனர்களிடம் கதை கேட்டு வருகிறார்.

◐ இசையமைப்பாளர் ஜி.வி.பிரகாஷ்குமார் ஹீரோவாக நடித்துள்ள, பென்சில் படத்தின் சில காட்சிகளை பார்த்து, அவரது நடிப்பை பாராட்டியுள்ளார் விஜய்.

(லொறி ஒன்றின் பின்புறத்தில்)
சிறகுகள் கிடைத்தால் பறப்பதல்ல நட்பு
சிலுவைகள் கிடைத்தாலும் சுமப்பதுவே நட்பு

(அலுவலகப் பலகையில்)
ஒருமுறை வருவது கனவு
இருமுறை வருவது ஆசை
பலமுறை வருவது லட்சியம்.

(வான் ஒன்றின் பின்புறம்)
ஒரு நிமிடம் யோசிக்காமல்...
பேசுவது மட்டுமல்ல,
முந்துவதும் கூட,
ஆபத்தானதுதான்.

(வெளிவரப்போகும் செய்தித்தாள் ஒன்றுக்கு செய்த விளம்பரம்)
தொட்டால் காகிதம்
தொடர்ந்தால் ஆயுதம்

(அலுவலகத்தில்)
முதுகுக்குப் பின்னால் செய்யும் செயல்...
பிறரைத் தட்டிக் கொடுக்கும் செயல் மட்டுமே.

(வங்கிப் பலகையில்)
நட – அதிர்வின்றி
பேசு – பணிவாக
சுவாசி – ஆழமாக
தூங்கு – அமைதியாக
உடுத்து – அழகாக
செயல்படு – அச்சமின்றி
உழை – உண்மையாக
சிந்தி – சுயமாக
நம்பு – சரியாக
பழகு – நாகரிகமாக
ஈட்டு – நேர்மையாக
சேமி – சிறிதாவது
செலவிடு – யோசித்து
படி – முடிவின்றி
மரணி – பயமின்றி

# புதிய கோணம்... புதிய பார்வை!

மகாபாரதக் கதாபாத்திரங்களை வேறொரு கோணத்தில் மறுஆய்வு செய்து, விஜயராஜ் எழுதியுள்ள நூலிலிருந்து:

துரியோதனன் - பேராசைக்காரன், முன்கோபி, பாண்டவர்களை - சூதாடி காட்டுக்கு விரட்டியவன், பாரத யுத்தத்துக்குக் காரணமானவன் - என்றுதான் பொதுவாக, பாரதக்கதை அறிந்தவர்கள் அபிப்பிராயம் வைத்திருக்கிறார்கள்.

ஆனால்... ஏகபத்தினிவிரதன் ராமனைப் போலவே, மனைவி பானுமதியைத் தவிர வேறு பெண்களை ஏறெடுத்தும் பார்க்காதவன் துரியோதனன்.

கர்ணனின் திறமையைப் பார்த்து, அவன் பிறப்பின் காரணமாக இழிவுபடுத்தப்படும் அவலம் அறிந்து, அவனுக்கு அங்க நாட்டையும், அளவற்ற செல்வங்களோடு, கஜானாவையும் ஒப்படைத்தவன்.

தான் வழங்கிய செல்வத்தைப் பிறர்க்கு வாரி வழங்கி, வள்ளல் என்று கர்ணன் பெயர் எடுத்த போது, பொறாமைப் படாமல், பெருமைப்பட்டவன்.

அளவற்ற நம்பிக்கை, கர்ணன் மேல் இருந்ததால், அந்தப்புரத்தில் தன் மனைவியோடு சொக்கட்டான் ஆடவிட்டான்.

17ஆம் நாள் யுத்தத்தில் கர்ணன் மாண்டபோது, "நண்பா" என்னைவிட்டுப் போக உனக்கு எப்படியடா மனம் வந்தது. நான் போய் நீயல்லவா இருந்திருக்க வேண்டும். போரில், உன்னை இழந்துதான் ஆக வேண்டும் என்று முன்பே தெரிந்திருந்தால், இந்த யுத்தத்தையே தவிர்த்திருப்பேனடா - என்று கதறியவன்.

ஒற்றை ஆளாக, கடைசிக் கட்டத்தில் போரிடும் போது கூட, பீமனிடமும் பாண்டவர்களிடமும் சமரசம் செய்ய மறுத்தவன்.

"போற்றுதற்குரிய மாவீரர்கள் பீஷ்மர், துரோணாச்சாரியார், கர்ணன், சகுனி போன்றோர் எனக்காக மடிந்திருக்கின்றனர். வெல்வேன் அல்லது வீரமரணம் அடைந்து, சொர்க்கத்தில் அம் மாவீரர்களைச் சந்திப்பேன்" என்று சொன்னவன்.


சொன்னபடியே, ஐவருக்கும் முன் சொர்க்கம் சென்றவன் - என்று துரியோதனன் கோணத்தில், சுவையாக இந்த நூலை எழுதியுள்ளார்.

கர்ணன், துரியோதனனுக்குச் செஞ்சோற்றுக் கடன் தீர்க்க வேண்டியவன், அவனையும் அறியாது இரண்டு சந்தர்ப்பங்களில் துரியோதனனுக்குத் துரோகம் செய்துவிட்டான்.

தேவேந்திரன் கேட்டான் என்பதற்காக, தன் உயிர்காக்கும் கவச, குண்டலங்களைக் கழற்றி தானம் செய்தான்.

குந்தி கேட்டாள் என்பதற்காக, நாகாஸ்திரத்தை அர்ச்சுனன் மீது ஒரு முறைக்கு மேல் எய்ய மாட்டேன். மற்ற நால்வரையும் கொல்லமாட்டேன் என்று வரம் கொடுத்தான்.

சூதாடி, அதர்மமாக பாண்டவர் சொத்துக்களைப் பறித்து, துரியோதனன் அவர்களைக் காட்டுக்குத் துரத்தியவன் என்று சொல்வது சரியென்றால் போர்க்களத்தில், நிராயுத பாணியாக, தரையில் நின்று - தேர்ச்சக் கரத்தை



கர்ணன் தூக்க முயற்சிக்கையில் - கிருஷ்ணன் அறிவுரையின்படி - அர்ச்சுனன் அஸ்திரம் எய்து கர்ணனை வீழ்த்தியது மட்டும் தர்மமா?

ராஜநீதி என்பதே - மன்னர்கள், அடுத்த மன்னர்கள் மீது படையெடுத்து எதிரியை அழிக்க, எத்தகைய அதர்மமான வழிகளையும் கடைப்பிடிக்கலாம் என்பதே...

மகாபாரத யுத்தமே, கிருஷ்ணனும், சகுனியும் நேர்மைக்குப் புறம்பான வழிகளில் நடத்திய ஒன்றுதான்.

சகுனி - சூதாடி, சூது மதிக்காரன், சதிகாரன் என்றே மக்கள் நினைக்கிறார்கள்.

மகாபாரதத்தைப் பொறுத்தவரை, கிருஷ்ணன் - சகுனி இருவருமே ஒரே மாதிரியான வேலையைத் தான் செய்திருக்கிறார்கள்.

பாண்டவர்களுக்காக அந்த வேலையைக் கிருஷ்ணன் செய்தான். துரியோதனனுக்காக சகுனி செய்தான்.

சகுனி செய்தது குற்றம்தான் என்றால் கிருஷ்ணன் செய்தவையும் குற்றமே...

திருதராஷ்டிரனுக்கு, கண் இல்லை என்ற உண்மையை முன்பே அறிந்திருந்தும் சகுனி காந்தாரியிடம் ஏன் சொல்லவில்லை?

திருதராஷ்டிரன் - தனக்கு கண்ணில்லை என்ற உண்மையைத் தெளிவாகத் தெரிந்த பின்னர்தான், காந்தாரி திருமணத்திற்கு ஒப்புக் கொண்டாளா என்று ஏன் விசாரிக்கவில்லை?

இவ்விருவரையும், வாழ்நாள் முழுதும் நான் பார்க்கமாட்டேன் என்ற கோபத்தில், வைராக்கியத்தில், தன் கண்களை காந்தாரி கட்டிக் கொண்டாள்.

அரசர்கள் தங்கள் நாட்டுக்காக, நாட்டு மக்களுக்காக, சதிகள் செய்யலாமாம். சங்காரங்கள் செய்யலாமாம். இதற்குப் பெயர் ராஜ நீதியாம்.

இந்த ராஜநீதியும், தேவையான ஒன்றே என்றுதான் அறிஞர்கள் பலரும் கூட சொல்லியிருக்கிறார்கள். அந்த வரிசையில் சாணக்கியனும் உண்டு. மாக்கியவெல்லியும் உண்டு.

எத்தனை அறிஞர்கள் சொன்னால்தான் என்ன...


சமூகநீதியின் மீது அக்கறை உள்ள மனிதர்கள், இவற்றையெல்லாம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

தங்கை காந்தாரிக்காக அவள் குடும்பத்திற்காக தன்வீட்டை இழந்தான். நாட்டை இழந்தான், மனைவியைப் பிரிந்தான், மகனை இழந்து இறுதியில் தானும் இறந்தான்.

சகுனி ஒரு பாசமலர் அண்ணன்தான் என்று முடிக்கிறார் நூலாசிரியர்.

மகாபாரதக் கதை அறிந்தவர்களுக்கு, மறுவாசிப்பாக சுவை கூட்டும் அழகிய ஆய்வு நூல் இது.





கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் உள்ள யோகலிங்கேஸ்வரர் திருக்கோவிலின் மகா கும்பாபிஷேகம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றபோது....

– வல்வெட்டி நகரசபையின் கீழான –

# கம்பர்மலை-பாரதி ச.சமூக வீதியால்

# போக்குவரத்து செய்யமுடியாத நிலை

## தலைவர்- செயலாளருக்கு இவ்வீதி தெரியாது

தினமும் 1400 முதல் 2000 பேர் வரை பயணிக்கும் கம்பர்மலை பாரதி சனசமூக நிலைய வீதி போக்குவரத்து செய்ய முடியாத அளவிற்கு முற்றாக அழிவடைந்துள்ளது.

போக்குவரத்து செய்யும் பயணிகள் தினமும் குழிகளில் விழுந்தொழும்பி சிறுகாயங்களுடன் செல்லும் அவல நிலை தொடர்ந்த வண்ணம் உள்ளது.

இந்த வீதி இங்கு இருப்பது வல்வெட்டித்துறை நகரசபை தலைவர் செயலாளருக்கு இதுவரை தெரியாது.

இவ்வாறு காட்டமாக தெரிவித்தார். உடுப்பிட்டி வடக்கு சமூக ஆர்வலர் இராமு கந்தசாமி.

சுமார் 40 வருடங்களுக்கு மேலாக மீள்புனரமைப்பு இன்றி அழிந்து போக்குவரத்து செய்ய முடியாத நிலைக்கு மாறியுள்ள வல்வெட்டித்தறை நகரசபையின் கீழான கம்பர்மலை- பாரதி சன சமூக நிலை வீதி தொடர்பாக சமூக ஆர்வலர் கந்தசாமி மேலும் தெரிவிக்கையில்,

கம்பர்மலை -பாரதி சனசமூக நிலைய வீதியை மீள்புனரமைப்பு செய்து தருமாறு இதுவரை 10இற்கும் மேற்பட்ட கடிதங்களை தவிசாளருக்கும் செயலாளருக்கும் அனுப்பி விட்டோம்.

இதுவரை எந்தப்பதிலும் எமக்கு கிடைக்கவில்லை.

புறநெகும நெல்சிப், பிரஸ்டிஜி, சி.பி.ஜி. விசேட நிதி சபை நிதி என ஏராளமான நிதி வந்து குவிகிறது.

ஆனால் 1.5 கி.மீற்றர் நீளமான கம்பர்மலை- பாரதி ச.ச.நிலைய வீதி போக்குவரத்து செய்ய முடியாத அளவிற்கு மாறி விட்டது.

அரச அதிகாரிகள், பொறியியலாளர்கள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், விவசாயிகள், பொதுமக்கள், நெற்கொழு கழுகு விளையாட்டு வீரர்கள் என 1500இற்கும் மேற்பட்டோர் தினமும் பயணம் செய்யும் வீதியாகும்.

இவ்வீதி தொடர்பில் தலைவர் செயலாளர் கூடிய கவனம் எடுத்து இவ்வீதியை முன்னுரிமைப்படுத்தி 2014 இல் முடித்திருக்கவேண்டும்.

ஆனால் 2014 ஆம் ஆண்டு இன்னும் 45 நாட்களில் முடிவடையவுள்ளது.

எனவே வீதி வலையமைப்பில் முன்னுக்கு வந்ததும் மக்கள் பங்கேற்புத் திட்டத்தில் முன்னுரிமைப்படுத்தப்பட்டதும் புறநெகும கொத்தணி திட்டத்தில் முதனமைப்படுத்தப்பட்டதுமான இவ் வீதி 2015 இல் எமக்கு அபிவிருத்தி செய்து தரப்படவேண்டும் என வல்வெட்டித்துறை நகர சபையை கோரி நிற்கின்றோம்.

இப்பிரதேசத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கூட்டமைப்பு சபை உறுப்பினர் சதீஸ், மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் ஆகியோருக்கு வல்வெட்டித்துறை கம்பர்மலை - கொம்மாந்துறை- ஊரிக்காடு நாவலடி, மயிலியதனை மற்றும் வல்வெட்டி மக்கள் தகுந்த பாடங்களை விரைவில் வழங்குவார்கள் என சமூக ஆர்வலர் இராமு. கந்தசாமி கவலையுடன் தெரிவித்தார்.

# வருடாந்த பரிசளிப்பு விழா

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இலக்கம் 286,பிரதான வீதி யாழ்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

கலைத்தூது அழகியல் கல்லூரியின் அதிபர் திருமதி அஞ்சலா அல்போன்சஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் தி. வேல்நம்பியும், சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வித்திணைகளத்தின் அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மதிவாணி விக்னராஜாவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரி கடந்த 2006ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இடம்பெறுகின்ற 6ஆவது பரிசளிப்பு விழா இதுவாகும். இந்நிகழ்வில் கல்லூரி மாணவர்களின் பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளமை குறிப பிடத்தக்கது.

□ □ □

கைதடி சேதுகாவலர் வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை முதல்வர் திருமதி இராஜேஸ்வரி திருஞானசிவத்தின் தலைமையில் பாடசாலைக்கு அருகிலுள்ள மாவடிக்கந்தன் மண்டபத்தில் நடைபெவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிர்திக் கல்விப்பணிப்பாளர் திருமதி சிவத்திரை சிவநாதன் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கணக்காய்வு திணைக்கள உத்தியோகத்தர் வேலாயுதர் தயாளன், தென்மராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கமலாம்பிகை சிறிதரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் அருணாசலம் மனோரஞ்சிதன், இப்பாடசாலையின் ஓய்வுநிலை அதிபர் திருமதி செல்லம்மா வடிவேல், செல்வி.கீர்த்தனா கோபிதரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (90)

# வாசிப்பு மாத நிகழ்வுகளும் திறந்த புத்தகக்கண்காட்சியும்



ஊர்காவற்றுறை பிரதேச சபையில் தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு நேற்று முன்தினம் பல்வேறு நிகழ்வுகள் நடாத்தப்பட்டன.

தேசிய வாசிப்பு மாதம் - ஐப்பசி -திறந்தவெளி புத்தக கண்காட்சியும் மாபெரும் புத்தக விற்பனையும். மற்றும் புத்தக அஞ்சல் ஓட்டமும் விழிப்புணர்வு சித்திர கண்காட்சியும் என்ற தொனிப் பொருளில் இந் நிகழ்வு நடாத்தப்பட்டது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக தீவகம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குஜின்ரஸூம் சிறப்பு விருந்தினர்களாக ஊர்காவற்றுறை பலநோக்கு கூட்டுறவு சங்க பொது முகாமையாளர் திருமதி.வு.மேரி டொரின், ஊர்காவற்றுறை மக்கள் வங்கி முகாமையாளர் எஸ்.சரத் சந்திரார், ஊர்காவற்றுறை தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் ப.சுதாகர் ஊர்காவற்றுறை சம்பத்வங்கி முகாமையாளர். யு.அகிலன் ஆகியோர் கலந்துகொண்டு இந் நிகழ்வினை ஆரம்பித்து வைத்தனர்.

முதலில் புத்தக கண்காட்சி தொடக்கி வைக்கப்பட்டது அதனை தொடர்ந்து புத்தக அஞ்சல் ஓட்டப் போட்டி ஆரம்பித்து வைக்கப்பட்டது பின்னர் இறுதி நிகழ்வாக வாசிப்பு தொடர்பான விழிப்புணர்வு சித்திரப்போட்டி நடைபெற்றது. இத்துடன் புத்தக விற்பனையும் நடைபெற்றது. இந் நிகழ்வில் பெருமளவான பாடசாலை மாணவர்களும் பொது மக்களும் கலந்து கொண்டனர்.

# மாணவர்கள் கல்வி கற்கும் பொற்காலத்தை சோர்வற்ற நிலையில் கொண்டு செல்ல வேண்டும்

## முன்னாள் யாழ்ப்பாணக்கல்லூரி பிரதி அதிபர் வண. ஜி.நடராஜா கோரிக்கை

வாழ்க்கையில் சோர்வுற்றும் விரக்தியுற்றும் காணப்படுபவர்கள் ஓரிரு விடயங்களில் தான் ஆர்வம் காட்டுகின்றார்கள்.

அந்த துறைக்கும் ஆபத்து வந்ததுடன் சிறுமைப் பட்டு போய்விடுகின்றார்கள்

இதை ஆரோக்கியமான அபிவிருத்தியாக கருத முடியாது என வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபர் வண.ஜி.நடராஜா தெரிவித்தார்.

அவுஸ்ரேலியாவில் இருந்து வருகைதந்த முன்னாள் பிரதி அதிபர் வண.ஜி.நடராஜா நவாலி ஹேமலதா ஞாபகார்த்த ச.ச.நிலைய நூலகத்திற்கு நூற்தொகுதியை அன்பளிப்புச் செய்த பின்னர் அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

மாணவர்களின் கல்வி காலம் என்பது பொற்காலம் ஆகும். இந்தக் காலத்தில் மாணவர்கள் ஒரு தடவை எல்லாவற்றிலும் முயற்சி செய்யுங்கள் அந்த முயற்சி பெருவெற்றிக்கு வழிவகுக்கும் ஒருவன் குழந்தை பிராயத்தில் எல்லா விடயத்திலும் ஆர்வம் காட்டுகின்றான் எல்லாவிடயத்தையும் தொட்டுப் பார்க்கவேண்டுமென்று விரும்புகிறான்

ஒருவன் பல்வேறு துறைகளிலே ஆவல் கொண்டு உழைக்கவேண்டும் பல்வேறு கலைகளை பயின்று பார்க்கவேண்டும் ஒரு துறையிலே நாம் இறங்கினால் அன்றி நாம் அத்துறையிலே எவ்வளவு ஆற்றல் படைத்திருக்கின்றோம் என்பதனை அறியமாட்டோம்.

எங்களுக்குள்ளே எத்தனையோ ஆற்றல்கள் மறைந்து கிடக்கின்றன.

இவையாவற்றையும் வெளிக்கொணர வேண்டுமானால் நாம் பல துறைகளிலே ஈடுபட்டு முயற்சிக்கவேண்டும்.

இன்று உயர்தர பரீட்சை ஒன்றுமட்டுமே மனிதனுடைய ஆளுமையை மதிப்பிடுகின்ற ஊடகமாக விளங்குகின்றது. உயர்தரத்திற்கு என்ன பாடங்கள் செய்தால அவற்றிலே என்ன சித்திகளை பெறலாம்.

என்ன சித்திகளை பெற்றாய்? என்று தான் நாம் கேட்டு ஒருவரை மதிப்பீட்டு செய்கிறோம்.

ஆனால் மேலை நாடுகளில் எத்தனையோ ஊடகங்களுக்கு ஊடாக வாலிப பராயம் மேலெழுந்து செல்கின்றது.

பல சமயங்களில் பெரும்படிப்பு படிப்பதற்கோ பிரசித்தி பெற்ற பயிற்சியை பெறுவதற்கோ நமக்கு வசதியில்லை. பணமில்லை என்று கூறலாம்.

நம்மை ஆழ எத்தனையோ வாய்ப்புக்கள் கோரிக்கையற்று கிடக்கின்றன. கல்லூரிகளிலே எத்தனை வாய்ப்புக்கள் ஆசிரியர்களால் கொடுக்கப்படுகின்றன.

நாம் அவ் வாய்ப்புக்கள், சந்தர்ப்பங்களையெல்லாம் சரியாக பயன்படுத்துகின்றோமா?

இவ்வாறாக ஒருவன் பலதுறைகளில் ஆற்றல் பெற்றிருப்பானாகின் அவன் வாழ்க்கையில் வெற்றி பெற்று சந்தோசமாயிருப்பான் இதனை நான் கல்லூரி ஒட்லி மண்டபத்தில் இடம் பெற்ற நிகழ்வில் மாணவர்களுக்கு விளக்கியிருந்தேன் என்றார்.

# ஆசிரியர்களின் சலுகைகள் நிறுத்தம் பாதிப்பை எதிர்நோக்கும் மாணவர்கள்

## அத்தியார் இந்துக்கல்லூரி அதிபர் தெரிவிப்பு

கஷரப்பிரதேச மற்றும் அதிகஸ்ர பிரதேசப் பாடசாலைகளாகத் தெரிவு செய்யப்பட்டிருந்த பாடசாலைகளில் கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த சில விசேட சலுகைகள் நிறுத்தப்பட்டமையால் அவ்வாறான பாடசாலைகளுக்கு கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு செல்வதற்கு ஆசிரியர்கள் பின்னிற்பது மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளில் பாரிய பின்னடைவினை தோற்றுவித்துள்ளது.

எனவே அத்தகைய பாடசாலைகளுக்குத்தொடர்ந்தும் சலுகைகள் வழங்கப்பட வேண்டும். இதற்கான நடவடிக்கைகள் உயர் அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட வேண்டும். இதன் மூலம் கஸ்ரப் பிரதேச மற்றும் அதிகஸ்ரப் பிரதேச பாடசாலைகளில் ஏற்படும் ஆசிரியர் பற்றாக்குறைகளை நிரப்புவதில் ஏற்றபடும் தாமதநிலையினை தவிர்க்க முடியும். இவ்வாறு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் அதிபர் கு.ரவிச்சந்திரன் தெரிவிததுள்ளார்.

அண்மையில் ஆவரங்கால் ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயத்தில் நடைபெற்ற பரிசில் தின நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டிருந்த அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்.

கடந்த காலங்களில் கஸ்ரப் பிரதேச மற்றும் அதிகஸ்ரப் பிரதேசப் பாடசாலைகள் என கிராமப் புறப் பாடசாலைகள் தரப்படுத்தப்பட்டு அதற்கேற்றதாக அப்பாடசாலைகளில் கற்பித்து வந்த ஆசிரியர்களை ஊக்குவிக்கும் வகையில் கஸ்ரப் பிரதேசப் பாடசாலை ஆசிரியர்களுக்கு ஆயிரத்து ஐந்நூறு ரூபாவும் அதிகஸ்ரப் பிரதேசப் பாடசாலை ஆசிரியர்களுக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவும் வழங்கப்பட்டு வந்தது.

இதுதவிர வன்னி இடமாற்றத்தின் போதும் அவர்களுக்கு சலுகைகள் கிடைக்கப்பெற்றிருந்தன. ஆனால் சில வருடங்களிற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டிருந்த மீளாய்வின் போது சில கிராமப்புறப் பாடசாலைகள் அந்நிலையிலிருந்து நீக்கப்பட்டுள்ளன. இதனால் அவ்வாறான பாடசாலைகளில் கடமையாற்றி வந்த ஆசிரியர்களுக்கான விசேட கொடுப்பனவுகள் யாவும் நிறுத்தப்பட்டன. இதன் பின்னர் இவ்வாறான பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் செல்வதற்கு முன்வருவதில்லை இத்தகைய பாடசாலைகளில் பல்வேறு பாடங்களிற்கும் ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவிவருகின்ற போதிலும் ஆசிரியர்கள் அங்கு செல்வதற்குப் முன்வராத காரணத்தால் தொடர்ந்தும் அங்கு ஆசிரியர் வெற்றிடம் காணப்படுகின்றது. இது மாணவர்களின் கல்வியில் பாதிப்பினையும், பல்வேறு உளத் தாக்கங்களையும் ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறான சலுகைகள் இடைநிறுத்தப்பட்ட பாடசாலைகளுக்கு மீண்டும் இச்சலுகைகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் அப்பாடசாலைகளில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேலும் மேம்படுத்திக் கொள்ள முடியும் என்றார். (03)

# மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவது அனைவரினதும் முக்கிய கடமையாகும்

## வடமாகாண பேரவைத்தலைவர் தெரிவிப்பு

கடந்த முப்பது வருட கால யுத்த நிலை மற்றும் அரசாங்கத்தின் திட்டமிட்ட புறக்கணிப்புக்கள், பாகுபாடுகள் காரணமாக தமது வாழ்வாதாரங்களை இழந்தும், தொலைத்து விட்டும் நிரந்தர தொழில் வருமானம் எதுவுமின்றியும் அல்லற்படும் எமது மக்களின் வாழ்வியலையும் வாழ்வாதாரங்களையும் மேம்படுத்துவது மிக மிக அவசியமானது என வடமாகாண பேரவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் ஊடக அறிவிப்பில் தெரிவித்துள்ளார்.

வடக்கில் இருக்கக்கூடிய உற்பத்தி சார் வளங்களை இனங்கண்டு அவற்றைக் கொண்டு உருவாக்கக்கூடிய தொழில்களையும் இனங்கண்டு திட்டங்களைத் தயாரித்து எமக்கு வழங்கியுதவ வேண்டுமென நிலத்திலும் புலத்திலும் வாழும் துறைசார் அறிவு, ஆற்றல், அனுபவம் மற்றும் நிபுணத்துவம் கொண்ட உறவுகளை வடக்கு மாகாணசபை வேண்டி நிற்கிறது.

அத்துடன் இன்றைய நவீன தொழில்நுட்பங்களின் அடிப்படையில் வெளிவாரியான சேவைகளில் எமது இளைஞர்கள் ஈடுபடக்கூடிய வாய்ப்புக்கள் பற்றியும் ஆலோசனைகள் வரவேற்கத்தக்கது.

வடக்கு மாகாணசபை தனித்து நின்று திட்டங்களை தயாரிக்கலாம் என்றோ அமுல்படுத்தலாம் என்றோ கருதவில்லை. மாறாக எமது உறவுகளின் உதவிகளுடனும் ஒத்துழைப்புடனுமேயே எமது மக்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டை முன்னெடுக்கலாம் எனத் திடமாக நம்புகிறது.

இந்த முயற்சியில் எம்முடன் இணைந்து கொள்ள யாழ்ப்பாணம் கைதடியிலுள்ள எமது பேரவைச் செயலகத்துடன் தபால் மூலமாகவோ councilnpc.@gmail.com என்ற மின்னஞ்சல் மூலமாகவோ தொடர்புகொள்ள வேண்டுகின்றோம்.

# சேவை நலன் பாராட்டுவிழா

கிளிநொச்சி இராமநாதபுரம் அ.த.க.பாடசாலையின் அதிபர் சி.திரவியத்தின் சேவைநலன் பாராட்டு விழாவும் கல்விச்சேவையில் இருந்து ஓய்வு பெறும் நிகழ்வும் நாளை நடைபெறவுள்ளது.

இதன்போது பாடசாலைச்சமூகம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட அதிபர்கள் சங்கம் என்பன இணைந்து அதிபரைக் கௌரவிக்க உள்ளது.

சி.திரவியத்தின் 30 வருட கல்விச்சேவையைப் பாராட்டி ஓயவுபெற்றுச் செல்லும் அதிபரின் பாராட்டு மற்றும் கௌரவிப்பு நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் நாளை முற்பகல் 10 மணிக்கு பாடசாலையின் உபஅதிபர் திருமதி.சிவகலையின் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், பழைய மாணவர்கள், கிளிநொச்சி மாவட்டத்தைச்சேர்ந்த கல்விச் சமூகம், அதிபர்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.




அண்மையில் நடைபெற்ற கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டிருந்த வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, மாணவர் ஒருவருக்குப்பரிசில் வழங்குவதையும், கல்லூரி அதிபர் ச.வேல்அழகன் அருகில் நிற்பதையும் காணலாம். (06)

# பதிவிறக்கப் பெட்டகம்

“எப்படியடா மாப்பிளை நீ மட்டும் பெண்டாட்டியோடு சந்தோஷமாகவே இருக்கிறாய்? தங்கைச்சி உன்னைத் திட்டி ஒரு நாள் கூட நான் பார்த்ததில்லையே”

“அதுக்கெல்லாம் சில ட்ரிக்ஸ் இருக்கு... உனக்கெல்லாம் தெரியாது... நீ சின்னப் பையன்”

“என்ன ட்ரிக்ஸ்?”

“ஏதாவது சிக்கல் ஏற்பட்டு, அவள் என்னைத் திட்டப்போகிறாள் என்று எனக்குத் தோன்றினால்... உடனே அவள் முன்னாலே நின்றுகொண்டு நானே என்னைக் கன்னாபின்னா என்று திட்ட ஆரம்பிச்சிடுவேன். அவள் பரிதாபப்பட்டு என்னைச் சமாதானப்படுத்த ஆரம்பிச்சுடுவாள்”

*** *** *** ***

“உன் அப்பாவுக்கு அறிவில்லை என்கிறதை ஒத்துக்கொள்ளுறியா?”

“ஓமோம் ஒத்துக்கொள்கிறேன்”

“ஒத்துக்கொள்ளுறியா? கோபப்படாமல் அமைதியாப் பேசுறியே... ஆமாம் எதை வைச்சு ஒத்துக்கொள்ளுறாய்?”

“உங்களை எனக்குக் கல்யாணம் பண்ணி வச்சாரே... அதை வைச்சுத்தான்”

*** *** *** ***

**அவள்:** அத்தான் பாஸ் பண்ணினதே என்னாலதான் என்று எப்பிடிச் சொல்லுறீங்க மாமா?

**மாமா:** அவன் பெயில் ஆகியிட்டால் அடுத்தது உனக்கும் அவனுக்கும் கல்யாணம்தான் என்று பயமுறுத்தி வச்சிருந்தேன்.

*** *** *** ***

“நகை வாங்கப் போன கடையில யாரோ பெண்ணை உரசிக் கொண்டு நின்று தர்ம அடி வாங்கினீங்களாமே உண்மையா?”

“நகை வாங்கிறபோது உரசிப் பார்த்து வாங்கோணும் என்று நீதானே சொன்னாய்”

*** *** *** ***

**கணவன்:** நான் நாயாய் கத்திக்கொண்டு இருக்கிறன், எங்கயடி போனாய்?

**மனைவி:** பிஸ்கெட் வாங்க...!

*** *** *** ***

**மனைவி:** தூங்கும்போது என் வாய்க்குள் ஈ போயிட்டுதுங்க!

**கணவன்:** தூங்கும் போதாவது உன் வாயை மூடக்கூடாதா?

*** *** *** ***

**மனைவி:** என்னஙக... பொழுது விடிஞ்சு மணி ஏழாகப் போகுது. டாக்டர் சொன்னபடி கொஞ்ச தூரம் நடந்து போயிட்டு வாங்க...

**கணவன்:** ஏதாவது நடக்கிற காரியமா சொல்லடி...

மனைவி: .....!?

*** *** *** ***

“உங்கட நண்பர் உங்களிட்ட கடன் வாங்க வந்திருக்கிறார் போல!”

“எப்படிச் சொல்றாய்?”

“சீனி போடாத தேத்தண்ணியை ரொம்பப் புகழ்றாரே!”

*** *** *** ***

**கணவன்:** (கோபத்தோடு)இன்னுமா சமையல் முடியேல்லை.. நான் ஏதாவது ஹோட்டலுக்கு போய் சாப்பிடவா?

**மனைவி:** இதோ! 5 நிமிஷம் பொறுங்க!

**கணவன்:** அதுக்குள்ள சமையல் முடிச்சிடுவியா?

**மனைவி:** இல்லை. உங்களோடு நானும் ஹோட்டலுக்கு வெளிக்கிட்டிடுவேன்!

*** *** *** ***

**மனைவி:** என்னஙக... உங்களுக்குக் கொஞ்சங் கூட ரசனையே இல்லை. நான் பாட்டுப் பாட ஆரம்பிச்சதுமே நீங்கள் வீட்டை விட்டு வெளியே போயிடுறீங்களே...

**கணவன்:** நான் உன்னை அடிச்சு... நீ அழுறாய் என்று யாரும் தப்பா நினைச்சிடக் கூடாது பார்... அதனாலதான்...

*** *** *** ***

“என்னஙக இன்றைக்கு நான் பிரியாணி செய்யவா... இல்லை ஃப்ரைட் றைஸ் செய்யவா...?”

“டார்லிங் அப்படியெல்லாம் ரிஸ்க் எடுக்காதை... எதையாவது செய் பிறகு அதுக்குத் தகுந்தமாதிரி பேர் வைச்சுக்கொள்ளலாம்...!”

“கொழுப்பு...! இன்றைக்குப் பட்டினிதான்...!”

*** *** *** ***

“உன்னை கல்யாணம் பண்ணினதுக்கு ஒரு எருமை மாட்டை கல்யாணம் பண்ணியிருக்கலாம்”

“நெருங்கின சொந்தத்தில கல்யாணம் பண்ணினால் நல்லதில்லை என்று மருத்துவம் சொல்லுதுங்க”

# வன்முறைக் கலாசாரத்துக்கு வடக்கில் வித்திட்டவர்கள் யார்?

## நாடாளுமன்றில் அமைச்சர் டக்ளஸ்



எமது மண்ணில் எண்ணற்ற ஊடகவியலாளர்களும், புத்திஜீவிகளும், கல்விமான்களும், சமூக அக்கறையாளர்களும் சமூக மாற்றத்தை விரும்பிய உன்னத தலைவர்களும், அதன் உறுப்பினர்களும் பலி கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

நாடாளுமன்றத்தில் அண்மையில் இடம்பெற்ற வெகுஜன ஊடக தகவற்துறை அமைச்சின் குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்

வடக்கு கிழக்கிலே இந்த வன்முறைக் கலாசாரத்திற்கு வித்திட்டவர்கள் வேறு யாருமல்ல. அன்று தமிழரசு கட்சி என்றும், பின்னர் தமிழர் விடுதலை கூட்டணி என்றும், இன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்றும் மாறி மாறி முகமூடிகளை மாற்றிக் கொண்டிருப்பவர்களே அவர்கள.

தாமே வன்முறைக்கு தூபமிட்டவர்கள் என்ற வரலாற்றை இவர்கள் மறுப்பார்களா என்று நான் கேட்கின்றேன். தம்பிமார்களின் கேள்விகளுக்கு மேடைக்கு பின்னால் நிற்கும் எமது தொண்டர்கள் பதிலளிப்பார்கள் என்று, கேள்வி கேட்ட இளைஞர்களை மேடைக்கு பின்னால் அனுப்பி, தமது அடியாட்களை வைத்து அந்த இளைஞர்களை இரும்புக் கம்பிகளால் தாக்கி துரத்திய தமது கறை படிந்த வரலாற்றை இவர்கள் மறுப்பார்களா என்று கேட்கின்றேன்.

தமக்கு மாற்று கருத்துடைய அரசியல் செயற்பாட்டாளர்களை துரோகிகள் என்று முத்திரை குத்தினார்கள்.

துரோகிகளுக்கு இயற்கை மரணம் இல்லை என்று வெளிப்படையாக முழங்கினார்கள் அதாவது மாற்றுக்கருத்து கொண்டவர்கள் சுட்டுக்கொல்லப்பட வேண்டும் என்று சூசகமாக உத்தரவிட்டார்கள்.

இவர்களது பேச்சுக்களை வேதவாக்காக நம்பிய இளைஞர்கள் பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவிலில் வைத்து துரையப்பாவை சுட்டுக்கொன்றார்கள்.

தமிழ் பேசும் மக்களின் உரிமைப்போராட்ட வரலாற்றிலும் பல வேறு ஊடகங்கள் இன்று வரை செயலாற்றி வந்திருக்கின்றன.

நீண்ட நெடிய எமது உரிமை போராட்ட வரலாற்றில் நானும் ஒரு விடுதலைப் போராட்ட அமைப்பை வழி நடத்தி வந்தவன் என்ற வகையில், ஊடகங்கள் மீதான நேசிப்பும் உறவுகளும் எனக்கும் அதிகளவு இன்று வரை இருந்து வருகின்றது.

ஜனநாயகத்தை தாங்கி நிற்கும் தூண்களின் அத்திவாரங்களுக் நாம் குருதிக் கொடை கொடுத்தவர்கள்.

விலைமதிப்பில்லாத எமது தோழர்களின் உயிர்களே இன்று உருவாகியிருக்கும் ஜனநாயகத்தின் வேர்களுக்கு உரமாக்கப்பட்டிருக்கின்றன.

இவை தவிர, அன்றிலிருந்து இன்று வரை தொடர்ச்சியாக எமது மக்களுடனேயே இடையறாது நான் வாழ்ந்து வந்திருக்கின்றேன.

இடையிடையே அரசியல் தேவைகளின் நிமிர்த்தம் நான் இந்தியாவிற்கோ அன்றி வேறு நாடுகளுக்கோ சென்று வந்திருந்தாலும், எமது மக்கள் துயரக்கடலில் வீழ்ந்து துடிதுடித்திருக்க, நான் அவர்களை கைவிட்டு ஓடிச்சென்று உலக நாடுகளில் உல்லாசம் நடத்திக் கொண்டிருந்தவன் அல்ல எனவும் அவர் தெரிவித்தார்.

# 35 ஆயிரம் தற்காலிக ஊழியர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம்

அரச சேவையில் பணியாற்றும் முறைசாரா மற்றும் தற்காலிக ஊழியர்கள் 35 ஆயிரம் பேர் நிரந்தரமாக்கப்படவுள்ளனர். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த 2015 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் இதற்கான பரிந்துரையை செய்துள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கும் 5 ஆயிரம் தபால் சேவை ஊழியர்களுக்கும் இடையில் அண்மையில் அலரி மாளிகையில் நடைபெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதியின் செயலாளர் இதனைக் கூறியுள்ளார். முறைசாரா மற்றும் தற்காலிகமாகப் பணியாற்றும் ஊழியர்கள் அனைத்து அரச நிறுவனங்களிலும் உள்ளனர்.

தபால் திணைக்களத்தில் இத்தகையதான ஆயிரத்து 500 ஊழியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். நாளாந்த சம்பளம் என்ற அடிப்படையில் பணிபுரிந்து வரும் இந்த ஊழியர்கள் ஏனைய அரச ஊழியர்கள் அனுபவிக்கும் சிறப்புரிமைகளை அனுபவிப்பதில்லை என்றும் லலித் வீரதுங்க குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் இம்முறை சமர்ப்பித்த வரவு-செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்கள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதுவரை தாக்கல் செய்யப்பட்ட வரவு-செலவுத் திட்டங்களில் இப்படியான வரப்பிரசாதங்கள் வழங்கப்பட்டதில்லை எனவும் ஜனாதிபதியின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

# புலிகள் மீதான தடை நீக்கம் மேன்முறையீடு செய்யாது அரசு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடையை ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் நீக்கியமைக்கு மேன்முறையீடு செய்யப் போவதில்லை என்று இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இன்று நாடாளுமன்றத்தில் வைத்து இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த தடை நீக்கத்துக்கு எதிரான மேன்முறையீடு செய்யப்படுமா? என்று ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல கேள்வி எழுப்பி இருந்தார்.

அதற்கு பதிலளிக்கும் போது ஜீ.எல்.பீரிஸ் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

எனினும் தடைக்கு எதிராக மேன்முறையீடு ஒன்றை செய்து, ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்ற விவாதத்தின் வாதியாக செயற்பட முடியும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# தாலிக்கொடி திருட்டு ஊரெழு வாசி கைது

யாழ். ஊரெழுப்பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து நுட்பமான முறையில் திருடிய 13 பவுண் தாலிக்கொடியை வவுனியா பசார் வீதியிலுள்ள கடையொன்றில் விற்பனை செய்ததாகக் கூறப்படும் யாழ்ப் பாணத்தைச் சேர்ந்த இருவரை கடந்த வியாழக்கிழமை கைது செய்ததாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்று சந்தேக நபர்களை கைதுசெய்ததாகவும் பொலிஸார் கூறினர்.

சந்தேக நபர்களிடம் மேற்கொண்ட விசாரணையின்போது, குறித்த தாலிக்கொடியுடன் கைது செய்யப்பட்ட ஒருவர் மீது மோட்டார் சைக்கிள் திருட்டு உட்பட பல்வேறு களவு தொடர்பான வழக்குகள் உள்ளன. யாழ்ப்பாணம், பருத்தித்துறை, மல்லாகம், மன்னார் ஆகிய நீதிமன்றங்களில் உள்ள வழக்குகளுக்காக 12 பிடிவிறாந்துகள் பிறப்பிக்கப்பட்டுள்ள குற்றவாளி இவர் என்பதும் தெரிய வந்துள்ளது.

இதேவேளை, தாலிக்கொடி திருடப்பட்ட வீட்டில் பொலிஸார் சென்று விசாரணை மேற்கொள்ளும் வரை அவர்களின் வீட்டில் தாலிக்கொடி திருடப்பட்டமை அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.

## தினமுரசுக்கு வந்த கடிதம்


# வடமாகாண ஆசிரியர் இடமாற்றம் சமூகத்தில் நகைச்சுவையாக மாறிவிட்டது

- 45 வயதுக்கு மேற்பட்ட பெண் ஆசிரியர்களின் நிலையை உணர்ந்தவர்களா?

வடமாகாணம், கல்வி மேம்பாடு என்பதற்கு பதிலாக கல்வி வீழ்சசியை மீண்டும் எதிர்கொள்ளவுள்ளது. கல்வியில் மறுசீரமைப்பு, கல்வி வெள்ளையறிக்கை, மாணவர் மைய திட்டம், ஆசிரியர் மைய திட்டம் எனப் பல திட்டங்கள் இவ்வாறு நீண்டுகொண்டு செல்கின்றன என்பது ஒருபுறம்.

இத்திட்டம் ஏதோ ஒரு வகையில் ஒரு மாணவ சமூகத்தை மேலே கட்டியெழுப்புவதற்காக காலத்திற்கு காலம் பல வருட கால இடைவெளிகளில் முன்னுரிமைப்படுத்தப்படுகின்றது.

இவ்வாறான திட்டம் வரவேற்கப்படுகின்றது. இது இவ்வாறு இருக்க மூக்கில் இருந்து அடிக்கடி வருகின்ற சளி போல் ஆசிரியர் இடமாற்றமும் சளி போன்று மாறிவிட்டது.



இடமாற்றம்– இடமாற்றக்கொள்கை என்பது ஒரு கொள்கையற்ற வரண்முறையற்ற கல்வியில் சீரழிவினை நடைமுறைப்படுத்துவதற்கென வடமாகாண உயரதிகாரிகளினால் செயற்படுகின்ற சீரழிவுதிட்டங்களை தற்போது நாம்காணலாம்.

மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டங்களில் கூட்டமைப்பு கொம்பு முளைதத நாடாளுமன்ற உறுப்பினர் சிலர் கேள்விகளை கேட்டுவிட்டால் போதும் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் நிலை குலைந்து விடுவார்.

பின்னர்வன்னி இடமாற்றம், தீவக இடமாற்றம்என ஒரு பேப்பர்ஒற்றையை எடுத்து கணனியில் பிறின்ட் செய்து அதிபருக்கு ஊடாக அனுப்பி இடமாற்றம் தொடர்பான நேர்முக தேர்வுக்கு அழைத்து சிப்பிலியாட்டுவது இன்று வடக்கில் வழமையாகிவிட்டது.

வன்னியில் உள்ள வலயக் கல்வியாளர்கள் அங்கு தற்போதைக்கு எல்லா வகுதியான ஆசிரியர்களும் (ஆங்கிலம் தவிர) மிகையாக (Excess) உள்ளனர் எனக் கூறப்படுகிறது.

தீவிகப் பகுதிகளிலும் தற்போதைக்கு ஆசிரியர்கள் போதுமானதாக உள்ளனரென்று கூட்டங்களில் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளா.

இவ்வாறான வேளையில் ஏன் 6 மாதத்திற்கு ஒரு தடவை வலிப்பு மாதிரி வலயக்கல்விப் பணிப்பாளர்கள் இந்த இடமாற்றம் தொடர்பில் நேர்முகம் வைத்து ஆசிரியர்களின் பேண்தகு நிலையை (Sust[illegible]able) குழப்புவதும் – அலக்களிப்பதும் இன்று அவர்களுக்கு ஒரு பகிடிக்கு இடமானதாக மாறிவிட்டது.

இதிலும் ஒரு விநோதம் உள்ளதென்றால் தற்போது 45 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இடமாற்றம் வழங்கும் பெண் ஆசிரியர்கள் பற்றியது தான் இங்கு சிந்திக்கவேண்டியது.

தற்போது 45 வயதுக்கு மேற்பட்ட பெண் ஆசிரியர்கள் கடந்த 20 ஆண்டுகளில் அவர்கள் பல இடமாற்றங்கள், இடப்பெயர்வுகள், இழப்புக்கள், நோய்கள், உயிரிழப்புகள், சொத்தழிவுகள் எனப் பலவற்றைச் சந்தித்துப் பல வேதன ஏற்றங்கள், பதவி உயர்வுகளைப் பெறமுடியாத காலகட்டத்தில் வாழ்ந்த ஆசிரியர்கள் என்பதை இந்த மாகாண உயரதிகாரிகள் ஏன் உணரவில்லை.

சரி இடமாற்றம் தேவை தான் என்றால் வன்னி, தீவகத்திற்கு ஆசிரியர்கள் மிக அவசியமானால் முதல் நியமன ஆசிரியர்களை நியமியுங்கள். சரி அதுவும் அனுபவமில்லாத ஆசிரியர்கள் என்றால் 45 வயதிற்கு உட்பட்ட ஆண், பெண் ஆசிரியர்களை இடமாற்றம்செய்யுங்கள்.

அதிலும் கருணை அடிப்படையில் பெண் ஆசிரியர்கள் நோய்வாய்ப்பட்டு அல்லது ஏதேனும் ஒரு விடயத்தில் பாதிக்கப்பட்டிருந்தால் அவர்களது இடமாற்றத்தை இரத்துச் செய்யவும்.

ஆசிரியர் சங்கங்கள் இங்கு பல உண்டு. அவை ஒவ்வொன்றும் ஒரு விதம். ஆனால், சில ஆசிரியர் சங்கங்கள் 45 வயதிற்கு மேற்ப[illegible] பெண் ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்க வேண்டாம் என உ[illegible]யாக கூறியுள்ளனர்.

கடந்த சில வாரங்களில் ஆசிரியர்களுக்கு நடாத்தப்பட்ட நேர்முகத் தேர்வை நேரில் சென்று பார்வையிட்டு அதிகாரிகளுடன் பேசினேன்.

அங்கு வந்த ஆசிரியர்கள் பலரைத் திட்டித்தீர்த்தனர். இனி மாணவர்களுக்கு கல்வி தேவையில்லை. அவர்களது கல்வியை மழுங்கடிக்கும் நோக்குடன் தான் தற்போது அறிமுகமாகிறது தற்போதைய இடமாற்ற நேர்முகம்.

இந்த நேர்முகம் யார் சொல்லி, எப்படி ஏன் நடாத்தப்படுகின்றது என பதனை விளக்க வேண்டும். வடக்கு ஆளுநர் மற்றும் வடக்கு கல்வி மந்திரி யாராவது 45 வயதுக்கு மேற்பட்டவர்களை (பெண் ஆசிரியர்களை) கட்டாயம் இடமாற்றம் செய்யவேண்டும் என்று குறிப்பிட்டு இருந்தால இவ்விடயம் தொடர்பில் வடக்கு கல்வி செயலாளர் பதில் சொல்ல வேண்டும்.

இல்லாவிடில் மிகையாக உள்ள 45 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு இடமாற்றம் செய்து கல்வியை சீராக்குங்கள் இல்லாவிடில் வடக்கு மாகாண ஆசிரியர்களை திரட்டி மாபெரும் போராட்டம் நடாத்தி இந்த வெள்ளிடை மன்னர்களின் நடவடிக்கைகளை வெளிக்கொண்டு வருவோம் என்பதனை தயவுடன் அறியத்தருகின்றேன்.

சு.க.பேரின்பம்
பாதிக்கப்படும் ஆசிரியர்கள்
சார்பாக - அதிபர் SLPS - I
சுன்னாகம்

## அடுத்த சந்ததிக்கு உதவுவோம்

தமிழர் தாயகத்தில் ஒரு கொடிய யுத்தம் முப்பது வருடங்களாக நடைபெற்று தற்போது யுத்தத்தின் சத்தங்கள் ஓய்ந்துள்ளன. இந்த யுத்தத்தில் தமிழ்மக்கள் பட்ட துன்பங்களும், துயரங்களும் வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாதவை.

இத்துயரங்களோடு பயன்தரும் மரங்களுடன் கற்பகதருவான பனை மரங்களும் பனை வளங்களும் அழிக்கப்பட்டதை யாராலும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது.


பனை மரங்களைத் தறிப்பதற்கு கட்டுப்பாடு இல்லை. எனில் எஞ்சியிருக்கும் பனை வளங்களும் இன்னும் சிறிது காலத்தில் அழிந்து எமது எதிர்கால சந்ததிக்கு பனை வளமே தெரியாது போய் புகைப்படத்திலேதான் காட்ட வேண்டிவரும்.

எனவே எமது பிரதேசத்தில் அழிந்து போன பனை வளத்திற்குப் பதிலாக பனை விதைகளை நாட்டி எதிர்காலத்திற்கும் மது அடுத்த சந்ததிக்கும் உதவுவோம். உறவுகளே முன் வாருங்கள்

- மு.சந்திரன்

06. 250g தேயிலையின் விலை ரூபா 80ஆகும். 500g தேயிலையும்,1kg சீனியையும் வாங்கிய குமார் கடைக்காரருக்கு ரூபா 250ஐ கொடுத்தார் எனின் 2kg சீனியின் விலை யாது?.................................

07.



1. சிறிய சதுர கட்டம் ஒன்றின் ஒருபக்க நீளம் 1cm ஆகும். எனின் நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவு யாது?


2. நிழற்றப்பட்ட பகுதி முழு உருவினதும் என்ன பங்கு என்பதை பின்னத்தில் தருக?

.....................................

08. சதுரவடிவக்காணி துண்டொன்றில் 0.3 பங்கு மகனுக்கும், 0.4 பங்கு மகளுக்கும் வழங்கப்பட்டது மீதி பங்குகளின் மொத்தபரப்பு 150m சதுரப்பரப்பாகும். முழுக்காணியின் மொத்த பரப்பு யாது?

.....................................

09.




1. கொழும்பில் இருந்து குருநாகல் வரையிலான தூரம் யாது?

.....................................

2. மாத்தறையில் இருந்து கொழும்பு வரையிலான தூரம் யாது?

.....................................

3. காலியின் இருந்து கண்டி வரையிலான தூரம் யாது?

.....................................

10. ஒரு பைக்கற்றில் 60 மிட்டாய்கள் உள்ளன. அவற்றை எனது 9 நண்பர்களுக்கு 8 வீதம் வழங்குவதற்கு போதாமல் போன போது இன்றும் ஒரு பைக்கற் வாங்கப்பட்டது. வாங்கப்பட்ட பைக்கற்றில் தற்போது உள்ள மிட்டாய்களின் எண்ணிக்கை யாது?

.....................................

11. நான் வைத்திருந்த பணத்தில் 2 மடங்கு பணத்தை தம்பி வைத்திருந்தான். தம்பி வைத்திருந்த பணத்தில் இருமடங்கு பணத்தை அக்கா வைத்திருந்தாள். தம்பி வைத்திருந்த பணம் 40 ரூபா எனின் மூவரும் வைத்திருந்த பணத்தின் மொத்த பெறுமதி யாது?

.....................................

12. 50 ரூபாவிற்கு 10 பழங்களை வாங்கிய வியாபாரி ஒவ்வொரு பழத்தையும் 50சத இலாபத்துடன் விற்றான். எனின் அவனுக்கு கிடைத்த இலாபம் எவ்வளவு?

.....................................

14) இலங்கை நாட்டின் அமைவே தனி அழகு என்ற கருப்பொருளில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். இலக்கணத்தொடர்பு, எழுத்துக்கூட்டல் என்பன சரியாக அமைய வேண்டும்.

01.....................................


02.....................................

03.....................................

15




புள்ளிக்கோட்டில் வரவேண்டிய உருவை தெரிவு செய்க?



கடந்த 14.11.2014 பிரசுரமாகிய விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01.3 | 02. 1 | 03. 3 | 04. 3 | 05. 1 | 06.2 | 07. 1 | 08. 2 | 09.1 | 10.2 | 11. 1 | 12.1 |
| 13. 1 | 14.2 | 15.3 | 16.2 | 17.3 | 18.2 | 19.2 | 20.2 | 21.1 | 22. 3 | 23.1 | 24.3 |
| 25.1 | 26. 2 | 27. 3 | 28.2 | 29.2 | 30.3 | 31.3 | 32.1 | 33.2 | 34. 2 | 35. 2 | 36. 2 |
| 37. 3 | 38. 2 | 39. 2 | 40.2 | 41.3 | 42.1 | 43.3 | 44.3 | 45.2 | 46.1 | 47.2 | 48.1 |
| 49.2 | | | | | | | | | | | |

பயிற்சி வினாக்களின் விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும்



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - II

1 மணி 15 நிமி

# கல்வி முரசு



1 தொடக்கம் 12 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்க

01) பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

வறுமையால் வாடும் என் குடும்பத்தின் அவலத்தை எவ்வாறு உரைப்பேன்? பசியால் ஊன்வற்றி உடல் மெலிந்து உருக்குலைந்து போனாள் என் மனைவி ஆடிப்பாடி மகிழவேண்டிய என் அருமை மகளோ குரல் எடுத்து அழவும் சக்தியற்றுக்கிடக்கின்றாள். அருமைத்தாயின் முகம் பார்த்து பசியால் அழுகிறது. பச்சிளம் குழந்தை அவளோ பாலில்லாததால் பால் நிலாவைக்காட்டி தானும் அழுகின்றாள்.

01. துன்பம் என்னும் சொல்லின் ஒத்தகருத்து சொல்லை தருக? .....................................
02. கணவன் என்ற சொல்லுக்கான எதிர்பாற்சொல்லை தருக? .....................................
03. பந்தியில் இடம் பெற்றுள்ள உவமைச்சொல்லை தெரிந்து எழுதுக?.....................................
04. பந்தியில் இடம் பெற்றுள்ள இணைமொழியை குறிப்பிடுக? .....................................
05. அஃறிணை நிகழ்கால வினைச்சொல் தருக? .....................................
06. பந்தியில் இடம்பெற்றுள்ள பெயரடைமொழியை குறிப்பிடுக? .....................................

02) தனிச்சொல்லை எழுதுக.

01. விசாரணை முடிவில் நீதிபதியால் வழங்கப்படுவது .....................................
02. அரண்மனையில் பெண்கள் வசிக்கும் இடம் .....................................
03. நூலுக்கு இன்னொருவரால் வழங்கப்படும் உரை .....................................

03) பழமொழிகளுக்கான கருத்தினை எழுதுக.

01. அன்பான சினேகிதனை ஆபத்தில் அறியலாம் .....................................
02. இரக்கபோனாலும் சிறக்கப்போ .....................................

04) பழமொழிகளின் பகுதியை எழுதுக

01. முற்பகல் செய்யின் ..................... விளையும்
02. வினைவிதைத்தவன் .....................................

05) மரபுத்தொடர்களின் கருத்தினை எழுதுக.

01. பொடிவைத்தல் .....................................
02. முகம் மலர்தல் .....................................

06) இடைவெளி நிரப்புக.

01. குரங்குக்கு மந்தி எனின் நாய்க்கு .....................................
02. மாடு பசு எனின் ஆடு .....................................
03. மயில் அகவும் எனின் புறா .....................................

07) இடைவெளி நிரப்புக.

01. காந்தி மகானுக்கு பெற்றோர் .....................யை திருமணம் செய்து வைத்தனர்
02. காந்தியடிகள் எழுதிய ..................... அவரது சுயசரிதை ஆகும்.
03. இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண ..................... செய்து விடல்

08) கருத்தினை ஆங்கிலத்தில் எழுதுக.

01. ஆடு .....................................
02. புலி.....................................
03. சிங்கம்.....................................

09) கருத்தினை தமிழில் எழுதுக
01. bring me the book please ..............................................

10) கருத்தினை தமிழில் எழுதுக.
01. வித்யா (G) காரய ............................ 02. சிஷ்யயா ............................

11) கருத்தினை சிங்களத்தில் எழுதுக
01. ஆசிரியர் வருவாரா? ..................................
02. விலையை குறைக்க முடியாதா? ..................................

12) மிகப்பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக
01. குஞ்சுப்பருவத்தில் தாமாக இரையை தேடி உண்ணும் ஆற்றல் கொண்டது?
1) மைனாக்குஞ்சு 2) கோழிக்குஞ்சு 3) காகக்குஞ்சு 4) கொக்குக்குஞ்சு

02. பின்வருவனவற்றுள் பூச்சியுண்ணிகள் கூட்டம் அல்லாதவை எவை?
1) சிலந்தி -லேடிபேட் 2) ஓணான் - கும்பிடுப்பூச்சி 3) உடும்பு - முதலை 4) தவளை - மைனா

03. சோடியாக சூழலில் சுதந்திரமாக திரியும் பறவைகள் யாவை?
1) மைனா - கொண்டைக்குருவி 2) கிளி - கொக்கு
3) மீன்கொத்தி - நரைப்புளுணி 4) வௌவால் - வல்லூறு

04. பிறந்தவுடன் உடனடியாக எழுந்து நடக்க கூடிய பிராணிகள் எவை?
1) நாய் - பூனை 2) யானை - மாடு 3) அணில் - மான் 4) ஆடு - பூனை

05. தேசிய இலட்சனையில் இடம்பெறாத கருத்து யாது?
01) தருமத்தையும், நீதியையும் காத்தல்
02) உலக நிலைப்பாடுகளை உணர்ந்து வாழுதல்
03) சிங்கத்தை போன்று வீரம் உடையவர்களாக மக்கள் வாழுதல்
04) தன்னிறைவையும், சௌபாக்கியமும் பொதிந்த வாழ்வையளித்தல்

06. தேசியக்கொடியின் மகத்துவத்தில் இல்லாத அம்சம் ஒன்று
01) தேசத்தில் ஒற்றுமையை வலியுறுத்தல்
02) தேசத்தில் வாழும் இனத்தவர்களை பிரதிநிதித்துவப்படுத்தல்
03) மக்கள் வாழ்க்கையில் பேண வேண்டிய அறக்கருத்துக்களை போதித்தல்
04) தேசத்தின் சொத்துக்களை வலியுறுத்துகின்றது

07. வெகுவிரைவில் காலாவதியாகும் உணவு பொருட்களின் கூட்டம்?
01) யோகட் - பாண் 2) மென்பானம் - பிஸ்கட் 3) சொக்லேட் - சீஸ் 4) பருப்பு - தேயிலை

08. உருவில் உள்ளவர்கள் முறையே




1) ஆனந்த சமரக்கோன் ஆனந்த குமாரசுவாமி
2) ஆனந்த குமாரசுவாமி ஆனந்தசமரக்கோன்
3) D.P ஐயதிலக்க, C.W.W கன்னங்கரா
4) ஜேம் பீரிஸ், டு.சு சேனாநாயக்க

09. மேல் மாகாணத்திலும், வடமத்திய மாகாணத்தினதும் மலர்கள் முறையே
01) வெட்சி, கொன்றை 2) கொன்றை வெண்தாமரை
03) வெண்தாமரை, கொன்றை 4) நீலஅல்லி, நந்தியாவட்டை

10. மன்னம்பிட்டிய பாலமும், அனல்மின் நிலையமும் இடம்பெற்றுள்ள தாள் காசுகள் முறையே
01) ஐம்பது ரூபா, ஐந்நூறு ரூபா 2) ஆயிரம் ரூபா, நூறு ரூபா
03) ஐம்பது ரூபா, நூறு ரூபா 4) ஐயாயிரம் ரூபா, இருபது ரூபா

11. உருவில் உள்ள விளையாட்டுக்கள் முறையே
01) பாண்டியாட்டம், கிட்டிப்புள்ளடித்தல்
02) கொக்கான் விளையாடுதல், சடுகுடு
03) சடுகுடு, தாயம் போடுதல்
04) பல்லாங்குழி, தாயம் போடுதல்





12. பதுளை, குருநாகல் ஆகிய இரண்டு மாவட்டங்களும் உள்ளடக்கப்பட்டுள்ள மாகாணங்கள் முறையே
01) ஊவா மாகாணம், மேல்மாகாணம் 02) ஊவாமாகாணம், வடமேல் மாகாணம்
03) வடமேல் மாகாணம், மத்திய மாகாணம் 04) வடமேல் மாகாணம், ஊவாமாகாணம்

13. சட்டையின் கரையை மடித்து தைப்பதற்கும், கைக்குட்டையின் கரையை மடித்து தைப்பதற்கும் பயன்படும் தையல் வகைகள் முறையே
01) சோம்தையல், கம்பளி தையல் 02) கம்பளி தையல், சோம்தையல்
03) நரம்புத்தையல், சோம் தையல் 04) புள்ளடித்தையல், கம்பளி தையல்

14. இலங்கை நாட்டுக்கு உரித்தான மீனினமும், பாம்பினமும் முறையே,
01) எண்ணெய் விரியன், நீலத்திமிங்கலம் 02) வெள்ளை சுறா, பச்சை விரியன்
03) மணலைப்பாம்பு, புள்ளிகோட்டி 04) கோழிக்கொண்டை, மலைப்பாம்பு

15. மூலிகைகளை பயன்படுத்தி மருத்துவ சேவையினை வழங்கிய மன்னன் யார்?
01) துட்டகைமுனு 2) விமலதருமசூரிய 3) தேவநம்பியதீசன் 4) புத்ததாச

16. இலங்கைக்கு மேற்கு திசையிலும், கிழக்கு திசையிலும் உள்ள நாடுகள்
01) ஆபிரிக்கா, மலேசியா 02) மலேசியா, ஆபிரிக்கா 3) மாலைதீவு, இந்தியா 4) ஆபிரிக்கா, மாலைதீவு

17. உலர்த்துவதன் ஊடாக பேணக்கூடிய உணவுகள்
01) மரவள்ளி, பாகல், பலா, பனங்கிழங்கு
02) உருளைக்கிழங்கு, பாகல், ஈரப்பலா, மீன்
03) இறைச்சி, கொறுக்காய், புளி, மாம்பிஞ்சு
04) பிலிங்காய், மீன், எலுமிச்சை, ஆம்பரங்காய்


18. இலங்கை நாட்டுக்கு உரித்தான மீனினங்களின் கூட்டம்
01) புள்ளிக்கோட்டி, சுறா, சேல்கொண்டை, அழகியசொர்க்கம்
02) நீலத்திமிங்கலம், மஞ்சள் பாரை, சுறா, கோழிக்கொண்டை
03) புள்ளிக்கோட்டி, கோழிக்கொண்டை, சேவல்கொண்டை, அழகியசொர்க்கம்
04) வெள்ளைப்பாரை, ஜெலிபிஸ், திமிங்கலம், விலாங்கு

19. புரியாணி சாவி, உளி, மீயாசு, துருத்தி முதலியவற்றை பயன்படுத்துவோர் முறையே
01) தச்சன், கொல்லன், உழவன், மேசன்
02) ஓடாவி, கொல்லன், உழவன், நாவிதன்
03) செம்படவன், நாவிதன், மேசன், தச்சன்
04) சைக்கிள் திருத்துவோன், தச்சன், மேசன், கொல்லன்

20. கனியுப்புக்கள் அடங்கிய உணவுக்கூட்டம்
01) சீனி, புளி, மாம்பழம் 2) அகத்தி, மாம்பழம், கௌப்பி
03) வல்லாரை, நெத்தலி, கடல்மீன் 4) முருங்கை, அவரை, மரவள்ளி

21. மின்சார தடங்களுக்கும், சமூகவிரோத செயல்களுக்கும் பயன்படுத்த கூடிய தொலைபேசி எண்கள்
01) 119,118 02) 119,1929 03) 1987,119 04) 1919,119

13. கணித வினாக்களுக்கு விடை தருக.
01. கூம்பகம் ஒன்றில் உள்ள கிடையான ஓரங்கள் எத்தனை? ..........................



02. 99910 உடன் 990 சேர்க்க வரும் பெறுமதி யாது? ..............................................
03. அருகில் உள்ள திண்மத்தை புள்ளிக்கோடு வழியே வெட்டிவிட்ட பின் எஞ்சும் திண்மத்தில் உள்ள வளைந்த விளிம்புகளால் உருவாக்கப்படும் முகங்கள் எத்தனை?
..............................................

04. என்னிடம் உள்ள குறிப்பிட்ட தொகை பணத்தை இரட்டிப்பாக்கி அதனுடன் 4 ரூபாவை சேர்த்து 2 ரூபாவை கழிக்க பின் மீதியாக வந்த தொகை 14 எனின் ஆரம்பத்தில் என்னிடம் இருந்த தொகை யாது?
..............................................

05. எனது பிறந்ததினம் 2001.10.05 ஆகும். எனது அண்ணனின் பிறந்ததினம் 1990.11.03 ஆகும். இருவரினதும் வயது வித்தியாசத்தினை வருடங்களிலும், மாதங்களிலும் தருக?
வருடம் .............................................. மாதம் ..............................................

# ஜனநாயக சூழலை உருவாக்க நாம் பங்களிப்பை வழங்கி வருகிறோம்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



ஜனநாயக சூழலை உருவாக்கவும் வளர்த்தெடுக்கவும் நாம் மிகுந்த பங்களிப்பை வழங்கி வருகின்றோம் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்ட வருடாந்த தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றுகூடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாம் எதைச்சொல்லி வந்தோமோ அதையே செய்து வருகின்றோம். எதைச்செய்து வருகின்றோமோ அதையே சொல்லியும் வருகின்றோம்.

இருந்தபோதிலும் துரதிஸ்டவசமாக எம்மைப்பற்றி திட்டமிட்டு தவறான பிரசாரங்கள் சுயலாப அரசியல்வாதிக ளால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையானது எமக்கு மிகுந்த வேதனையை தருகின்றது.

ஊடகங்களை பொறுத்தவரையில் மாற்றுக்கருத்துகளுக்கும் இடமளிக்கப்பட வேண்டும். அதனை விடுத்து மாற்றுக் கருத்துகளுக்கு இடமளிக்காததன் காரணத் தினாலேயே எமது மக்கள் முள்ளி வாய்க்கால்வரையான துன்ப துயரங்களுக்கு உள்ளாகினர்.

எனவே எதிர்காலங்களிலாவது ஊடகங்கள் மாற்றுக் கருத்துகளுக்கு இடமளிக்க வேண்டும் என்றார்.

அந்த வகையில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் பங்கெடுப்பது தொடர்பில் அமைச்சர் அவர்கள் விளக்கும் போது, யார் அதிகாரம் பெற்று வருகின்றார்களோ எமது மக்களின் பிரச்சினைக்கு யார் தீர்வு காணக்கூடியவர்களோ அவர்களுக்குத்தான் நாம் ஆதரவு வழங்கவுள்ளோம்.

அந்த வகையில், மகிந்த ராஜபக்ச ஊடாகவே தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும். 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதில் ஆரம்பித்து அதனூடாக தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டுமென்பதே எமது கட்சியின் நிலைப்பாடாகும்.

1987 ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டிருந்தால் அப்போதே நாம் சுயநிர்ணய உரிமையை பெற்றிருக்க முடியும்.

மாகாணசபை என்பது எமது நீண்ட கால கனவாக இருந்த போதிலும் அது எமது கைகளில் கிடைக்கவில்லை. மாறாக சுயலாப அரசியல் வாதிகளின் கைக்கு கிடைத்தபடியால் ஒரு வருடம் நிறைவு பெற்றுள்ளபோதிலும் அவர்களால் மக்களுக்கான வாழ்வாதார மேம்பாடு களையோ அபிவிருத்தி செயற்திட்டங் களையோ முன்னெடுக்க முடியவில்லை. இதற்கு விருப்பமின்மையும் ஆற்றலின்மையும் பிரதான காரணங்களாக அமைந்துள்ளன.

எம்மை பொறுத்தவரையில் ஜனநாயக சூழலை உருவாக்கவும் வளர்த்தெடுக்க வும் அதனை பாதுகாக்கவும் நாம்மிகுந்த பங்களிப்பை வழங்கியுள்ளோம் தொடர்ந் தும் வழங்கியும் வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தால் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு

கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் கிளிநொச்சி கிளையினால் கடந்த கால அனர்த்தத்தின் போது உயிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு கிளிநொச்சி சென் திரேசாள் கலைக் கல்லூரி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

வண பிதா தயாபரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் ச.மோகனபவன் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் கலந்து கொண்டார்.

கிறிஸ்தவ, இந்து, பௌத்த, இஸ்லாமிய மத குருமார் நிகழ்வில் கலந்து கொண்டு ஆத்ம சாந்தி பிரார்த்தனைகளில் கலந்துகொண்டனர்.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் உட்பட பல நூறு பேர் நிகழ்வில் கலந்துகொண்டனர். கடந்த கால இயற்கை அனர்த்தங் கள், போர் ஆகியவற்றால் இறந்தவர்களுக்கு தீப அஞ்சலி, மலர் அஞ்சலி, மௌனப் பிரார்த்தனை ஆகியவை இடம் பெற்றது. சென்ற வருடமும் இதே போன்ற நிகழ்வு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## மகரஜோதி பெருவிழா

அகில இலங்கை சபரிகிரி ஸ்ரீ ஐயப்ப சுவாமி பீடம் கட்டுவன் கரண்டக்குளம் அருள்மிகு ஸ்ரீ ஐயப்பசுவாமி ஆலய மண்டலபூசை பஜனை மகரஜோதி பெருவிழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கட்டுவன் அருள் மிகு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் மாலை அணிந்து விரதத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதில் 27 ஆம் திகதி கும்பாபிஷேக தின விழாவும், டிசம்பர் 15 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றமும், ஜனவரி மாதம் 12 ஆம் திகதி இருமுடி கட்டும் விழாவும், 13 ஆம் திகதி மகரஜோதி விழாவும் 15 ஆம் திகதி மகரஜோதி தரிசனமும் நடைபெறவுள்ளது.

## நீரிழிவினை முன்னிட்டு விழிப்புணர்வு ஊர்வலம்




உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட 306 வி 1 லயன்ஸ் கழகமும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச்சங்கமும் இணைந்து நடாத்திய விழிப்புணர்வு ஊர்வலம் மற்றும் இனிப்பு நோயின் கசப்பு முகங்கள் எனும் கருப்பொருளிலான கருத்தமர்வும் நேற்றுமுன் தினம் சாவகச்சேரி நகராட்சிமன்ற பொன்விழா மண்டபத்தில் நடைபெற்றது. இதில் நெஸ்ரல லங்கா நிறுவனத்தினர் அனுசரணையாளர்களாகக் கலந்து கொண்டு இலவச இரத்தப் பரிசோதனையை மேற் கொண்டனர்.

மண்டபம் நிறைந்த மக்கள் மத்தியில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் உட்பட வைத்திய அதிகாரிகள் லயன்ஸ் கழக பிரதி நிதிகளும் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

## ஆண்டுவிழா கூட்டம் இன்று

நவாலி சென் பீற்றர்ஸ் றோ.க. த.க.பாடசாலையின் 135 ஆவது ஆண்டு விழா தொடர்பான அபிவிருத்தி கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறும் என பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

பாடசாலை கழகத்துடன் ஒன்றியுள்ள கழக மட்ட தலைவர் செயலாளர்கள் வருகை தந்து கருத்துக்கள் வழங்கமாறு கேட்டுள்ளனர்.

## நல்லூர் கிளை நூலகத்தின் வாசிப்பு மாதப்போட்டி முடிவுகள்

*(நேற்றைய தொடர்ச்சி...)*

பேச்சு தமிழ் தரம் -3

எஸ்.வைஸ்ணவி (புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), சி.அபிநயா (கோப்பாய் நாவலர் வத்தியாலயம்), அநிதுஷா (திருக் குடும்ப கண்ணியர்மடம் பாடசாலை).

தரம் -4

செ.கரோலின் சுவாதி (திருக் குடும்ப கன்னியர்மட பாடசாலை), சு.கஜானன் (புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), உ.ஆருத்தியன் (நல்லூர் தெற்கு விக்னேஸ்வரா வித்தியாலயம்).

*(தொடரும்...)*

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீட்டுத்திட்டம் முக்கியமானது



(யாழ்ப்பாணம்)

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு சொந்த இடங்களில் தொடர்ந்து வாழ்ந்து வரும் நலிவுற்ற மக்களுக்கு உதவ வேண்டிய கடப்பாடு வீடமைப்பு பொதுவசதிகள மற்றும் பொறியியல்துறை அமைச்சுக்கே உரியது என ஈ.பி.டி.பி யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நடைபெற்ற நிர்மாண பொறியியல் சேவைகள் வீடமைப்பு பொது வசதிகள் அமைச்சின் குழு விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யுத்தம் இந்த நாட்டின் பொருளாதாரத்தின் மீதும், மக்கள் வாழ்வின் மீதும் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியது. ஆனால் இதன் தாக்கம் வட மாகாணத்தில் அனைத்துப் பிரதேசங்களில் மட்டுமல்ல வடமத்திய மாகாணத்தின் எல்லைப் பிரதேசங்களிலும் நேரடியாக மக்களின் வாழிடங்களை இழக்கும் நிலைமையைத் தோற்றுவித்தது. யுத்தத்தால் இடம்பெயர்ந்து மீள்குடியேறிய மக்களுக்கு பல்வேறு வீடமைப்புத் திட்டங்கள் மூலம் வீடுகள் கிடைத்தபோதும் இது அவர்களின் தேவையின் 3 இல் 2 பங்கு வீடுகளை மட்டுமே பெறும் வாய்ப்பை வழங்கியுள்ளது. ஏனையவர்கள் இன்றும் தமது வீட்டுத்தேவைக்காக காத்திருக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இதனைவிட யுத்தத்தால் பாதிக்கப்பட்டு தமது சொந்த இடங்களில் தொடர்ந்து வாழ்ந்து வரும் நலிவுற்ற மக்களுக்கும் உதவ வேண்டிய கட்டுப்பாடு எமது அரசின் சார்பில் வீடமைப்பு, பொது வசதிகள் மற்றும் பொறியியல் துறை அமைச்சுக்கே உரியது. இதனைக் விமல் வீரவன்ச அமைச்சர் கவனத்திற்கொள்வார் என எதிர்பார்க்கின்றேன்.

இந்த அடிப்படையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் மீள்குடியேற்ற வீடமைப்பு நன்மைகளைப பெறாத வீட்டுத் தேவையுள்ள நலிவுற்ற குடும்பங்களின் விபரங்களை பிரதேச வாரியாக அறிக்கைப்படுத்த விரும்புகின்றேன்.

இந்த அடிப்படையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் மீள்குடியேற்ற வீடமைப்பு நன்மைகளைப் பெறாத வீட்டுத் தேவையுள்ள நலிவுற்ற குடும்பங்களின் விபரங்களை பிரதேச வாரியாக அறிக்கைப்படுத்த விரும்புகின்றேன்.

இந்த அடிப்படையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் மீள்குடியேற்ற வீடமைப்பு நன்மைகளைப் பெறாத வீட்டுத் தேவையுள்ள நலிவுற்ற குடும்பங்களின் விபரங்களை பிரதேச வாரியாக அறிக்கைப்படுத்த விரும்புகின்றேன்.

நெடுந்தீவுப் பிரதேசத்தில் 137 குடும்பங்களும், வேலணைப் பிரதேசத்தில் 685 குடும்பங்களும், ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் 509 குடும்பங்களும், காரைநகர் பிரதேசத்தில் 758 குடும்பங்களும், யாழ்ப்பாண நகரப் பிரதேசத்தில் 270 குடும்பங்களும், நல்லூர் பிரதேசத்தில் 497 குடும்பங்களும், சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 1675 குடும்பங்களும், சங்கானைப் பிரதேசத்தில் 1414 குடும்பங்களும், உடுவில் பிரதேசத்தில் 420 குடும்பங்களும் தெல்லிப் பளைப் பிரதேசத்தில் 520 குடும்பங்களும, கோப்பாய் பிரதேசத்தில் 4916 குடும்பங்களும், சாவகச்சேரி பிரதேசத்தில் 3262 குடும்பங்களும், கரவெட்டிப் பிர தேசத்தில் 1488 குடும்பங்களும், பருத்தித்துறைப் பிரதேசத்தில் 3352 குடும்பங்களும், மருதங்கேணிப் பிரதேசத்தில 734 குடும்பங்களும் என யாழ். மாவட்டத்தில் மொத்தமாக 20, 737 குடும்பங்கள் நலிவுற்ற பொருளாதாரத்தின் காரணமாக இன்றும் ஒழுகும் கூரைகளுடனான குடிசைகளில் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களின் வீட்டுத் தேவைகளுக்கு, இவர்கள் வீடமைப்பு பொது வசதிகள் மற்றும் பொறியியல் துறை அமைச்சினையே நம்பி இருக்க வேண்டிய நிலைமை உள்ளது. ஆனால் தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் இறுக்கமான நடைமுறைகள் காரணமாக எவ்வித பயனையும் இவர்கள் பெற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது.

எனவே, இந்த நலிவுற்ற மக்களுக்கு உதவும் வகையில் தேசிய வீடமைப்பு அதிகாரசபை தனது நடைமுறைகளை மக்களுக்கு நன்மைதரும் வகையில் இலகுபடுத்தும் கொள்கைத் திட்டமொன்றை வகுக்கவேண்டும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இது தனியே யாழ்ப்பாணத்திற்கோ அன்றி வட மாகாணத்திற்கோ மட்டும் பயனுடையதாக அமையாது. இது முழுநாட்டிற்குமே நன்மை தரும் திட்டமாக அமையும். அமைய வேணடும். இதன்மூலம் இந்த நாட்டிலுள்ள அனைவருக்கும் வீடு எனும் இலக்குக் குறித்த காலத்தில் எட்டப்படும்.

இன்று மீள்குடியமர்ந்த மக்களிடையே ஒற்றை அல்லது இரட்டை அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்கள் 60 வயதுக்கு மேற்பட்ட முதியோர் ஆகியோர் வீட்டுத் திட்டங்களில் உள்வாங்கப்படவில்லை. அநாதரவான இவர்களின் நிலைமைகளையும் கவனத்திற்கொண்டு இவர்களுக்குக் குறைந்த செலவில் வீடுகளை நிர்மாணிக்கும் செயற்றிட்டங்கள் ஊடாக வீட்டு வசதிகளை பெற்றுக்கொள்ள உதவவேண்டும் என்றார்.

# பாகிஸ்தான் இராணுவத்திற்கு பயிற்சியளிக்கும் சீனா

## இந்திய எல்லையில் பதற்றம்



(அபோகர்)

இந்திய நிலைகளை குறி வைத்து அழிக்கும் வகையில், நவீன ஆயுதங்களை கையாள பாகிஸ்தான் இராணுவத்தினருக்கு, சீன இராணுவம் பயிற்சி அளிப்பதாக உளவுத்துறை வெளியிட்டுள்ள தகவலால் எல்லையில் பதற்றம் நிலவி வருகிறது.

ஜம்மு காஷ்மீரில் ரசோரி பகுதியில், சர்வதேச எல்லை அருகே இந்த பயிற்சி நடப்பது தெரிய வந்துள்ளது.

பாகிஸ்தானிலுள்ள பஞ்சாப் மாகாணத்தில் அபோகர் மற்றும் குர்காஸ்பூர் பகுதிகளில், புதிய நிலைகளை பாகிஸ்தான் இராணுவம் நிறுவியிருப்பதையும், எல்லை பாதுகாப்பு படையின் புலனாய்வு பிரிவினர் கண்டுபிடித துள்ளனர்.

ஸ்ரீகந்தா நிலையில், பாகிஸ்தான் துணை இராணுவப் படையின் நிலைகள் இருப்பதும் தெரிய வந்துள்ளது. மேலும் இந்திய நிலைகளை குறிவைத்து அழிக்கும் வகையிலும் முகாம்கள் அமைக்கப்பட்டு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. நாட்டின் தெற்கு எல்லையான இந்திய பெருங்கடலில், சீனா கடற்படை முகாம் அமைத்து அச சுறுத்தி வருகிறது. குறிப்பாக சீன கடற்படையின் நீர்மூழ்கிக் கப்பல்கள் இந்தியப் பெருங்கடலில் இலங்கையின் எல்லையில் முகாமிட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.



ஜி-20 மாநாட்டில் பங்கேற்க அவுஸ்ரேலியா சென்ற தென்கொரிய அதிபர் பார்க்ஸ்ரீசைஹேவை, பிரிஸ்பேன் விமான நிலையத்தில் அரசு உயரதிகாரிகள் வரவேற்றனர்.

# அமைச்சர்களுக்கான வீடுவிவகாரம் போராட்டம் நடாத்தும் சிரஞ்சீவி



(புதுடில்லி)

வீடு ஒதுக்கப்படும் விவகாரத்தில் மத்திய அரசுடன் போராட்டம் நடாத்தி வருகிறார் முன்னாள் மத்திய அமைச்சர் சிரஞ்சீவி.

ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசில் அமைச்சர்களாக இருந்தவர்களுக்கு வீடு ஒதுக்கியது. ஆட்சி மாறியதும் புதிய அமைச்சர்களுக்கு வீடு வழங்கும் விதமாக முன்னாள் அமைச்சர்கள் வீட்டை காலி செய்து தருமாறு மத்திய அரசும் , மத்திய பொதுப்பணித்துறையும் கடிதம் எழுதி வந்தது.இதனையடுத்து முன்னாள் அமைச்சர்கள் பலர்அரச பங்களாக்களை காலி செய்தனர். இருப்பினும் முன்னாள் அமைச்சர்கள் வயலார் ரவி, ராஜிவ் சுக்லா, முனியப்பா மற்றும் சிரஞ்சீவி ஆகியோர் வீட்டை காலி செய்ய மறுத்து மத்திய அரசுடன் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இது குறித்து சீரஞ்சீவி கூறுகையில் மத்தியில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதும் சம்பந்தப்பட்ட அமைச்சகத்திடம் புதிய வீடு ஒதுக்கித்தரும்படி கோரிக்கை விடுத்து கடிதம் எழுதினேன். அரசும் துக்ளேன் பகுதியில் ஒரு வீட்டை காண்பித்தது. அந்த வீட்டில் கடந்த மூன்றாண்டுகளாக யாரும் வசிக்கவில்லை எனவும், வீடு ஒதுக்கும் விடயத்தில் மத்திய அரசு காழ்ப்புணர்ச்சியுட செயற்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

# முதலாவது பறக்கும் கார் விற்பனைக்கு வருகிறது



உலகின் முதலாவது பறக்கும் கார் விற்பனைக்கு வரவுள்ளது, இதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. எதிர்வரும்29ஆம் திகதி இந்த கார் விற்பனைக்கு வரவுள்ளதாக உற்பத்திப்பணியில் ஈடுபட்ட பிரதம பொறியியலாளர் ஸ்டெபன் க்ளீன் குறிப்பிட்டுள்ளார்.

AeroMobil 3.0 என பெயரிடப்பட்டுள்ள இந்த கார் வீதியில் பயணிக்கும் அதேவேளை ஆகாயத்தில் பறக்கவும் செய்கிறது. 1990 ஆம் ஆண்டு முதல் முன்னெடுக்கப்பட்ட முயற்சி தற்போது கைகூடியுள்ளதாக இந்த காரின் உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். எதிர்வரும் 29ஆம் திகதி அவுஸ்ரேலியாவில் நடைபெறவுள்ள The Pioneers Festival இல் இந்த கார் விற்பனைக்காக அறிமுகப்படுத்தப் படவுள்ளது

## உலகச் செய்திகள்

# புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சிறுவனின் “பைலட்” கனவு நனவாகியது



புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சிறுவன் ஒருவன் இந்திய விமானப்படையினர் காட்டிய பரிவால் ஒருநாள் ‘பைலட்’ ஆக தன் கனவை நிஜமாக்கிக் கொண்டிருக்கிறான்.

பிஹாரைச் சேர்ந்தவர் கிரிஷ். இவரது மகன் சந்தன் (வயது14). இவனுக்குப் புற்றுநோய் உள்ளது. சில மாதங்களுக்கு முன்பு அவன் சிகிச்சைக்காக டெல்லியில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனைக்கு வந்தான். ஆனால் அங்கு அவனுக்கு உறவினர்கள் யாரும் இல்லாததால் வீதியில் கடுங்குளிரில் தங்க வேண்டியிருந்தது.

அதைப் பார்த்த சில நல்ல உள்ளங்கள், சுமார் ரூ.12 இலட்சம் நிதி திரட்டி அவனிடத்தில் கொடுத்தனர். தற்போது சிகிச்சை மேற்கொண்டு வரும் அவனுக்கு பைலட் ஆக வேண்டும் என்பது கனவு.

அந்தக் கனவை நிறைவேற்ற அவனது தந்தை மிகவும் போராடினார். இறுதியில் இந்திய விமானப் படையினர் அவருக்கு உதவ முன்வந்தனர். அவர்களின் முயற்சியால் விமானப்படையினரைப் போலவே சீருடை அணிந்து முதலில் ‘சிமுலேட்டரில்“ விமானம் இயக்கப் பயிற்சி பெற்றான். பின்னர் விமானிகளின் துணையோடு உண்மையான விமானத்தில் பைலட்டாகவே பறந்தான்.

பிறகு தரையிறங்கிய அவனுக்கு, சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கப்பட்டன. இதுகுறித்து விமானப்படை யினர் கூறும்போது, ”நாங்கள் இந்த விமானங்களில் பறப்பது பெரிய விடயமல்ல. ஆனால புற்றுநோயுடன் போராடுவதுதான் மிகப்பெரிய விடயம். இந்தச் சிறுவனின் அஞ்சாமையைக் கண்டு நாங்கள் வியக்கிறோம். அவனுக்கு எங்களின் சல்யூட்!” என்று நெகிழ்ந்தனர்.

# கிராமங்களை தத்தெடுக்கும் அரசியல் பிரபலங்கள்

இந்திய மத்திய பிரதேசத்தில் உள்ள கிராமத்தை அமைச்சர் நஜ்மா ஹெப்துல்லா தத்தெடுத்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி சமீபத்தில் எம்.பி.க்கள் கிராமத்தை தத்தெடுக்கும் திட்டத்தை அறிவித்தார். ஒவ்வொரு எம்.பி.யும், ஒவ்வொரு கிராமத்தை தத்து எடுக்க வேண்டும் என்று கூறினார்.


இந்த திட்டத்தின் கீழ் மோடி தனது சொந்த தொகுதியான வாரணாசியில் ஜெயாப்பூர் கிராமத்தை தத்து எடுத்தார். அங்கு எம்.பி. தொகுதி நிதியின் கீழ் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த திட்டத்தின் கீழ் மத்திய மந்திரிகள், எம்.பி.க்கள் ஒவ்வொரு கிராமத்தையும் தத்து எடுத்து வருகிறார்கள்.மத்திய மந்திரி நஜ்மா ஹெப்துல்லா மத்திய பிரதேச மாநிலம் போபால் அருகே உள்ள பாந்தா என்ற கிராமத்தை தத்து எடுத்துள்ளார். இந்த கிராமம் போபாலில் இருந்து 35 கி.மீ. தொலைவில் உள்ளது.

எதிர்வரும் 20ஆம் திகதி நஜ்மா ஹெப்துல்லா பாந்தா கிராமத்துக்கு செல்கிறார். அங்கு அவர் தத்து எடுக்கும் திட்டத்தை முறைப்படி அறிவித்து தொடங்கி வைப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஆங் சான் சூகி போட்டியிட தடைவிதிப்பது அர்த்தமற்றது

## ஒபாமா தெரிவிப்பு



மியான்மர் ஜனாதிபதி தேர்தலில், அந்நாட்டு எதிர்க்கட்சி தலைவர் போட்டியிட தடை விதிப்பது அர்த்தம் அற்றது என அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கண்டனம் தெரிவித்தார்.

மியான்மரில் அடுத்தாண்டு ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது. அங்கு, ஜனநாயக மீட்புக்காக தன்னையே அர்ப்பணித்த எதிர்க்கட்சி தலைவி ஆங் சான் சூகி தேர்தலில் போட்டியிட முடியாது.

அவரது மகன்கள் இருவர், வெளிநாட்டு குடிமகன்கள் என்பதால் ஜனாதிபதி தேர்தலில் அவர் போட்டியிடுவதற்கு அந்த நாட்டின் அரசியல் சட்டப்பிரிவு தடையாக இருக்கிறது.

இந்த நிலையில், கிழக்காசிய உச்சி மாநாட்டுக்கு மியான்மர் சென்றிருந்த அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, யாங்கோனில் எதிர்க்கட்சி தலைவர் சூ கி-யை அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் சந்தித்து பேசினார். இருவரும் கூட்டாக பத்திரிகையாளர்களை சந்தித்தனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சூ கி அதிபர் தேர்தலில் போட்டியிட தடையாக சட்டப்பிரிவை காட்டுகிறார்கள். ஒருவர் தேர்தலில் போட்டியிடுவதற்கு அவரது பிள்ளைகளை தடையாக காட்டுகிற சட்டப்பிரிவு அர்த்தம் அற்றது என ஜனாதிபதி கண்டனம் தெரிவித்தார். ஜனநாயக கண்ணோட்டத்தில் பார்த்தால், குறிப்பிட்ட ஒருவருக்கு எதிராக பாரபட்சம் காட்டுவது என்பது சரியானது அல்ல. எனவும் ஒபாமா கருத்து தெரிவித்தார்.

# கிளாலி மக்களின் புன்னகைக்கு காரணமானவர்களை நினைத்துப்பார்க்க வேண்டும்

## பிரதேச சபை உறுப்பினர் அன்ரன் அன்பழகன் தெரிவிப்பு



2012 ஆம் ஆண்டு மீள்குடியேற அனுமதி வழங்கப்பட்ட போது நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாருடன் மக்களும் தங்களின் ஊரை பல வருடங்களுக்கு பின்னர் பார்வையிட வந்த போது கிளாலி தேவாலயத்தை பார்வையிட அனுமதி மறுக்கப்பட்டிருந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் தற்துணிச்சலாக மக்களை அழைத்து வந்த போது தேவாலயத்தை பார்வையிட்ட மக்கள் கண்ணீர் விட்டு அழுதமையையும் இன்று புன்னகையுடன் வாழ்வதனையும் இந்த இனிய நிகழ்வில் நினைவு கூர்ந்து பார்க்கிறேன் என பச்சிலைப்பள்ளி பிரதேச சபை உறுப்பினர் அன்ரன் அன்பழகன் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளாலி றோமன் கத்தோலிக்கன் தமிழ்க்கலவன் பாடசாலையில் சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தினரால் 21 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட ஒரு மாடி வகுப்பறைக் கட்டடத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்

கிளாலியின் இன்றைய முன்னேற்றதிற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் ஆற்றியசேவை மறக்கமுடியாதது அதனை இந்த மக்கள் நன்கறிவார்கள். கிளாலி பாடசாலை ஆரம்பித்ததிலிருந்து உடனடியாகவே 50 இலட்சம் ரூபா பெறுமதியான வகுப்பறைக் கட்டடத்தை ஒரு மாதத்திற்குள் அமைத்து மாணவர்களின் கல்விச் செயற்பாட்டுக்கு வழங்கியது முதல் சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தை கிளாலிக்கு கொண்டு வந்தது இந்த பிரதேசத்தின் முன்னேற்றத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியது வரை அவரது செயற்பாடுகள் தொடர்கின்றன. கிளாலியின் கடற்றொழில் பிரச்சினைகளை உடனுக்குடன் அறிந்து அமைச்சரையும், அதிகாரிகளையும் அழைத்து வந்து நடவடிக்கைகள் எடுப்பது வரை செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார்.

2012 ஆம் ஆண்டு மீள்குடியேற வந்த போது உள்ள கிளாலியின் நிலைமைகளோடு இன்றைய நிலைமையினையும், அந்த மாற்றத்திற்கு காரணமானவர்களையும் மக்கள் நினைத்துப் பார்க்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

பாடசாலை அதிபா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ் மறைமாவட்ட ஆயர் தோமஸ சௌந்தரநாயகம், கோட்டக் கல்வி அதிகாரி ஆனந்தசிவம், சுவிஸ் நிறுவன பிரதிநிதி மற்றும் ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### மக்களின்..

டம்நாடளாவிய ரீதியில் முன் னெடுக்கப்படுகின்றது. அந்தவகையில், எமது மாவட்டத்தையும் எவ்விதமான பாரபட்சமுமின்றி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இணைத்துக் கொண்டமைக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மரங்களை பாதுகாப்பது பராமரிப்பது மட்டுமன்றி எமது மக்கள் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கும் உரிய வகையில் தீர்வு காணப்பட வேண்டும்.

எமது மக்களின் நிலங்கள் மக்களுக்கே சொந்தமானவை என்பதே எமது நிலைப்பாடாகும்.

அந்தவகையில், மக்களின் நிலங்களை மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதே எமது தலையாய கடமையாகவுள்ள நிலையில் அதனை கருத்தில் கொண்டு இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தொடர்ச்சியான கலந்துரையாடல்களை முன்னெடுத்து வரும் அதேவேளை, நேற்றைய தினமும் கொழும்பில் இதுவிடயம் தொடர்பாக ஜனாதிபதியுடன் கலந்துரையாடியுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

நடைமுறைசாத்தியான வழிமுறையில் மக்களுக்கான சேவைகளை தொடர்ச்சியாக முன்னெடுப்போம் என்பதுடன் வாழ்வாதார பிரச்சினைகளுக்கும் உரிய வகையில் தீர்வு காண்போம்.

அதனடிப்படையில் விசேட நிதியினைப் பெற்று அதனூடாக மக்களுக்கான சேவைகளை நாம் முன்னெடுக்க தயாராகவுள்ள நிலையில் கிடைக்கின்ற வாய்ப்புகளை மக்கள் சரியான முறையில் பயன்படுத்தி மேலும் முன்னேற்றம் காண வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

### புலிகளுக்கு..

புலிகளுக்கு நிதி வழங்கியதை உறுதிசெய்யக்கூடிய ஆதாரங்கள் எம்மிடம் உள்ளன. எனவே இதுகுறித்து நோர்வே அரசாங்கம் விசாரணை செய்ய வேண்டும்.

விடுதலைப்புலிகளை தோற்கடிக்க முடியாது என எரிக் சொல்ஹெய்ம் எம்மிடம் தெரிவித்திருந்தார். அவரது கருத்து பிழையானது என்பதை அரசாங்கம் நிரூபிக்க முடிந்தது. இலங்கை தொடர்பாக ஐ.நா. விசாரணைக் குழுவின் முன்னிலையில் தான் சாட்சியமளிக்க தயார் என சொல்ஹெய்ம் குறிப்பிட்டுள்ளார். இதுகுறித்தும் நாம் எந்த ஆட்சேபனையும் தெரவிக்கவில்லை.- எனத் தெரிவித்தார்.

### வினைத்திறனற்ற...

களாக நிறைவேற்றுவதில் தான் அவர்கள் தங் களது முழு வினைத்திறனையும் செயற்படுத்தியிருக்கின்றார்கள். இவை பிரசாரத்திற்காகவும், வெற்றுக்கோசங்களுக்காகவும் செய்யப்பட்ட தீர்மானங்களே தவிர, எந்தவகையிலும் மக்களுக்கு நன்மை கிடைக்கக்கூடிய தீர்மானங்கள் இல்லை.

வடக்கு மாகாணசபையில் முதலமைச்சர் உட்பட ஏனைய அமைச்சர்கள், உறுப்பினர்கள் அனைவரும் வெறும் கோசங்களைத்தான் எழுப்பிக் கொண்டிருக்கின்றார்கள். அதுவும் நடைமுறைக்கு ஒவ்வாத, இனங்களுக்கிடையே முரண்பாட்டை ஏற்படுத்தக்கூடிய, மக்களிடையே பயத்தையும் பீதியையும் ஏற்படுத்தக்கூடிய இயல்பு வாழ்க்கையைச் சீரழிக்கக் கூடிய கோஷங்களை எழுப்புகின்றனர். அவர்களுக்குத் தெரியும் இது நடைமுறையில் சாத்தியமில்லாத விடயங்களுக்காகத்தான் தாங்கள் கூக்குரலிடுகின்றோம் என்று. ஆனால், பத்திரிகைகளில் தலைப்புச் செய்தியாக வருவதற்கும் தாங்கள் துணிந்தவர்கள் என்று காட்டுவனூடாகத் தங்களது அரசியல் இருப்பைப் பாதுகாப்பதற்காகவும் தான் அந்தக் கோசங்களை எழுப்பிக் கொண்டிருக்கின்றார்கள்.

வடக்கு மாகாண சபை உருப்படியான வினைத்திறன் உள்ள சபையாக இயங்கும்போது தான் அந்த மாகாண சபைக்கு 80 வீதமான வாக்களித்த மக்கள் நன்மை பெறமுடியும். அவர்களது வாழ்வு சிறக்க முடியும். பிரதேசங்கள் அபிவிருத்தி அடையமுடியும்


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட பிரதேச சபைகளின் தவிசாளர்களால் எந்தவொரு சேவையையும் செய்ய முடியவில்லை. அப்படி முழுக்க முழுக்க உங்களுடைய கட்சியின் ஆளுகைக்குட்பட்ட பிரதேச சபைகளில் நடக்கும் ஊழல்களை முதலில் நிறுத்துங்கள்

100 மில்லியன் நிதியில் நெல்சிப் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் திட்டங்களில் ஊழல்கள் நடந்ததென்று அண்மையில் நீங்கள் சொன்னீர்கள். அதை நானும் ஏற்றுக்கொள்கின்றேன். உண்மையில் ஊழல்கள் நடந்திருக்கின்றன. றெஜி என்ற ஒரு Engineer ஊடாக இந்த ஊழல் நடத்தப்பட்டிருக்கின்றது. இந்த ஊழல் எங்கு நடந்திருக்கிறது? உங்களது ஆளுகைக்குள் உள்ள பிரதேச சபைகளில்! அதற்கு பொறுப்பானவர்கள் அந்த பிரதேச சபைகளின் தவிசாளர்கள்தான்

பருத்தித்துறை பிரதேச சபை, வல்வெட்டித்துறை நகர சபை, வவுனியா வடக்கு பிரதேச சபை போன்ற உள்ளூராட்சிச் சபைகளில்தால் ஊழல் நடந்திருக்கின்றது. அந்த சபைகளின் தவிசாளர்கள் உங்களது கட்சிக்காரர்கள்! அவர்களுக்குத் தெரியாமல் ஊழல் நடந்திருக்க முடியாது. ஆகவே, இந்த ஊழலுக்கு உங்களின் தவிசாளர்களும் பங்காளிகள்தான் என்பதை நான் இங்கு வலியுறுத்துகின்றேன்

இந்த ஊழல் தொடர்பாக வட மாகாண முதலமைச்சர் தலைமையில் ஒரு விசாரணைக் கமிசன் நியமிக்கப்பட்டிருக்கின்றது. அந்த விசாரணைக் கமிசன் உண்மையாக, நேர்மையாக விசாரணைகளை ஆரம்பிக்கும்பொழுது இவர்களது ஆளுகைக்குட்பட்ட உள்ளூராட்சிச் சபைகளின் தவிசாளர்கள்தான் பாதிக்கப்படப் போகிறார்கள். சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்களே, நீங்கள் உங்களுக்குள்ளேயே ஒரு போராட்டத்தை ஆரம்பித்திருக்கின்றீர்கள். உங்களுடைய தவறான தவிசாளர்களை நீங்கள் அம்பலப்படுத்துவதை நாங்கள் வரவேற்கின்றோம்என அவர் மேலும் தெரிவித்தார்.

# புலமைப்பரிசிலில் சித்தியடைந்த மாணவர்களுக்கு உதவிகள்



அச்சுவேலி மத்தி சிறுவர் பாடசாலையில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு அச்சுவேலி வர்த்தகர் ஒருவரால் உதவிகள் வழங்கப்பட்டன. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பிறந்த தினத்தை முன்னிட்டு குறித்த வர்த்தகர் இவ் உதவிகளை மாணவர்களுக்கு வழங்கியுள்ளார்.

# இறுதிப்போட்டியும் பரிசளிப்பு விழாவும்

திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் நடாத்திய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியும் பரிசளிப்பு விழாவும் இன்று பி.ப. 2.30 மணியளவில் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் பி.ப.3.00 மணிக்கு நடைபெறும் தாட்சிப்போட்டியில் றோயல் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து விண்மீன் விளையாட்டுக்கழகம் விளையாடவுள்ளது.

பி.ப.4மணிக்கு நடைபெறும் இறுதிப்போட்டியில் நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஓரினஸ் விளையாட்டுக்கழகம் விளையாடவுள்ளதுடன் பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறும். (18)

### யாழ். கொழும்பு...

மில்லியனுக்கும் அதிகமான வருமானம் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனை அடுத்தே பயணத்துக்கு எடுக்கும் நேரத்தை குறைப்பது குறித்து திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக பொலனறுவையில் இருந்து மஹவ வரையில் இரட்டை ரயில் பாதைகளை அமைக்கவும், மஹவையில் இருந்து ஓமந்தை வரையிலான ரயில் பாதையை சீரமைக்கவும் தீர்மானிக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

### தரம்-5...

தாக வீதி பாதுகாப்புக்கான தேசிய சபையின் தலைவர் காமினி ஏகநாயக்க தெரிவித்தார்.

வீதி விபத்துகளைக் குறைக்கும் நோக்கில், பாடசாலை மட்டத்திலிருந்து வீதிப் போக்குவரத்து சட்டங்கள் தொடர்பில் தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். அத்துடன், 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாளில் வீதி பாதுகாப்பு தொடர்பான சில கேள்விகளை உள்ளடக்குவது குறித்தும் கல்வி அமைச்சருடனான சந்திப்பின் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

### ஐயா...

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக 60 வருடங்களாக போராட்டம் நடந்து வருகின்றது. இதில் எதிலாவது இவருக்கு பங்கு உண்டா? உதாரணமாக சொல்லப் போனால் அரசியல் போராட்டமாக இருக்கட்டும் இல்லை, ஆயுதப் போராட்டமாக இருக்கட்டும். அப்போது எங்கே போய் இருந்தார் விக்னேஸ்வரன்.

இறுதிக் கட்டப் போரில் கூட எந்தவிதமான நன்மைகளையும் தமிழ் மக்களுக்கு அவர் செய்யவில்லை. ஒரு கடிதம் கூட வெளிநாடுகளுக்கு இவர் எழுதவில்லை. இவருக்கு எப்படி தெரியும் போராட்டம் என்றால் என்ன என்று?

ஐயாவிற்கு தெரிந்தது கோவில் வாசலும், நீதிமன்ற வாசலும்தான் வேறு ஒன்றும் இவருக்குத் தெரியாது. இதில் உண்மை என்னவென்றால் இலங்கையில் தனது மண்ணுக்காக போராடிய போராளிகளுக்கு அதிக பட்ச தண்டனை கொடுத்தது, ஐயா மட்டும் தான் அது போன்று அதிக பேரை சிறையில் தள்ளியதும் ஐயா தான் எனத் தெரிவித்துள்ளார்.

### உள்ளூராட்சி..

வுல்லா இதனைத் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் பிரதேச சபை உறுப்பினர் ஒருவரின் சம்பளம் 5000 ரூபாவில் இருந்து 15 ஆயிரம் ரூபாவாக உயர்த்தப்படவுள்ளது.

பிரதேச சபையின் உப தலைவரின் சம்பளம் 6500 ரூபாவில் இருந்து 20 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது.

அத்துடன் 10 ஆயிரம் ரூபாவாக இருக்கும் பிரதேச சபையின் தலைவரின் சம்பளம் 25 ஆயிரம் ரூபாவாக உயர்த்தப்படவுள்ளது.

அதேவேளை நகர சபை உறுப்பினர் ஒருவர் சம்பளம் 7000 ரூபாவில் இருந்து 20 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட உள்ளது.

நகர சபை பிரதித் தலைவரின் சம்பளம் 10 ஆயிரத்தில் இருந்து 25 ஆயிரம் ரூபாவாகவும் நகர சபையின் தலைவரின் ஊதியம் 15 ஆயிரம் ரூபாவில் இருந்து 30 ஆயிரம் ரூபாவாகவும் உயர்த்தப்பட உள்ளதாக அமைச்சர் அதாவுல்லா மேலும் தெரிவித்துள்ளார்.

# தேசிய தாய், சேய் நல மேன்மைக்காக கோப்பாய் வைத்திய அதிகாரி பணிமனைக்கு விருது



(யாழ்ப்பாணம்)

இலங்கையின் மத்திய சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதாரப் பணியகத்தினால் இலங்கையிலுள்ள சகல சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகள் மத்தியில் தேசிய தாய், சேய் நல மேன்மை விருதுக்கான போட்டி நடாத்தப்பட்டது.

இதில் ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் ஒழுங்கமைப்பும்,செயற்பாடுகளும் மதிப்பிடப்பட்டு சிறந்த சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகள் தெரிவுசெய்யப்பட்டன.

இப் போட்டியில் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தினைப் பெற்று யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தனக்கு பெருமை தேடித்தந்துள்ளது. இப் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தினை மாத்தறை மாவட்டத்தைச் சேர்ந்த தியாகொட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் மூன்றாம் இடத்தினை குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த பொல்காவல சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் பெற்றுக்கொண்டன.

இவர்களுக்கான தேசிய விருது வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.இதில் மத்திய சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன முதன்மை விருந் தினராகக் கலந்து விருதுகளை வழங்கிக் கௌரவித்தார்.

இவ் விழாவில் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியக்கலாநிதி ஜெயசீலன் மற்றும் மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சுரணுகா ஆகியோர் தலைமையில் சென்ற அனைத்து கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் இவ் விருதினைப் பெற்றுக்கொண்டனர்.

வடமாகாணத்தில் முதலாம் இடத்தினை கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும், இரண்டாம் இடத்தினை பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும், மூன்றாம் இடத்தினை சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த நானாட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் பெற்றுக்கொண்டன.

இரண்டாம் இடத்தினைப் பெற்ற பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள் வைத்திய கலாநிதி செந்தூரன் தலைமையிலும், மூன்றாம் இடத்தினைப் பெற்ற சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள் வைத்திய கலாநிதி தயாளன் தலைமையிலும், நானாட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள் வைத்திய கலாநிதி வெற்றிநாதன் தலைமையிலும் தங்களுக்கான விருதுகளைப் பெற்றுக் கொண்டனர்.

இலங்கையிலுள்ள 341 சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளில் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கீழுள்ள கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையானது தேசிய மட்டத்தில் இரண்டாமிடம் பெற்றுக்கொண்டமையானது குறிப்பிடத்தக்கது.

# முக்கொலை சந்தேகநபர் தற்கொலைக்கு முயற்சி

அச்சுவேலிப் பகுதியில் முக்கொலை செய்து விளக்கமறியலில் உள்ள சந்தேகநபர் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ். சிறைச்சாலையில் விளக்கமறியலில் உள்ள இவர் நேற்று முன்தினம் நள்ளிரவு மருந்து வில்லைகளை உட்கொண்டு, தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

தனஞ்சயன் கடந்த மே மாதம் மூன்றாம் திகதி தனது மாமி மற்றும் மைத்துனி, மைத்துனன் ஆகியோரை வாளால் வெட்டி கொலை செய்தார்.

வாள் வெட்டுக்கு இலக்காகிய மனைவி யாழ். போதனா போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற நிலையில், அச்சுவேலிப் பொலிஸாரினால் தனஞ்சயனுக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

மேற்படி நபர் சிறையில் இருந்த போது உடல் நலக்குறைவாக யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற போது வழங்கப்பட்ட மருந்து வில்லைகளை உட்கொண்டு தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

குறித்த நபரை யாழ். சிறைச்சாலை காப்பாளர்கள், சிறைச்சாலை அத்தியட்சகரின் அனுமதியுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

தற்போது சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதுடன், பொலிஸ் பாதுகாப்பு மற்றும் சிறைக் காப்பாளர்களும் பாதுகாப்புக் கடமையில் அமர்த்தப்பட்டுள்ளனர். (25)

# பொது வேட்பாளர் எவராயினும் ஆதரவளிப்பதற்கு தயார்

## சுருதியை மாற்றும் சஜித்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ பேரவையின் தலைவர் கரு ஜயசூரியவோ அல்லது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவோ யார் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக போட்டியிட்டாலும் ஆதரவளிக்கத் தயார் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கட்சி யாரை பொது வேட்பாளராக தீர்மானிக்கின்றதோ அவருக்கு ஆதரவளிக்க வேண்டியது எனது கடமையாகும். ஐக்கிய தேசியக் கட்சியின் அனுமதி மற்றும் ஆசீர்வாதத்துடன் போட்டியிடும் நபருக்கு நான் ஆதரவளிப்பேன்.

தனிப்பட்ட ரீதியில் எவ்வாறான நிலைப்பாடு காணப்பட்டாலும் கட்சி என்ற ரீதியில் எடுக்கப்படும் தீர்மானத்திற்கு [illegible]டுப்பட்டு செயற்படுவேன். ஐக்கிய தேசியக் கட்சியும் ஏனைய கட்சிகளும் இணைந்து தேர்தலில் போட்டியிடுவது பலமாக அமையும் என்பதனை நான் ஏற்றுக் கொள்கின்றேன்.

கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தேர்தலில் போட்டியிடாவிட்டால் தேர்தலில் போட்டியிட நான் தயார். எனினும், கட்சித் தலைமைப் பொறுப்பு எனக்கு வழங்கப்பட வேண்டும் மற்றும் கட்சியின் பூரண ஆதரவும் அவசியம் என சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

# பாம்புக்கடி மருந்தை திருப்பியனுப்ப அறிவுறுத்து

(கொழும்பு)

பாம்பு தீண்டியவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்ற 'என்ரி வெனம் சீரம்' எனும் ஊசி மருந்து உரிய வகையில் பலனளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் குறித்த ஊசி மருந்து தொகையை மீண்டும் மருந்து விநியோக பிரிவுக்கே திருப்பி வழங்குமாறு அனைத்து அரசாங்க வைத்தியசாலைகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் பாம்பு தீண்டியதால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களுக்கு இந்த ஊசி மருந்து மூலம் வழங்கப்பட்ட சிகிச்சை பலனளிக்காத நிலையில் பலர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் குறித்த ஊசி மருந்து தற்போது இரசாயான பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குறைக்கப்பட்ட வெட்டுப்புள்ளி நாளைய தினம் வெளிவரும்

(கொழும்பு)

வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக புலமைப்பரிசில் பெறும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டதற்கேற்ப குறைக்கப்பட்ட வெட்டுப்புள்ளிகளின் விபரங்கள் நாளை வெளியிடப்படும் என கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் மாணவர்களின் எண்ணிக்கை 15,000 இலிருந்து 25,000 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சிங்கள மொழி மூல மாணவர்களின் வெட்டுப்புள்ளி 163 இலிருந்து 157 ஆகவும் தமிழ் மொழி மூல மாணவர்களின் வெட்டுப்புள்ளி 157 இலிருந்து 152 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி மாவட்ட மட்டத்தில் வெட்டுப்புள்ளிகள் இன்னும் குறைவடையும். எனவே, நாளை பரீட்சைகள் திணைக்களம் சகல பாடசாலைகளுக்கும் வெட்டுப்புள்ளிகளை அறிவிக்கவுள்ளதுடன்,



பரீட்சைகள் திணைக்களத்தின் இணையத்தளத்திலும் வெளியிடப்படும் என்றும் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அத்துடன் 500 ரூபா உதவித் தொகை அதிகரிக்கப்பட்டு 1500 ரூபாவாக வழங்கப்படவுள்ளது. எனவே, இதன்படி குறைக்கப்பட்ட வெட்டுப்புள்ளிகள் திங்கட்கிழமை அறிவிக்கப்படுவதுடன், பாடசாலைகளுக்குரிய வெட்டுப்புள்ளிகள் 2015 ஜனவரி 9 ஆம் திகதிக்கு முன்னதாக சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக அறிவிக்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை நடந்து முடிந்த 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் இரண்டு வினாத் தாள்களுக்கு தலா 35 புள்ளிகள் வீதம் 70 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த 2,58,700 மாணவர்களுக்கான சான்றிதழ்களும் தற்போது பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

# 20 இலங்கை மீனவர்கள் பங்களாதேஷில் விடுதலை

பங்களாதேஷில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கை மீனவர்கள் 20 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம் 17 ஆம் திகதி ஆறு படகுகளுடன் பங்களாதேஷ் அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்ட மீனவர்களே விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

பங்களாதேஷில் இருந்து வெளியேறுவதற்கான அனுமதி வழங்கப்பட்டதுடன், இந்த மீனவர்களை நாட்டிற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுப்பதாக அந்த நாட்டிற்கான இலங்கையின் பதில் உயர்ஸ்தானிகர் ஏ.ஜீ. அபேசேகர தெரிவித்தார்.

அந்த நாட்டின் நீதிமன்றத் தீர்ப்புக்கமைய மீனவர்களை நாட்டிற்கு அனுப்பிவைப்பதற்காக பங்களாதேஷ் வெளிவிவகார மற்றும் உள்துறை அமைச்சுகளின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், உரிய சட்ட நடவடிக்கைகளின் பிரகாரம் இலங்கை மீனவர்கள் 20 பேரையும் அடுத்த வாரமளவில் நாட்டிற்கு அனுப்பிவைக்க முடியும் என்றும் பங்களாதேஷுக்கான இலங்கையின் பதில் உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டார்.

# சென்னையில் போலி நாணயத்தாள் வைத்திருந்த இலங்கையர் கைது

சென்னையில் போலி நாணயத்தாள்களுடன் இலங்கையர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இது குறித்து தமிழக ஊடகமான தினகரன் குறிப்பிட்டுள்ளதாவது,

சென்னை சென்ட்ரல் ரயில் நிலைய டிக்கெட் கவுண்டரில் நேற்று முன்தினம் இரவு ஒருவர் ரூ 500 கொடுத்து டில்லிக்கு டிக்கெட் கேட்டார்.

அந்தப் பணம் போலி நாணயத்தாளாக இருந்ததால் வேறு பணம் தரும்படி ரயில்வே ஊழியர் கூறினார். இதனைத் தொடர்ந்து அந்த நபர் மற்றொரு ரூ 500 நாணயத்தாளை எடுத்து கொடுத்துள்ளார். அதுவும் போலி நாணயத்தாளாகவே இருந்துள்ளது.

சந்தேகமடைந்த ரயில்வே ஊழியர் அவரைப் பிடித்து ரயில்வே பொலிஸாரிடம் ஒப்படைத்தார்.

பொலிஸார் நடத்திய விசாரணையில் அவர் பெயர் முபாரக் (வயது - 48), இலங்கையைச் சேர்ந்தவர் என்பது தெரியவந்தது. மேலும், அவரிடம் இருந்து 17,500 ரூபாய் நாணயத்தாள்கள் பறிமுதல் செய்யப்பட்டன. முபாரக்கிடம் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 நவம்பர் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.